# திருமறையில்
# பெண்ணின் பங்கு



# The Role of Woman


பெட்டி பர்ட்டன் சோட்

BETTY BURTON CHOATE



வெளியீடு

**உலக இலக்கிய பதிப்பகம்**

288, தாராபுரம் ரோடு,

காங்கயம் - 638 701. இந்தியா.

# The Role of Woman

Author : BETTY BURTON CHOATE

© Copy Right Reserved

First Printing : 2, October 2003
Copies : 2000
Language : Tamil

Printed at
SAKURA PRINTERS
189-Brough Road,
Erode - 625 012.
✆ : 2254884, 2251464

Published by

**World Literature Publications**
288, Dharapuram Road,
Kangayam - 638 701, India.
✆ : 04257-230030, 98427-30382.



# ஆசிரியர் உரை

பாவமும், அதின் விளைவுகளும் நிறைந்த இவ்வுலகில், தேவனுடைய சிருஷ்டிப்பின் திட்டத்தினுடைய அழகையும் மற்றும் அதின் மேன்மையையும், நாம் கொஞ்சமாகிலும் அறிந்து கொள்வதற்காகத் தான், பெண்ணாக இருந்து, உண்மையாகவே, ஒருவருடைய "மற்ற பாதியாக" இருக்கும் ஒருவரைத் திருமணம் செய்து, பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் பெற்று - அவர்களெல்லாரோடும் சேர்ந்து கிறிஸ்தவர்களாக இருக்கும் இவ்வாழ்க்கை கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய மகத்தான குடும்பத்தில் ஒரு பிள்ளையாக இருக்கும் சிலாக்கியம் பெற்றிருப்பதற்காகவும், அவருடைய வார்த்தைகளைப் பற்றிய என்னுடைய பாடங்களை இப்படி எழுத்து வடிவில் பகிர்ந்து கொள்ளும்படியான ஆசீர்வாதம்

பெற்றமைக்காகவும், தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இப்பாடங்களைப் படிக்கின்ற ஒவ்வொரு வருக்கும் இது ஆசீர்வாதமாக இருக்கும்படி ஜெபிக்கிறேன்.

**பெட்டி பர்ட்டன் சோட்**

**BETTY BURTON CHOATE**

# முன்னுரை

உண்மையாகவே, இந்நூலுக்கு முன்னுரை எழுதுவது எனக்கு மகிழ்ச்சியான ஒன்று. இந்நூலின் ஆசிரியரை நான் அறிந்திருக்கிறபடியால் இப்படிச் சொல்லுகிறேன். இவரின் பின்னணி எனக்குத் தெரியும். பெண்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி மற்றவர்களோடு கலந்துரையாடும் இவரின் ஆர்வமும், திராணியும் எனக்குத் தெரியும். அவர் என்னுடைய மனைவியாய் இருக்கிறபடியால் இதை நான் நன்கு அறிவேன். இருப்பினும் அவர் என் மனைவியாக இருக்கிறபடியால் நான் இப்படிச் சொல்லாமல், இவைகள் உண்மையாய் இருக்கிறபடியால் சொல்லுகிறேன்.

இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், இந்தியாவில் நாங்கள் வெளியிடும் பல இதழ்களில் ஏற்கனவே வெளிவந்தவை. ஒரு பெண்ணின் பங்கு வீட்டிலும், சபையிலும் எப்படி இருக்க வேண்டுமென்று சகோதரி பெட்டி அவர்கள் எழுதியதை பல ஆண்களும், பெண்களும் பாராட்டிச் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பாடங்கள் இந்தியாவிலும், அமெரிக்க ஐக்கிய தேசத்திலும், இன்னும் உலகெங்கிலும் உள்ள பெண்களுக்குத் தேவைப்படுகிறதாக இருக்கிறது. இவைகளைப் புத்தக வடிவில் கொண்டு வருவதால் இன்னும் அநேகர் படித்து பயன்பெற ஜெபிக்கிறோம். பெட்டி அவர்கள்

கணவன், பிள்ளைகள் இன்னும் இப்பொழுது பேரப் பிள்ளைகள் பற்றிய, தனது தனிப்பட்ட அனுபவத்தையும், அதைவிட முக்கியமாக தன் வாழ்க்கையின் அனுபவத்தையும் வைத்துப் பேசுகிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பதெல்லாம் பரிசுத்த வேதாகமத்தின் உபதேசத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இப்பாடங்கள், இளம் பெண்கள், முதிர் வயதுள்ள ஸ்திரீகள், தனி நபர்கள் இன்னும் வகுப்புச் சூழல் போன்றவற்றை மனதில் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வாழ்க்கையிலும், உங்கள் குடும்ப வாழ்க்கையிலும் இதை நீங்கள் நடைமுறைப்படுத்தாவிட்டால் இப்பாடங்கள் உங்களுக்கு எந்த வகையிலும் பிரயோஜனமாயிருக்காது. இவ்விரண்டையும் நீங்கள் செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம். இப்பாடங்கள் பற்றிய, உங்களுடைய கருத்துக்களையும், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் அறிந்து கொள்வதில் பெட்டி அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இதைப் போலவே பல பாடங்கள் புத்தக வடிவில் வெளிவரும் என்று நம்புகிறோம்.


**J.C. CHOATE**
P.O. Box - 27
Winona, MS.
USA






# பதிப்புரை

பெண்களுக்கென்று எத்தனையோ புத்தகங்கள் தமிழில் வெளி வந்திருந்தாலும், "திருமறையில் பெண்ணின் பங்கு என்ன?" என்பது பற்றி வேத வசனங்களின் துணையோடு, இதுவரை ஒரு சிறந்த புத்தகத்தை வெளியிட நீண்ட நாட்களாக நான் நினைத்ததுண்டு. அதற்காக ஜெபித்ததுண்டு. ஜெபத்தைக் கேட்கும் நமது தேவன், இந்தப் புத்தகம், இப்பொழுது உங்கள் கரங்களில் இருக்கும்படியாகச் செய்திருக்கிறார். அவருக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

"**திருமறையில் பெண்ணின் பங்கு**" என்ற இந்நூலை நீங்கள் கவனித்து வாசித்தால், பெண்களாகிய நமக்கு தேவன் என்ன பங்கை கொடுத்திருக்கிறார், நாம் எப்படிச் செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கிறார், என்ன செய்தால் அவர் ஏற்றுக் கொள்ளுவார் என்பது போன்றவற்றை தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். முன்னேற்றம் என்ற பெயரில், சமுதாயம் சீரழிந்து

கொண்டிருப்பதற்குக் காரணம், பெண்களுக்கான தேவ திட்டம் என்ன என்பது சரிவரத் தெரியாததே. இந்நூல், அந்தக் குறையை நீக்கி, உங்களையொரு சிறந்த மனைவியாகவும், தாயாகவும், சபையிலே ஒரு சிறந்த கிறிஸ்தவளாகவும் இருப்பதற்கு எல்லா வகையிலும் உதவி செய்யும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

இந்நூலை தமிழில் கொண்டுவருவதற்கு ஊக்கமும், உதவியும் செய்த **சகோ. J.C. சோட் (J.C. Choate)** அவர்களுக்கும், **சகோதரி. பெட்டி சோட் (Betty Choate)** அவர்களுக்கும் நான் நன்றி சொல்லுகிறேன். இன்னும் இப்பணியில் என்னை உற்சாகமூட்டிய **சகோ. மேரி டீ. பால்மா (Mary Di Palma)** அவர்களுக்கும், என்னை பெலப்படுத்தி, இதை அச்சிடுவதற்கு சகல உதவிகளையும் செய்த என் அன்புக் கணவரும், "திருமறை ஆசான்" மாத இதழின் ஆசிரியருமான **சகோ. EZS. ராஜநாயகம்** அவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேவன் தாமே, உங்களை ஆசீர்வதிப்பாராக!

மீட்பரின் பணியில்,

**ரேச்சல் ராஜநாயகம்**





# பொருளடக்கம்


1. ஒரு பெண் ஆணைவிட தாழ்ந்தவளா? ........ 1

2. சிருஷ்டிப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும் ........ 8

3 .. வீழ்ச்சியிலும் மாறாத தேவனுடைய திட்டம் ........ 18

4. "பிள்ளைப் பேற்றினால் அவள் இரட்சிப்படுவாள்" என்பதன் பொருள் என்ன? ........ 26

5. ஏற்ற துணை என்பதன் பொருள் என்ன? ........ 33

6. ஒரு பெண் மூப்பராகவோ, உதவிக்காரராகவோ இருக்க முடியுமா? ........ 47

7. இருபாலரும் கூடியுள்ள இடத்தில் ஒரு பெண் பிரசங்கிக்க முடியுமா? ........ 59

8. ஒரு பெண் போதிக்க முடியுமா? ........ 69

9. பொதுவான கூடுகையில் ஒரு பெண் பேசும்படி அழைக்கப்பட்டால் ........ 78

10. ஆராதனையில் ஒரு பெண் முக்காடிடுவது அவசியமா?........ 84

11. பொதுவான கூடுகையில் ஒரு பெண் "அந்நிய பாஷையில்" பேச முடியுமா?........ 107

12. தாய்மார்களே, உங்கள் சிறு பிள்ளைகளுக்கு போதித்துப் பயிற்சியளியுங்கள் ........ 126

13. பெண்ணின் பங்கு என்ன? ........ 140

14. கேள்விகளுக்கான பதில்கள்........ 156



# 1



# ஒரு பெண் ஆணைவிட தாழ்ந்தவளா?

பெண் என்பவள், ஆணுக்கு ஒரு வேலைக்காரியைக் காட்டிலும் சற்று மேலானவள் என்று சில மனிதர்கள் சொல்லுகிறார்கள். ஒருவேளை அப்படி நினைக்கும் ஆண், அவளுடைய கணவனாகக் கூட இருக்கலாம். பிள்ளைகளைப் பெறுவதும், வீட்டைப் பாதுகாப்பதும், உணவு தயாரிப்பதுமே அவளுக்கான பணிகள் என்றும் கருதுகின்றனர். இன்னும் சில மதங்கள், ஒரு பெண், பெண்ணென்ற நிலையில் இரட்சிப்படைய முடியாது என்றும், இரட்சிப்படைய வேண்டுமெனில், அவள் ஒரு ஆணாக மறுபிறவி எடுத்தாக வேண்டுமென்றும் கூட போதிக்கிறது.

இப்படிப்பட்ட எண்ணத்தையெல்லாம் ஒதுக்கித் தள்ளும் வகையில், வளர்ந்த நாடுகளில், பெண்கள் விடுதலை இயக்கம் என்ற பெயரில், எல்லா வகையிலும் பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்களே என்று உரக்க அறிவிக்கிறார்கள். சமத்துவத்தை நிலைநாட்டுவது மட்டும் இந்த இயக்கத்தின் நோக்கமல்ல. மேலும், இதன் இறுதியான இலக்கு என்னவெனில், உலகத்தில் உள்ள அனைத்து பெண்களின் அதிகாரமும் சேர்ந்து, ஆண்கள் நிலை நாட்டியுள்ள அதிகாரத்தை முறியடிப்பதே ஆகும். இந்தச் செயலானது

ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே போட்டி மனப்பான்மையை உருவாக்கினதோடு, அதன் விளைவாக பகைமை, கசப்புணர்வு குடும்பங்கள், உடைந்து போதல் போன்றவற்றையும் ஏற்படுத்தியுள்ளது.

**விவாதக் கருத்து**



*ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டு வளர்ந்து நிற்கும் இந்த மனோபாவங்களைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பெண்களைப் பற்றியதான சில ஆண்களின் மனோநிலை, எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துமா? இந்த முரண்பாடுகள் பிரபலமடைந்திருக்கும் உலகத்தின் பகுதிகளில், கலாச்சாரங்களும், உறவுகளும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என எண்ணுகிறீர்களா?*

பெண்களின் பங்கு மற்றும் ஆணோடு அவளுக்கு இருக்கும் உறவு ஆகிய இவைகள் பற்றி, மனிதர்கள் அல்ல, மாறாக **பரலோகத்தின் தேவன் என்ன சொல்லுகிறார்** என்பதைக் கற்றுக் கொள்ளுவதே, நமக்கு இங்கே மிகவும் முக்கியம். ஏனெனில், புற மதத்தவருடைய கண்ணோட்டமோ, அல்லது பெண்கள் விடுதலை இயக்கத்தின் கண்ணோட்டமோ தேவனால் கொடுக்கப்பட்டதல்ல. நாம் வேதாகமத்தின் பக்கங்களைத் திருப்பும்போது, பெண்களுடைய வேலை, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கு மற்றும் அவர்கள் இருக்க வேண்டிய இடம் போன்றவை பற்றி தேவனுடைய நோக்கம் என்ன என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியும்.

பெண்கள் ஆண்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களா? இக்கேள்விக்கு வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய - ஆதியாகமத்தில் - பதிலைக் காணமுடியும். தேவன், முதலில் மிருக ஜீவன்களை உண்டாக்கினார். கடைசியாக அவர் மனிதனை சிருஷ்டித்தார். *“தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ‘ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ, அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை”* (ஆதி. 2:19.20)

“ஏற்ற துணை” என்ற வார்த்தை, ஒரு பெண் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நமக்குச் சொல்லுகிறது : **அவள், ஒரு கூட்டாளி, ஈடு கொடுக்கும் திராணி கொண்ட உதவிக்காரி, வாழ்வின் அருகிலிருந்து அனுபவங்களையும், பொறுப்புகளையும் பகிர்ந்து கொள்ளும் ஒரு பங்காளி.**

பெண்ணை இந்த உலகிற்கு கொண்டு வருவதற்காக, “**...தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர், அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர், தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்**” (ஆதி. 2:21.22)

தேவன் உருவாக்கிய பெண்ணை, ஆதாம் முதலில் பார்த்த பொழுது அவன் இவ்விதம் சொல்லியுள்ளான். *“அப்பொழுது*

*ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள், இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்"* (ஆதி 2:23).

ஆதியாகம புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருப்பதின் முடிவான கருத்து என்னவெனில் *"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்"* (ஆதி 2:24) என்பதே.

இந்த சிருஷ்டிப்பின் உண்மையிலிருந்து நாம் பல காரியங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

❀ **ஆதாம் முதலில் உருவாக்கப்பட்டான். ஆகையால், பெண்ணுக்கு முன்னாக, இவன் முதலாவதாக இருந்தான்.**

❀ **ஆதாம், பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டான். பெண்ணோ, ஆதாமுடைய பக்கவாட்டில் உள்ள எலும்பிலிருந்து உண்டாக்கப்பட்டாள். ஆகையால், அவள் ஆணுடைய ஒரு பகுதியாகவே இருக்கிறாள்.**

❀ **ஒரு பெண், ஆணை ஆட்சி செய்து, ஆட்டிப்படைத்துவிடாதபடி, அவன் தலையிலிருந்தோ அல்லது ஒரு ஆண், பெண்ணை அற்பமாக எண்ணி, அலட்சியப்படுத்திவிடாதபடி காலிலிருந்தோ, அந்த எலும்பானது எடுக்கப்படவில்லை. மாறாக, அவள் அவனுக்கு ஒரு சமமான கூட்டாளியாக இருக்கும்படி, அவனுடைய பக்கவாட்டில் இருந்தே எடுக்கப்பட்டிருக்கிறாள்.**

❀ **சரியாகச் சொல்லப் போனால், தேவன் ஆணையும், பெண்ணையும் ஒரு முழு பாகத்தின் இரண்டு பாதிகளாகப் படைத்துள்ளார். இந்த இரண்டு பாதிகளும் இல்லாமல், மனித இனத்தில் இனப்பெருக்கம் இருக்கமுடியாது. ஆகையால்,**

இரண்டு பாதிகளும் சமமான முக்கியத்துவம் பெறுகிறது. அத்தோடு மனித இனத்தின் தொடர்ச்சிக்கும், இந்த இரண்டு பாதிகளும் அவசியமாய் இருக்கிறது.

❀ வயது வந்த ஆணும், பெண்ணும் திருமணத்தின் மூலம் தங்களை ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுக்கும்போது அவர்கள் புதிய இணைப்பின் மூலம் ஒன்றாக்கப்படவேண்டுமென்ற தேவனுடைய ஆதிமுதலான திட்டத்தின்படி, "ஒரே மாம்ச சரீரத்திலும், உணர்விலும், வாழ்க்கையிலும் இரண்டற இசைந்து முழுமையான ஒன்றின் இரண்டு பாதிகளாகிறார்கள்.

❀ தேவனுடைய திட்டம் என்னவென்றால், இருநபர்களும், அதாவது தனித்தனி நபர்களாக இருக்கும் ஓர் ஆணும், பெண்ணும், ஒரு புதிய குடும்ப அமைப்பை உருவாக்கும் பொருட்டு, தங்கள் குடும்பத்தில் உள்ள மற்றவர்களை விட்டுப் பிரிய வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாகும்.

**விவாதக் கருத்து**



*பெற்றோரை விட்டு தம்பதியர் ஏன் தனியாக வாழவேண்டுமென்பதற்கான காரணங்களை விவாதியுங்கள். இந்த விவாதத்தில், அவர்களின் பொறுப்புகள், மனமுதிர்ச்சி, ஒருவரொடோருவர் ஐக்கியப்படுதல் மற்றும் இந்த இணைப்பினால் பிறந்த குழந்தைகளுடனான உறவு, ஒருவரை ஒருவர் தாங்குதல், "குடும்பம்" என்ற உணர்வு ஆகிய இவைகளனைத்தும் இடம்பெற வேண்டும்.*

ஆகையால், தேவன் ஆதியிலிருந்தே, ஒரு பெண், ஆணோடு சேர்ந்து, அவனுக்கு உதவியாய் இருப்பதின் மூலம், அவனை முழுமையடையச் செய்யும் பொருட்டு, அவர்களுடைய வாழ்வின் காலத்தில், அவர்களுடைய குடும்பம், வேலை மற்றும் தேவனோடும், சக மனிதர்களோடும் அவர்களுக்கு இருக்கும் உறவு போன்றவற்றில், ஆணோடு இசைந்து ஒன்றிணைந்து போவதின் மூலம் அவர்களுடைய வாழ்க்கை முழுமையடையும் பொருட்டான அளவிலேயே, பெண்ணானவள் வடிவமைக்கப்பட்டுள்ளாள். உண்மையில், அவள் அவனுக்கு மிகவும் அத்தியாவசியமானவளாக இருக்கிறாளேயொழிய, எந்த வகையிலும் தாழ்ந்தவளாகவோ, குறைவான தன்மையுடையவளாகவோ, மதிப்பற்றவளாகவோ இல்லை.

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. பெண்களின் சமூக நிலை குறித்து சில ஆண்கள் என்ன நினைக்கிறார்கள்?
2. “பெண்கள் விடுதலை இயக்கங்களின்” நோக்கங்கள் என்ன?
3. பெண்கள் பற்றிய முரண்பட்ட சிந்தனையால் ஏற்பட்ட எதிர்மறை மனோநிலைகள் என்ன?
4. ஆதாமை எதிலிருந்து தேவன் உண்டாக்கினார்?
5. ஏவாளை தேவன் எதிலிருந்து உருவாக்கினார்?
6. ஆதாமின் பக்கவாட்டிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பாகிய ஏவாள், அவனுக்கு ...................... இருக்க வேண்டும் என்பதைக்

குறிக்கிறது. அவள் அவன் மீது .............. .............. கூடாது, அல்லது அவனால் அவள் .............. கூடாது.

7. ஆதாமின் எலும்பிலிருந்து, சதையிலிருந்து - டி.என்.ஏ. (DNA) யிலிருந்து ஏவாள் உருவாக்கப்பட்டாள் என்பதின் பொருள், அவள் ஆதாமின் ஒரு பகுதியாயிருக்கிறாள் என்பது தானே. திருமண உறவில் இணைக்கப்படும், ஆணும், பெண்ணும் தங்கள் பெற்றோரை விட்டு ...... .............. என்ற மாதிரி நிலை நாட்டப்பட வேண்டும்.

8. யார் முதலாவது உருவாக்கப்பட்டது? "முதல் பிறப்பு" என்கிற தகுதி இன்றைக்கு நமது குழந்தைகளிடமும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறதா?

9. மனிதனின் இனவிருத்தி முறையில் ஒரு பகுதி ஆணிடமும், மற்றுமொரு பகுதி பெண்ணிடமும் வைக்கப்பட்டிருக்கிறது. இது அவர்களுடைய உறவு சம்மந்தமாக தேவனுடைய நோக்கம் பற்றி என்ன சொல்லுகிறது? அவர்கள் ஒருவருக்கொருவர் அவசியம் என்பது பற்றியும் என்ன சொல்லுகிறது?

10. ஆதியிலிருந்து கணவன், மனைவியைப் பற்றி தேவனுடைய நோக்கமாகிய "இரு பாதியும் சேர்ந்து முழுமையாகுதல்" என்பது பூரணமாக இருக்கிறதா?

11. பெற்றோரை விட்டுப் பிரிந்து, தனியாக ஒரு குடும்பம் அமைக்க வேண்டுமென்ற தேவ கட்டளையைப் பின்பற்றுவதால் கிடைக்கும் அனுகூலங்கள் என்ன வென்பதை விவரமாக விவாதியுங்கள்.

## 2 சிருஷ்டிப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும்



**கி**றிஸ்தவர்களாகிய நாம், புதிய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் சட்டத்திற்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த மக்களைக் கட்டுப்படுத்திய பழைய பிரமாணத்திலிருந்து, வித்தியாசப்பட்ட புதிய பிரமாணத்தை தேவன் தன் பிள்ளைகளுக்காக ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இருப்பினும், வேதாகம சரித்திர ரீதியாகப் பார்த்தால், மனிதனின் ஆரம்ப காலத்தில் நடந்த காரியங்களால், நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெரியும்.

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில், பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலன் மூலமாக, பெண்களுக் குண்டான சில வேலைகள் மற்றும் அவர்களுடைய நடத்தைகள் பற்றிய போதனைகளை கட்டளையாகக் கொடுத்துள்ளார்.

***சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள் ; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை ; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் ; வேதமும் அப்படியே சொல்லுகிறது*** (I கொரிந்தியர் 14:34) ***உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை ; அவள் அமைதலாயிருக்கவேண்டும்.*** ( I தீமோத்தேயு 2:12 )

**இந்தக் கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் நடந்த சரித்திர ரீதியான உண்மைகளின் விளைவே எனலாம்.**

- **ஆதாம் முன்பு உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். ( I தீமோத்தேயு 2:13 )**

- **ஏவாள் வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்கு உட்பட்டதின் விளைவாக மனுக்குலத்தின் வீழ்ச்சி ஏற்பட்டது. (வசனம் 14)**

I கொரி : 11 : 8, 9, 11, 12 ஆகிய வசனப் பகுதிகளில் " புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள்". "புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவள்" "ஆகிலும் கர்த்தருக்குள், ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை". "ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது".

**விவாதக் கருத்து**

*"புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்", "ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை" என்ற வாக்கியங்கள் உங்களுக்கு எதைச் சொல்லுகிறது? "சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது" என்பதன் பொருள் என்ன? இது தேவ அதிகாரத்தை அல்லது தேவ திட்டத்தைக் குறிக்கிறதா? அல்லது இரண்டையும் குறிக்கிறதா?*



இந்த வசனப் பகுதிகள் நமக்கு எதை வலியுறுத்துகிறதெனில், சிருஷ்டிப்பின் ஒழுங்கானது, தேவனுக்கு, ஆதியில் மாத்திரம் முக்கியமானதாகத் தோன்றாமல், தொடர்ந்து குடும்ப அமைப்புத் திட்டத்திலும் ஒரு முக்கியப் பங்கை ஆற்றவே செய்கிறது. மனிதன், முதலாவது உருவாக்கப்பட்டபடியால், மனுஷியினுடைய தலையாக அவன் கருதப்படுகிறான்.

எந்த ஒரு அமைப்பும் ஒழுங்கில்லாமல் செயல்படமுடியாது. கட்டாயம் அதற்கு ஓர் அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரத்தில் இருப்பவர்கள், தங்களுக்குக் கீழ் இருப்பவர்களின் செயல்களுக்கு பொறுப்பாளிகளாக ஆக்கப் படுவார்கள். ஆதாம் முதலாவது சிருஷ்டிக்கப்பட்டபடியால், தலைமைத்துவப் பொறுப்பு அவனுக்கு கொடுக்கப்பட்டது. "தலைமைத்துவம்" என்பது, அவன் தன் மனைவிக்கு எல்லா வகையிலும் சிறந்த வழிகாட்டியாக இருந்து, அவளை சரியான பாதையில் நடத்தவேண்டியவனாய் இருந்தான். "பொறுப்பு" என்பது, தனக்குக் கொடுக்கப்பட்ட தலைமைத்துவத்தால், சரியான பாதையில் வழி நடத்தியிருக்கிறானா? அல்லது தவறான பாதையில் வழி நடத்தியிருக்கிறானா? என்று தேவனுக்கு பதிலளிக்க வேண்டியது.

வேறு வகையில் பார்த்தால், ஆணுக்கு கொடுக்கப்பட்ட "தலைமைத்துவம்" "பொறுப்பு" இவைகளெல்லாம் பெண்ணின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடாது. உண்மையில், அவள், "ஆணுக்காகச் சிருஷ்டிக்கப்பட்ட வளாயிருந்தாலும், ஒரு குடும்பத்தில், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதிலும், வளர்ப்பதிலும், ஒரு மனைவியாக, ஒரு தாயாக அவளுடைய பங்கில்லாமல், மனித இனத்தின் தொடர்ச்சியே இருக்காது. இந்த வகையில் ஆண், பெண் ஆகிய இருவரும் ஒருவரையொருவர் சார்ந்திருப்பது மாத்திரமல்ல, தேவனுடைய திட்டத்திலும் ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றனர்.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கரத்திலிருந்து வந்தபோது, மனுக்குலம் பாவமில்லாமல் பூரணமாகவே இருந்தார்கள். இருப்பினும் தெரிந்தெடுத்துக் கொள்ளக்கூடிய உரிமையை தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். தேவன் சில சட்டங்களை உருவாக்கி, அவைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்பினார். அந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதாலும், தெரிந்தெடுத்துக் கொள்ளும்

### விவாதக் கருத்து



***எல்லாக் காலத்தையும் அறிந்திருக்கிற தேவன், மனிதன் பாவம் செய்வான் என்பதையும் அறிந்திருந்திருப்பார். அப்படியிருந்தும், தெரிந்தெடுக்கும் உரிமையை, தேவன் ஏன் அவனுக்கு கொடுத்தாரென்று எண்ணுகிறீர்கள்? பாவத்தின் பலனாக ஏன் மரணம் வருகிறது? இங்கே ஓர் உண்மையைக் கவனியுங்கள். **தேவனிடத்தில் மாத்திரமே** ஜீவன் தரும் வல்லமை உண்டு – இருப்பினும் அவருக்கே உரிய பரிசுத்தத் தன்மையால், பாவம் நிறைந்த பாத்திரத்திற்கு, தொடர்ந்து ஜீவனை அருள முடியாது. மனிதன் எப்பொழுது தன்னை பாவத்திற்கு உட்படுத்தினானோ, அப்பொழுதே ஜீவன் தரும் தேவனிடத்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டான். இதன் தவிர்க்க முடியாத முடிவு மரணமே. அப்படியிருக்க, மனிதனிடமிருந்து பாவம் நீக்கப்பட்டு, அதனடிப்படையில் தேவனோடு அவனுடைய ஐக்கியம் மீட்கப்படவும், ஜீவன் தரும் ஆதாரமாகிய அவரோடு மறுபடியும் இணைக்கப்படவும் முடியுமா? வேதத்தை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள் : ரோமர் 6 : 23 ; 8:11; எபி. 9 : 14, 15.*

உரிமையைத் தவறாக பயன்படுத்தியதாலும், அவர்கள் அந்தப் பூரண நிலையிலிருந்து விழுந்து, பாவிகளாக மாறினார்கள். பாவம், ஆவிக்குரிய, சரீர மரணத்தைப் பிறப்பிக்கும் என்று தேவன் ஆதியிலேயே எச்சரித்திருந்தார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, *"நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டார்.* (ஆதி 2:16, 17).

*எனினும் சாத்தான் சர்ப்பத்தின் வடிவில் ஏவாளிடம் வந்து, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்றது.*

*ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்; நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.*

*அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; "நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது".*

*அப்பொழுது ஸ்திரீயானவள், "அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்"* (ஆதி : 3:3–6).

அப்போஸ்தலனாகிய பவுல் I தீமோ.2:14ல் கூறியது போல, ஏவாள் சர்ப்பத்தின் வார்த்தைகளால் வஞ்சிக்கப்பட்டாள்.

சாத்தானின் வார்த்தைகளால் ஊக்கப்படுத்தப்பட்ட அவள், பாவத்தை இந்த உலகத்திற்கு கொண்டு வந்து விட்டாள்.

தேவன், பெண்ணுக்காகத் திட்டமிட்ட, குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும்படியாகவே, அவள் பிரத்தியேகமாக அவரால் வடிவமைக்கப்பட்டாள். தன் கணவனுக்கு வாழ்க்கைப் பங்காளியாகவும் , தன் வீட்டையும், தான் பெற்றெடுத்த பிள்ளைகளையும் பேணிக் காக்கும்படியாகவே அவளை சிருஷ்டித்தார். ( I தீமோ. 5:14, தீத்து : 2: 4,5) தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் இவ்வேலைகளை அவருக்குப் பிரியமாக நிறைவேற்றுவதற்கு அவள் நம்பிக்கைக் குரியவளாகவும், மென்மையானவளாகவும், குடும்ப நலனில் அக்கறையுள்ளவளாகவும் இருப்பது அவசியம். அப்படி குடும்ப நலனில் மாத்திரம் அக்கறை காட்டி செயல்படும் போது, சில நேரங்களில் தவறான முடிவுகள் எடுக்கவும், மற்றவர்களோடு பிரச்சினைக்குள்ளாகவும் வாய்ப்புண்டு.

சி.எஸ். லூயிஸ் என்பவர் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பணிகளை பற்றி "**ஒப்புக்குக் கிறிஸ்தவம்**" (Mere Christianity) என்கிற தன் புத்தகத்தில் அருமையான கருத்தை எழுதியிருக்கிறார்.

"தலைமை என்று ஒன்று இருக்க வேண்டுமானால், ஏன் அது ஆணாக இருக்க வேண்டும்? முதலாவது, ஒரு பெண்ணுக்குத் தான் தலைமையேற்றிருக்க வேண்டுமென்ற விருப்பம் எங்கேயாகிலும் உண்டா? நான் பார்த்த அளவில், தன் வீட்டின் தலையாக இருக்க விரும்பும் ஒரு பெண், அதே நிலைமை அடுத்த வீட்டில் இருப்பதை அறிந்தால் அதை வழக்கமாக விரும்புவதோ, ரசிப்பதோ இல்லை. தன் கணவனை அடக்கி ஆண்டு கொண்டு, பக்கத்து வீட்டு ஆசாமி பாவம் என்பார்கள். அவர்களிடம், நீங்கள் "கெட்டிக்காரத்தனமாக உங்கள் கணவனை அதிகாரம் செய்து காரியமாற்றுகிறீர்கள்" என்று தன்

பாராட்டினால், அய்யய்யோ, நான் அப்படிப்பட்டவளல்ல என்று சொல்லுவார்கள். தாங்கள், புருஷன் மீது அதிகாரம் செலுத்துவது வெளியே தெரியும் போது, தாங்களே அதற்கு வெட்கப்படுகிறபடியாலும், பெண்களுக்கு அடங்கி நடக்கிற ஆண்களை, பெண்களே நிந்திக்கிறபடியாலும், அப்படிச் செய்வது நியாயமற்றதென்று சொல்லாமலே தெரிகிறது.

"ஆனால், இன்னும் ஒரு காரணமும் இருக்கிறது; திருமணமாகாதவனாகிய நான் மனந்திறந்து வெளிப்படையாகப் பேசுகிறேன்; ஏனென்றால், நான் சொல்லப் போகிற காரணத்தை திருமண உறவிற்குள்ளிருந்து பார்த்துப் புரிந்து கொள்வதை விட, அதற்கு வெளியிலிருந்து பார்ப்பது எளிதாக இருக்கும். வெளி உலகத்தோடு ஒரு குடும்பத்திற்கு இருக்கவேண்டிய உறவு பொருத்தவரையில் (இதை வெளியுறவுக் கொள்கை என்றும் அழைக்கலாம்) - அக் குடும்பமானது இவ்வுறவுக்கான இறுதி ஆதாரமாக, ஆணையே சார்ந்திருக்க வேண்டும். ஏனென்றால், பொதுவாக ஒரு ஆண் வெளி உலகத்தாரோடு நியாயமாக நடந்து கொள்வான், அவன் நிச்சயம் அப்படித் தான் நடந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் பிரதானமாக தன் கணவனையும், குழந்தைகளையும் வெளி உலகத்திலிருந்து பாதுகாக்கும்படி, அவர்களுக்காக போராடுகிறவளாக இருக்கிறாள். தன் தேவைகளைக் காட்டிலும், அவள் தன் குடும்பத்தாரின் தேவைகளைச் சந்திக்க முற்படுவது, இயல்பானதாகவும், ஒரு விதத்தில் சரியானதாகவுமே இருக்கிறது. தன் குடும்பத்தாரின் தேவைகளை நிறை வேற்றுவாள் என்ற விஷயத்தில் இவள் சிறந்த நம்பிக்கைகுரியவளாக இருக்கிறாள். அவள், இப்படி தான் குடும்பத்தாருக்கு கொடுக்கும் முக்கியத்துவங்களால், ஒரு மனைவி, நானே இவ்விஷயத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றுவிடாதபடி, பார்த்துக் கொள்வது கணவனுடைய கடமை.

மனைவிக்கு இருக்கும் தீவிரமான குடும்பப் பற்றினால், அவள் மற்றவர்களுக்கு தீமையான காரியம் செய்துவிடாதபடி, அவர்களைப் பாதுகாப்பதில் கணவனே இறுதியான அதிகாரமுடையவனாக இருக்கிறான்.

“இதில் உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால், ஓர் எளிமையான கேள்வியை நான் கேட்கிறேன். அடுத்த வீட்டிலிருக்கும் பிள்ளையை உங்கள் நாய் கடித்து விட்டால், அல்லது அடுத்த வீட்டு நாய் உங்கள் குழந்தையை காயப்படுத்தினால், யாரை நீங்கள் முதலில் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டியதிருக்கும்? அந்த வீட்டு தலைவியையா அல்லது தலைவரையா? நீங்கள் திருமணமான பெண்ணாக இருந்தால், உங்களிடம் நான் இந்தக் கேள்வியை கேட்கிறேன். உங்கள் கணவனைப் பற்றி புகழுவதைப் போலவே, அவனுடைய அணுகுமுறையில், இருக்கும் தவறைக் குறித்து சொல்லும் போது, அவர் தன்னுடைய மற்றும் உங்களுடைய விருப்பங்களுக்காக அயலாரோடு போராடுவதில் நீங்கள் நினைக்கும் அளவுக்கு தீவிரம் காட்டுவதில்லை என்றும், அவர் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகிறவர் என்றும் சொல்லுவீர்கள்? அப்படித்தானே!

ஏவாளிடம் இருந்த இந்த குணாதியசங்களினால், அவள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதை விட, சாத்தானுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவது, தன் குடும்பத்திற்கு சிறந்ததாக இருக்குமென்று எண்ணினாள். ஒரு வேளை இப்படிப்பட்ட நினைப்புத்தான் அவளை சாத்தானுக்கு செவி கொடுக்கும்படி செய்திருக்கும். அவள் இப்படி யோசித்தது தவறானது, மாத்திரமல்ல, அது மனித குலம் அனைத்திற்கும் ஆபத்தை விளைவித்தது.

இந்த பரிதாபமான நிகழ்வில், முதல் முறையாக ஒரு பெண் தன் கணவனிடமிருந்து தலைமைப் பொறுப்பை எடுத்துக்

கொள்வதை நாம் காண்கிறோம். ஓர் ஆணும், முதல் முறையாக அப்படிச் செய்யும்படி அனுமதிப்பதையும் பார்க்கிறோம். ஏவாள், ஆதாமிடம் அந்தக் கனியைக் பறித்துப் புசிப்பது குறித்து ஆலோசனை செய்தாள் என்பதற்கு நமக்கு ஆதாரமில்லை. ஆதாமும், தேவ கட்டளையை நன்றாக அறிந்திருந்தும், (ஆங்கில வேதம், ஆதாம் ஏவாளோடுதான் இருந்தான் என்று சொல்கிறது) (with him), அப்படி அவளோடு அவன் இருந்தும், அவன் அவளை தடைசெய்ததாகச் தெரியவில்லை. ஒரு குடும்பத்திற்கான தலைமைத் துவத்தைப் பற்றிய தேவனுடைய திட்டத்தைத் தலைகீழாக மாற்றியதால், மீறுதலுக்கு உட்பட்டு, மனிதகுலம் வீழ்ந்து போனது என்பது எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது.

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. கிறிஸ்தவர்களாகிய நாம், ............................ எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் .............. ..............த்தின் கீழ் வாழ்கிறோம்.

2. புதிய ஏற்பாட்டில், ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் கிரியைகளும், நடக்கையும் எப்படி இருக்கவேண்டும் என்று கட்டளையி டப்பட்டிருப்பது, எந்த இரண்டு வரலாற்று உண்மைகளின் விளைவாயிருக்கிறது?

3. ஸ்திரீக்காக புருஷன் உருவாக்கப்பட்டானா? அல்லது புருஷனுக்காக ஸ்திரீ உருவாக்கப்பட்டாளா? இருவரும், ஒருவரையொருவர் சாராமல் தனித்தனியே இயங்க முடியுமா?

4. ஆதாமையும், படைப்பையும் மனதிலே கொண்டு பார்க்கும் போது, “தலைமைத்துவம்” மற்றும் “பொறுப்புகள்” என்பவை, என்ன பொருளை, நமக்குத் தருகிறது?

5. மனிதனுக்குத் தலைமை பொறுப்பு கொடுக்கப்பட்டிருப்பதால், ஒரு பெண் முக்கியமற்ற வாழ்க்கையை நடத்தும்படி இழிவுபடுத்தப்பட்டிருக்கிறாளா? ஏன் இல்லை?

6. தெரிந்தெடுக்கும் உரிமை மனிதர்களுக்கு ஏன் கொடுக்கப்பட்டுள்ளது?

7. கீழ்ப்படியாமை என்ற பாவம் எதைக் கொண்டு வரும் என்று தேவன், ஆதாமையும், ஏவாளையும் எச்சரித்தார்?

8. சாத்தான், ஏவாளிடம், விலக்கப்பட்ட கனியைப் புசித்தால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்று உறுதியளித்தான்?

9. ............. நல்லதும் ............. இன்பமும், ............. தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாக இருப்பதாக ஏவாள் கண்டாள்.

10. புருஷனுக்கு உடன் வேலையாளாக இருப்பது, வீட்டில் பிள்ளைகளை கவனிப்பது போன்ற வேலைகளை சரிவர செய்யும்படியாக தேவன் பெண்ணுக்கு கொடுத்திருக்கும் குணாதிசயங்களை விவரி?

11. ஒரு பெண், முதன்முதலாக செய்தது என்ன? அவள் புருஷன் என்ன செய்தான்?

12. தேவன் கொடுத்த தலைமைத்துவ திட்டத்தை இவர்கள் தலைகீழாக மாற்றியதின் விளைவு என்ன?



# 3 வீழ்ச்சியிலும் மாறாத தேவனுடைய திட்டம்

சிருஷ்டிப்பு முதற்கொண்டே, ஆண் தன் குடும்பத்திற்குத் தலைவனாக இருக்க வேண்டுமென்பதில் தேவன் மிகவும் திட்டமாயிருந்தார். இருந்த போதிலும் பெண்ணினால் உண்டான மீறுதலினிமித்தம், புதிய நிபந்தனைகளும், சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டது.

விலக்கப்பட்ட கனியை ஏவாளும், ஆதாமும் புசித்த பிறகு, பாவம் செய்து விட்டதாக உணர்ந்தார்கள். முதல் முறையாக தேவனைக் கண்டு பயந்தார்கள். "பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது அவன்; நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன் என்றான். நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் இருக்கும்

கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி; நீ இப்படிச் செய்தது என்ன என்றார்". (ஆதி. 3:8-13) இந்த துக்கமான சோதனை நிகழ்ச்சியில், ஏவாள் தன் குடும்பத்திற்கான தலைமையை, தான் எடுத்துக் கொண்டாள். அவள் அவ்வாறு செய்வதற்கு ஆதாம் அனுமதித்து விட்டான். ஆனால் தேவன் அந்த இடத்திற்கு வந்தபோது, அவர்கள் ஏற்படுத்திய அந்த தலைமை மாற்றத்திற்கு உடன்பட்டாரா? இல்லை. தேவன் ஆதாமைக் கூப்பிட்டார். பாவம் நிகழ்ந்தது பற்றி தேவனுக்குத் தெரியுமா? மேலும் யார் இந்த மீறுதல் செயலைச் செய்ய வழிகாட்டியது என்பதும் தேவனுக்குத் தெரியுமா? தேவன் எல்லாவற்றையும் அறிந்தே இருந்தார். ஆனால், ஆதாமை குடும்பத்தின் தலைவனாக அதின் நேர்த்தியான தலைமைப் பொறுப்புடன் உண்டாக்கியிருந்தபடியால், நடந்த காரியத்திற்கு பதில் அளிக்கும்படி தேவன் அவனையே அழைத்தார்.

இச்சம்பவத்திலிருந்து, நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வது அவசியமாகிறது. ***மனிதன் தன்னுடைய பங்கிலே காரியங்களை எப்படிச் செய்தாலும், தேவன் தாம் ஏற்படுத்திய ஒரு திட்டத்தைத் தானே மாற்றியதில்லை, மாற்றவுமாட்டார்.*** அவர்கள் செய்த பாவத்தின் விளைவாக, புதிய கட்டளைகளும், தண்டனைகளும் சர்ப்பத்திடமும், குறிப்பாக பெண்ணிடமும், ஆதாமிடமும் பேசப்பட்டது. விசேஷமாக, பெண்ணிடம் பேசப்பட்டதை நாம் அறிய ஆவலாயிருப்போம். அதென்னவென்றால் "அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்: உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்" (ஆதி 3:16).

பாவத்தின் விளைவாக துக்கமும், வேதனையும் இந்த உலகில் கொண்டுவரப்பட்டது. மானிட இனத்தில் சரிபாதியாக

## விவாதக் கருத்து



*மரணம், சரீரப்பிரகாரமானதாக இருந்தாலும், ஆவிக்குரியதாயிருந்தாலும், அது பாவத்தின் முடிவான விளைவாயிருக்கிறது. அப்படியானால், ஏன், ஏவாளின் மீது வலியும், வேதனையும் சுமத்தப்படவேண்டும்? மரணத்தோடு இவ்விரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டா? உண்மையில் இந்த மூன்றுமே முழுமையான ஒன்றின் சிறு பகுதிகளாக இல்லையா?*

பெண் என்பவள் அதிக உணர்ச்சி உள்ளவளாகவும், மனவெழுச்சியுள்ளவளாகவும் இருப்பதால் இந்த சம்பவத்தில் அதிக சுமையை ஏற்க வேண்டியதாயிற்று. அவளுடைய கர்ப்பத்தின் வேதனை அதிகரிக்கப்பட்டது. பிள்ளை பெறும்போதும், வேதனையை உண்டாக்கிவிட்டார். அத்தோடு மட்டுமல்லாமல், தன் கணவனுடைய அதிகாரத்திற்கு உட்படவும் தள்ளப்படுகிறாள். அவள் ஆசை அவள் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் அவளை ஆண்டு கொள்ளுவான்.

மேலும், ஒரு கிறிஸ்தவ கணவனுக்கும், மனைவிக்கும் வேண்டிய ஆலோசனைகளை I பேதுரு 3:1-7 வசனங்களில் வாசிக்கிறோம். “அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர் களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் அவள்

கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்".

தேவனுடைய அதிகாரம் நிறைந்த கட்டளைகள் பற்றியும், குடும்பத்திற்கு தலையாக தேவன் புருஷரை ஏற்படுத்தியது பற்றியும், முழுக்குடும்பத்திற்கும் வழிகாட்டியாக ஆண் இருப்பதுபற்றியும் இந்த வசனங்கள் நமக்கு விளக்கமாகச் சொல்லுகிறது. கிறிஸ்துவப் பெண்கள் தங்கள் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டுமென்று கட்டளையாகக் கூறப்படுகிறது. புருஷர்கள் தங்கள் மனைவிகளை அன்போடும், புரிந்து கொள்ளுதலோடும் நடத்திச் செல்ல வேண்டும். ஆனால், ஒருவேளை மனைவி தன் கணவனைவிட அதிக புத்திசாலியாக இருந்தால் அல்லது

அவனைவிட சிறந்த வழிநடத்தும் தகுதிபடைத்தவளாய் இருந்தால் அவள் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளலாமா? இல்லை. தேவன் தாமே ஏற்படுத்திய அந்த ஒழுங்குக்கு மாறாகச் செயல்பட எந்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

தேவன் விதித்திருக்கிற, இந்த அதிகாரமுள்ள கட்டளையை உணர்ந்து ஆண்களும், பெண்களும் தங்களுடைய துணையை

### விவாதக் கருத்து

*திருமணத்தில் இணைக்கப்பட்டிருக்கும், முக்கியமான உறவுகள் மற்றும் பொறுப்புகள் பற்றி – நம்முடைய சொந்த விருப்பங்களையல்ல, தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் பிரமாணங்களை நமது பிள்ளைகளுக்கு ஒழுங்காக போதிப்பது, குமாரரையும், குமாரத்திகளையும் வளர்க்கும் பொறுப்புகளைப் பெற்ற பெற்றோருக்கு எத்தனை முக்கியமானது? குழந்தைப் பருவத்திலிருந்து, திருமண வயதுவரை தேவனிடத்திலிருந்து நாம் பெற்ற கட்டளைகளை மிகுந்த சிரத்தையோடு போதித்தால், தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பங்களில் நமது பிள்ளைகளுக்கு இது உதவியாக இருக்குமல்லவா? அப்படி நாம் செய்யும் போது, திருமணம் என்பது இரு மனிதருக்கும், தேவனுக்கும் இடையேயான ஓர் ஒப்பந்தமென்பதால், அது தேவனுடைய ஒழுங்கு முறையின்படிதான் நடக்க வேண்டுமென்று அறிந்து, நம்முடைய பிள்ளைகள் இன்னும் அதிக ஜாக்கிரதையாக இருப்பார்கள் அன்றோ?*



தேர்ந்தெடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஒரு சாமர்த்தியமான பெண், பலவீனமான ஆணைத் திருமணம் செய்ய நேரிடும்போது அவளுடைய பொறுப்பெல்லாம், ஓர் "உதவிக்காரியாய்", "ஏற்ற துணையாய்" அவன் தலைமை யேற்றுச் செல்லும் விதத்தில் அவனுக்கு தைரிய மூட்டுபவளாக இருக்க வேண்டுமேயொழிய, அவனுக்கு மேலாக அதிகாரம் செலுத்தி அவனை இன்னும் பலவீனப்படுத்திவிடக் கூடாது.

இந்த வசனங்களில் காணும் அதிகாரங்கள் வெறுமனே கணவனும் மனைவியும் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் மட்டுமல்ல. கீழ்வரும் சில காரியங்களையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

**❀ ஒரு பெண்ணின் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியும், தேவனுடைய பார்வையிலே மிகவும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது.**

**❀ . ஜெபங்களுக்குத் தடை ஏற்படாதபடி இருக்க, கணவனும், மனைவியும் நியாயமான உறவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.**

**❀ கணவன், மனைவி ஆகிய இருவரின் உறவுகள், தங்கள் நியாயத்தின்படியும், கருத்தின்படியும் மாத்திரம் தங்களுக்குள் இருந்துவிடக்கூடாது. மாறாக, அவர்கள் இருவருக்குள்ளும் இருக்கும் உறவு, தேவனுக்குக் கீழ்ப்படிதல் மூலமாக, அவர்களுக்குள் இருக்க வேண்டும்.**

**❀ எந்த ஒரு காரியத்திலும், தேவன் நமக்குக் கொடுத்திருப்பவைகளைத் தள்ளிவிட்டு, அவருக்கு பிரியமாய் நாம் இருக்க முடியாது.**

தேவனால் ஏற்படுத்தப்பட்ட இந்த அதிகாரத்தின் ஒழுங்குபற்றி முடிவாகவும், தெளிவாகவும் I கொரிந்தியர் 11:3 - ம் வசனத்தில் பவுலால் கூறப்பட்டுள்ளது "*ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக் கிறாரென்றும், ஸ்திரீக்குப்*

*புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்*".

**வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்**

1. இயற்கையின் ஒழுங்கு முறையின்படி, சிருஷ்டிப்பிலிருந்து தேவன் எதை மனதிலே கொண்டிருந்தார்?

2. பெண்ணால் மீறுதலுக்கு நடத்தப்பட்டபோது, என்ன செய்யப்பட்டது?

3. ஆதாமும், ஏவாளும் செய்த பாவத்திற்கு, தேவன் யாரை பொறுப்பாக்கி, முதலில் விளக்கம் கேட்டார்? ஏன்?

4. தேவனுடைய முறைமையை மீறின இந்த முதல் சம்பவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ....... ....... ....... ....... ....... ....... ....... ....... ........ ....... என்பது.

5. வேத வசனங்களின்படி பாவம் யாரால் உலகில் பிரவேசித்தது?

6. தேவன், ஏவாளிடம் கூறும்போது, எந்த இரண்டு காரியங்களைப் பெருகப் பண்ணுவேன் என்று சொன்னார்?

7. தேவன், ஏவாளுக்கும் அவள் புருஷனாகிய ஆதாமுக்கும் இருக்கும் உறவைப் பற்றி சொன்ன இரு காரியங்கள் யாவை?

8. ஏவாளுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையின், மற்றொரு பகுதியாக, அவள் பிள்ளைகளை ...................................... பெறவேண்டும் என்று எச்சரிக்கப்பட்டாள்.

9. ஆதியாகமத்தில் ஆரம்பமாகி விவரிக்கப்பட்டுள்ள கணவன், மனைவி உறவு, கிறிஸ்துவின் காலத்திலும் தொடர்கிறதா?

10. தேவபக்தியுள்ள பெண்ணைப் பற்றி பேதுரு எப்படி விவரித்துள்ளார்?

11. கிறிஸ்தவ ஆண்கள் தங்கள் மனைவிமார்களை எப்படி வழி நடத்த வேண்டும்?

12. ஒரு மனைவி தன் கணவனைக் காட்டிலும் சிறப்பாக வழி நடத்தக்கூடியவளாக இருக்கும் பட்சத்தில், அவள் அப்படிச் செய்யலாமா?

13. I கொரி.11:3ல் பவுல் எப்படிப்பட்ட அதிகாரப் பட்டியலை நமக்குத் தந்துள்ளார்?



# 4



# "பிள்ளைப் பேற்றினால் அவள் இரட்சிக்கப்படுவாள்" என்பதன் பொருள் என்ன?

"**அ**ப்படியிருந்தும் தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" (I தீமோ:2:15)

மேலே கூறப்பட்டுள்ள வசனப் பகுதியை நாம் பார்க்கும் போது, ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில், ஏதேன் தோட்டத்தில் நடந்த ஆதாம், ஏவாள் இவர்களின் மீறுதலுக்கு நாம் அழைத்துச் செல்லப்படுகிறோம். கீழ்ப்படியாமையினால் ஏவாள் செய்த பாவத்திற்காக தேவன் அவளுக்கு தண்டனையைக்

## விவாதக் கருத்து



*'**பி**ள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" என்பதற்கான பொருளை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்? பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் என்ற வாக்குத்தத்தத்திற்குள் விசுவாசம், அன்பு, பரிசுத்தம் – இச்சையடக்கம் போன்றவைகள் எப்படி உட்படுத்தப் பட்டிருக்கும்?*

கொடுத்தபோது, "நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையைப் பெருகப் பண்ணுவேன் என்றும், நீ வேதனையோடே பிள்ளை பெறுவாய் என்றும் கூறினார், அத்தோடு, "உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன், "*அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்*" என்று சர்ப்பத்துக்கு சாபமாகவும் கூறினார். (ஆதி.3:15) இந்த வசனம் ஒரு ஸ்திரீயின் மூலமாக மேசியா பிறப்பார் என்பதற்கு முதல் தீர்க்கதரிசனமாகும்.

**❀ இப்படியாக எந்தப் பெண்ணின் கீழ்ப்படியாமையினாலே பாவமும், மரணமும் உலகத்திற்குள் வந்ததோ, அதே பெண் இனத்தைச் சேர்ந்த கன்னி மரியாளிடத்தில் பிறந்த "இயேசு"வின் மூலமாக, பாவத்திற்கு விமோச்சனமும் வர வேண்டியதாயிற்று. இந்த வகையாக, கீழ்ப்படிதலுள்ள மனுக்குலத்துக்கு இரட்சிப்பு என்பது பிள்ளைப் பேற்றின் வழியாக வர வேண்டியதாயிற்று.**

ஆனால், இத்துடன், "பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப் படுவாள்" என்பதற்கு, வேறு இரண்டு அர்த்தங்களும் உண்டு.

**தேவன், ஆதாமுக்கும், அதைத் தொடர்ந்து ஆண் இனம் முழுமைக்கும் குடும்பத்தின் சரீரத் தேவைகளைச் சந்திக்கும் பொறுப்பை கொடுத்தபோது, பெண்ணுக்கு குடும்பத்தையும், பிள்ளைகளையும் பராமரிக்கும் பொறுப்பைக் கொடுத்தார். I தீமோ. 5:14ல் பார்க்கும் போது, பெண்கள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும்" அறிவுறுத்தப் படுகிறார்கள். மேலும், தீத்து 2-ம் அதிகாரம் 4,5 ஆகிய வசனப் பகுதிகளில், முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லும் வகையில், "பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள் ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் ❀**

புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய்... இருக்க வேண்டுமென்று கூறுகிறார்.

## விவாதக் கருத்து

*"கணவன் மீது அன்பு செலுத்து", "பிள்ளைகள் மீது அன்பு கொள்" என்று ஒரு பெண்ணுக்கு மற்றொருவர் போதிப்பது அவசியமில்லாதது போல தோன்றும். ஆனால், உங்கள் சொந்த வாழ்க்கையில் இப்படிப்பட்ட போதனை தேவை என்று நீங்கள் உணர்ந்ததுண்டா? பணிக்குச் செல்லும் மனைவிகள், தாய்மார்கள், மற்றும் உறவு முறிந்து போன கணவன், மனைவி ஆகியோர் இருக்கும் இந்த கால கட்டத்தில், இயற்கையான ஐக்கியம் ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் அவ்வளவாக இல்லையோ?*



*"அன்பு" என்பது உணர்வு மாத்திரமோ அல்லது ஒரு தாய் தன் குடும்பத்தை கவனிக்கும் விதம், சுய தியாக மனப்பான்மை, தன் தேவைக்கு முன்பாக தன் குடும்பத்தின் தேவையை முன்னிறுத்துவது போன்றவைகளும் இதில் உள்ளடங்குமோ?*

தேவனால் கொடுக்கப்பட்ட இந்த வேலைகளை அவருக்குப் பிரியமுண்டாக்கும் வகையில் நிறைவேற்றும் பெண்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற முடியும். குடும்பத்தையும், பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளும்படியான தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிவதென்பது ஒவ்வொரு பெண்ணாலும் கட்டாயம் செய்து முடிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில், பெண்ணுக்கான மீட்பின் திட்டத்தில் இதுவும் ஒரு பங்காகும். இப்படியாக

ஸ்திரீயானவள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.

**❀ "பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" என்பதற்கு வேறு ஒரு அர்த்தத்தையும் நாம் சொல்ல முடியும். குழந்தைகளைப் பராமரித்து வளர்க்கும் காலங்களில், அவளுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அதிகமான தடைகளும், இடையூறுகளும் பிள்ளைகளாலேயே சந்திக்க நேரிடும். தன் குழந்தைகளை ஆராதனைக்கு அழைத்துச் செல்லும் ஒரு பெண், தொடர்ந்து அந்தக் குழந்தைகள் மீது கவனம் வைத்து அவர்களுடைய அழுகை, துள்ளல், நெளிதல், சத்தம், பசியாற்றுதல் போன்ற காரியங்களைக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. அங்கே அவளால் தடை இல்லாமல் ஆராதிக்க முடிவதில்லை. ஒருவேளை அவள் சபை கூடிவருதலை விட்டு விடாமல், பல ஆண்டுகளாக ஆராதனையிலே ஒழுங்காக பங்கு பெற்று வந்தாலும், குழந்தைகள் நிமித்தமாக தேவனை ஆராதிப்பதற்கேற்ற ஒரு சரியான மனநிலையைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.**

குழந்தைகள் மற்றும் சிறார்களை வளர்ப்பதில் உள்ள பிரச்சினைகள் எப்படிப்பட்டவைகளாக இருக்கும் என்பது தேவனுக்கு முன்பே தெரியாததல்ல. ஏனெனில், குழந்தைகளின் அக்காரியங்களை கவனிக்கும் படியான சிறப்புப் பண்புகளாகிய பொறுமை, இளகின இருதயம், குறிப்பால் உணர்ந்து கொள்ளும் தன்மை, எந்நிலையிலும் காட்டப்படும் அன்பு ஆகியவைகள் படைப்பிலேயே பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது பெண்களுக்கே உண்டான பொதுவான பண்புகள். ஆண்களுக்கு இந்த அரிய பண்புகள் கொடுக்கப்படவில்லை. ஒரு தாய், தன் தாய்மைக்கான காரியங்களை அன்றாடம் செய்யும்பொழுது, தேவன் தனக்கு கொடுத்துள்ள திறமைகளில் வளர்ந்து, பிள்ளைகளை கவனிக்கும் காரியத்தில் அன்பிலும்,

பொறுமையிலும், ஞானத்திலும் மிகவும் பெருக முடியும். ஆகவே ஒரு பெண், கொடுத்துள்ள வேலையைச் சரியாகச் செய்வதின் மூலம் அவள் தன் வாழ்க்கையை வளமாக்குவதோடல்லாமல் தன் பக்தி நிலையையும் விருத்தியடையச் செய்ய முடியும்.

**விவாதக் கருத்து**



*பிள்ளைகள், மனதிலும், குணத்திலும், தங்கள் தாய்மார்களால் எப்படி உருவாக்கப் படுகிறார்கள்? தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளால், மனதிலும், குணத்திலும் எப்படி உருவாகிறார்கள்? இப்படி ஒன்றாக இணைக்கப்பட்ட பந்தம் பிள்ளைகளையும், தாயையும் இரட்சிப்ப தற்கு தேவன் ஏற்படுத்திய திட்டத்தின் ஒரு பகுதிதானோ?*

ஆனால், பிரச்சினையைத் தரும் அந்த நாட்களிலெல்லாம் அவள் உண்மையுள்ளவளாக இருக்க வேண்டும். தொந்திரவில்லாமல் தேவனை ஆராதிப்பதற்கு சமயம் கிடைக்காவிட்டாலும், வசனங்களைப்படித்து தன் ஆவிக்குரிய பசியைத் தீர்ப்பதற்குத் தேவையான நேரம் கிடைக்கா விட்டாலும், தன் ஆவிக்குரிய எண்ணங்களையும், கருத்துக்களையும், பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கு முடியாவிட்டாலும், அவள் தேவனுடனான தன்னுடைய தனிப்பட்ட உறவை சரியாக வைத்துக் கொள்வதற்கு கவனமுள்ளவளாக இருக்க வேண்டும். அவள், தாய்மைக்குண்டான சவாலை ஏற்றுக் கொள்ளக் கூடியவளாக இருக்க வேண்டியிருப்பதால், கீழ் வரும் காரியங்களை அவள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தேவன் மீது ஆழமான விசுவாசம்**

- **அவருடைய விசாரிப்பைச் சார்ந்திருப்பது**
- **அவர் மீது அளவுகடந்த அன்பு கொள்வது**
- **பரிசுத்தமாய் வாழ்வது**

**இவைகளை ஏற்று அவள் வாழும்போது, சுயக் கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்கான ஒழுங்கை பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கும்.**

இவைகளையெல்லாம் ஏன் இவள் கடைப்பிடிக்க வேண்டும்? இவ்வளவு சவால்களுக்கு மத்தியிலும் தேவனோடு தனக்கிருக்கும் உறவை தன் வாழ்க்கையின் மிக முக்கியமான பங்காக ஏற்று வாழ்ந்து காட்டாத பட்சத்தில், தன் பிள்ளைகளுக்கு உயிரோட்டமுள்ள விசுவாசத்தை அவளால் கொடுக்க முடியாது. ஆனால், தன்னுடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய வழிகாட்டுதலைக் கொடுக்கும்போது, அவள் தன்னுடைய வளர்ச்சியில் பாடுபட நேர்ந்தாலும் கூட, அது அவள் ஒரு முழுமையான ஆவிக்குரிய தன்மையைப் பெற்றுக் கொள்ள உதவும். எப்படியெனில், அவள் தன்னுடைய வாழ்க்கையிலும், விசுவாசத்திலும், தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலிலும் வரும் எல்லாவிதமான சவால்களையும் சந்தித்து வெற்றி பெற முடியும்.

"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்".

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. இந்தப் பாடத்தில் நாம் படித்த வசனம் நம்மை எந்த நிகழ்வுக்கு எடுத்துச் செல்கிறது?

2. ஏவாளின் பாவத்திற்கு தண்டனையாக சிலவற்றைக் கூறிய தேவன், கூடவே ஒரு வாக்குத்தத்தத்தையும் கொடுத்தார். அது என்ன?

3. இரட்சகராகிய மேசியா எப்படிப் பிறப்பார்?

4. இந்த வழியில், பிள்ளைப் பேறு என்பது ............ ............ ............ ............ என்பதாகும்.

5. I தீமோ.5:14 பெண்கள் "............, ............ ............, ............ ............ ............ இருக்கவேண்டுமென்று கூறுகிறது.

6. முதிர்வயதுள்ள ஸ்திரீகள் என்ன செய்யும்படி சொல்லப்பட்டுள்ளார்கள்?

7. குடும்பத்தைக் கவனிப்பது, பிள்ளைகளை வளர்ப்பது என்று தேவன் கொடுத்திருக்கும் கட்டளைகள் நாம் தெரிந்து கொள்ளக் கூடிய ஒன்றல்ல; அது ............ ............ ............த்தின் ஒரு பகுதியாகும்.

8. குழந்தைகள் சிறுவர்களாக, குறும்பு செய்பவர்களாக இருக்கும் போது, ஒரு தாய் ஆராதிப்பதிலே உண்மையுள்ளவளாக இருப்பாள் என்றால் அது அவளுக்கு ஆவிக்குரிய வளர்ச்சியில் எப்படி உதவியாக இருக்கும்?

9. ஒரு நல்ல தாயாக இருப்பதற்கு தேவையான சில குணாதிசயங்கள் எவை?

10. ஒரு தாய், "தாயாக இருந்து பிள்ளைகளுக்குச் செய்யும் பணிகள்" இப்படிப்பட்ட குணத்திலே வளர்வதற்கு எப்படி உதவி செய்யும்?

11. "பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" என்பதற்கான முக்கிய வார்த்தை எது?

12. ஒரு தாய் இப்படிப்பட்ட குணங்களில் வளர்ந்து பெலப்படுவது ஏன் அவ்வளவு முக்கியமான ஒன்றாக இருக்கிறது?

# 5 ஏற்ற துணை என்பதன் பொருள் என்ன?



எல்லா மிருக வகைகளும் சிருஷ்டிக்கப்பட்டபின்பு, ஆதாம் ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும் பெயர் வைத்தான். ஆனால், **ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.** (ஆதி 2:20) தேவன், தனக்கும், தன்னுடைய சிருஷ்டிப்பாகிய

## விவாதக் கருத்து

*ஒரு பெண், ஆணுக்கு "ஏற்ற துணை" அல்லது "உதவி செய்பவளாக" இருக்க வேண்டும் என்பதன் பொருள் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*



*ஆதாமுக்கு மிருகங்கள் காண்பிக்கப் பட்டு, அவைகளுக்கு அவன் பெயரிட்ட போது, ஒவ்வொரு வகையும் ஆணும், பெண்ணுமாக இருந்தது அவனுக்கு வெளிப்படையாகத் தெரிந்திருக்குமோ? ஆதாம் தன்னுடைய தனிமையையும், தனக்குத் துணை தேவை என்பதையும் உணரும் வரை, ஏவாளை சிருஷ்டிப்பதற்கு தேவன் ஏன் காத்திருந்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

மனிதனுக்குமிடையே அன்பும், ஐக்கியமும் இருக்கும் படியாக, அவனைத் தமது சொந்த சாயலாகவும், அறிவும், உணர்வும், அழியாத ஆவியுடையவனாகவும் சிருஷ்டித்தார். இங்கே, மனிதனாகிய ஆதாம், தேவனால் உண்டாக்கப்பட்ட இந்த அதிசய உலகத்தில் உள்ளவைகளைப் பற்றி, தன்னுடையவைகளைப் பகிர்ந்து கொள்ள, தன்னைப்போல் ஒரு சிருஷ்டி இல்லையே என்று உணர்ந்தான்.

சரியாக கவனித்தால், திட்டமிடப்பட்ட மனித படைப்பில், ஆதாம் வெறும் பாதியாக இருந்தான். அவன் தானாகவே வாழ்ந்து செயல்பட்டுக் கொண்டு, தன்னை ஒரு பூரணமானவனாக எண்ணிக் கொண்டிருந்தாலும், தேவன் அவன் ஒரு முழுமையானவனாக இருக்க வேண்டுமானால் அதாவது பாலியல் ரீதியாகவும், சரீரப்பிரகாரமாகவும், மனதளவிலும், உணர்வுப் பூர்வமாகவும், சமுதாய அளவிலும், ஆவிக்குரிய ரீதியிலும், ஆதாமுக்கு கட்டாயம் அவனைப்போல் ஓர் உயிர் தேவையென்று அறிந்திருந்தார். ஆகவே, ஆதாம் தன் தனிமையை உணர்ந்தபோது தேவன் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரவழைத்து, அவனுடைய பக்கவாட்டிலிருந்து, ஒரு விலா எலும்பை எடுத்தார். விலாவிலிருந்து - மண்ணிலிருந்து அல்ல - தேவன் பெண்ணை உண்டு பண்ணி மனிதனிடத்திற்கு கொண்டு வந்தார். ஆதாம் கூறுகிறான். “அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்” (ஆதி. 2:23)

இன்றைய உலகில் திருமணமே ஆகாத ஆண்களையும், தனியாகவே வாழ விரும்பும் பெண்களையும் நாம் பார்க்கிறோம். சிலர், தேவனுக்கென்று சேவை செய்வதற்கு தங்களை ஒப்புக்கொடுத்து விடுகிறார்கள். இதன்மூலம், மனித

உறவுகளால் ஏற்படும் அன்பின் இடத்தை, தேவன் மீதான அன்பு எடுத்துக் கொள்கிறது.

மற்ற காரியங்களைக் கவனித்தால், பலவிதமான சூழ்நிலைகளால் திருமணங்கள் தடைசெய்யப்படுகிறது. பலதரப்பட்ட மனநிலைகள் இருக்கிற காரணத்தினால் இவைகள் ஒருவேளை ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால், பெரும்பாலான ஆண்களும், பெண்களும் ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடிய இயல்பான தேவைகளைச் சந்திக்கும்படி திருமணம் செய்து கொள்ளவும், குடும்பம் நடத்தவும் விரும்புகிறார்கள். குடும்பத்தை உருவாக்குவதில் உதவியாக இருக்கக் கூடிய மனைவியின் அன்பும், கவனிப்பும் ஆண்களுக்குத் தேவைப்படுகிறது. பெண்களுக்கு கணவனின் பாதுகாப்பும், ஆதரவும் தேவைப்படுகிறது. தங்களுக்குப் பின் வாழ இருக்கும் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் சந்ததிப் பெருக்கம் தேவையென்பது இருவருக்குள்ளும் இயல்பாகவே இருக்கிறது. இந்த உணர்வுப் பூர்வமான தேவைகளை, தேவனே மனித குலத்திற்க்கு கொடுத்திருக்கிறார். ஆகையால், இவைகளை அவ்வளவு எளிதில் நாம் ஒதுக்க முடியாது.

மனிதனுடைய சாயல் மற்றும் தன்மைகளையும், மிருகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஒன்றுக்கொன்று பொருத்தமற்றதாகத் தெரியும். ஆனால், எந்தவொரு பெண்ணும், எந்த ஒரு ஆணுக்கும் ஏற்றவளாக இருக்கிறாள். இருப்பினும், மனித இனத்தில், குறிப்பிட்ட ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பொருந்தாத வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் "ஒரே அலைவரிசையில்" இல்லை. சில நேரங்களில் மெத்த படித்த ஒரு ஆண், படிப்பறிவில்லாத ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். அவளுக்கு இந்த உலகில், தானும் வாழ வேண்டும் என்பதற்கு மேல் ஒன்றும் தெரியாது. சில நேரங்களில் சாமர்த்தியமும், அறிவும் மிகுந்த பெண்கள், குறுகிய

புத்தியுடைய ஆண்களைத் திருமணம் செய்து, தங்கள் வாழ்வில் பெரிய தவறை செய்து விடுகிறார்கள். வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுக்கும் போது, இரண்டு பேருடைய சகல காரியங்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பது எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள். தேவன் திட்டமிட்டபடி, ஆணும், பெண்ணும், மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒருவருக்கொருவர் "ஏற்றதுணையாக" இருப்பது எவ்வளவு அவசியம் என்றும் பாருங்கள்.

எப்படி ஒரு பெண் துணையாக இருக்க முடியும்? ஆரம்பத்திலேயே பார்த்தபடி, அவள்தான், கணவனுக்கு வாழ்நாள் முழுவதும் துணையாக இருக்கிறவள். ஆதியிலிருந்தே, விவாகரத்து என்ற ஒன்று ஏற்பட தேவன் விரும்பவேயில்லை. "வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்" என்று தேவன் திட்டமிட்டிருந்தார். இயேசுகிறிஸ்து இதை மீண்டும் வலியுறுத்தும் வண்ணமாகவே," அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக; ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்" (மத் 19:4-6).

வாழ்க்கைத் துணையாக இருப்பதினால், தங்களைப் பற்றிய அறிவிலும் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதிலும் வளருவார்கள். இவர்கள் இருவராக இருப்பதால், தனிமையில் இருப்பதில்லை. இது மனித குல மகிழ்ச்சிக்கு முக்கிய

**விவாதக் கருத்து**



**வி**வாகரத்து என்பது பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கிறது. கிறிஸ்து சொன்ன உபதேச முறையின்படி அநேகர் வாழ மறுக்கிறார்கள், அதை அவர்கள், யூத – கிறிஸ்தவச் சட்டம் என்றும், மற்றவர்கள் மீது அதை சுமத்த முடியாது என்றும் சொல்லுகிறார்கள். இருப்பினும் "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கோட்பாடு யூத மற்றும் கிறிஸ்தவ மார்க்கங்களுக்கு முன்னமே தோன்றியதாயிருக்கிறது. இது ஒரு சட்டமல்ல, இது ஒரு சத்தியம். மனிதனிடத்திலிருந்து மனுஷி உண்டாக்கப்பட்டாள். இருவரும் சேர்ந்து தான் முழுமை பெறுகிறார்கள். இது சிருஷ்டிப்பின் உண்மை, கனவு காணப்பட்டு, கடைபிடிக்கும்படி கட்டளையிடப்பட்ட ஒன்றல்ல.

*இந்த உறவு சரியாக கடைப்பிடிக்கப்படுமானால், பாலியல் பாதுகாப்பு நிச்சயம் உண்டு, உண்மையாக இருக்கும் திருமண உறவிடமிருந்து எந்த ஒரு ஆணோ, பெண்ணோ பாலியல் நோயை ஒருபோதும் பெற்றதில்லை.*

காரணமாக இருக்கிறது. இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமுடையவர்களாக இருந்தால், இருவரும் பலமுள்ளவர்களாகவும், முடிவெடுக்க வேண்டிய விஷயங்களிலும், வாலிபத்திற்கே உரிய சவால்களிலும் ஒருவருக்கொருவர் ஆதரவுள்ளவர்களாகவும் இருக்கமுடியும். அவர்கள் முதியோர்களாகும்போது, அவர்களுடைய பலவீனத்திலும், வியாதியிலும், ஒருவருக்கொருவர் கவனம் செலுத்துகிறவர்களாகவும் இருப்பார்கள்.

"அவனுக்கு ஏற்ற துணை" என்பதின் பொருள் என்னவெனில், ஒரு பெண், ஆணுக்கு இருக்கும் குறைகளை சரியாகக் கண்டறிந்து அதை சீர்செய்யக்கூடியவளாக இருக்க வேண்டும். ஒருவேளை, அந்தக் குறைகளை தானே சீர் செய்ய முடியாத நிலைமையில் இருப்பதால், அவைகள் அவனிடம் காணப்படுகிறது அல்லது அவன் வாழ்க்கையின் மற்ற பொறுப்புகள் அவனுக்கு அதிகம் இருக்கலாம். தன் மனைவி, பிள்ளைகளின் உதவியின்றி பயிர்களை நடவும், அறுவடை செய்யவும் எந்த ஒரு விவசாயினால் முடியும்? எத்தனை வியாபாரிகள் தங்கள் கணக்கு வழக்குகளைப் பார்க்கவும், புதிய பொருட்கள் வாங்க ஆணை அனுப்பவும், கடைகளை மேற்பார்வையிடவும் மனைவிகளின் உதவியை சார்ந்திருக்கிறார்கள் தெரியுமா? புதிய ஏற்பாட்டில், கூடாரத் தொழில் செய்யும் ஆக்கில்லாவுக்கு, அவன் மனைவி பிரிஸ்கில்லாள் உதவியாயிருந்தாள். "*யூதரெல்லாரும் ரோமபுரியை விட்டுப் போகும்படி கிலவுதிராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலை செய்து கொண்டு வந்தான்*". (அப். 18:2,3)

வேதாகமத்தின்படி பார்த்தால், வீட்டைக் கவனிக்கவும், தன்னையும், தன் கணவனையும் கவனிக்கவும், இந்த உலகிற்குள் குழந்தைகளைக் கொண்டு வருவதுமே பெண்களின் முக்கியமான பணிகளாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், தீத்துவுக்கு எழுதும் போது, "தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள்

புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்கு, கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு" என்கிறார் (தீத்து 2:4,5) இளம் விதவைகளுக்கு அறிவுரையாக தீமோத்தேயுவுக்குக் கூறும்போது, (திருமணமாகாத இளம் பெண்களுக்கும் இது சரியாகப் பொருந்தும்) ஆகையால், இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்" (I. தீமோ.5:14)

**❀ கணவன் தன் குடும்பத்தின் தேவைகளுக்கென்று சம்பாதிக்கும்போது பெண்ணானவள் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, வீட்டை சமாளித்து, தன் வேலைகளைச் சரியாகச் செய்தால், அதுவே ஒரு பெண்ணுக்கு ஏற்றதாக இருக்கும். பெண்களுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பின் முக்கியத்துவத்தை சிலர் உணராமல், இதை இழிவானதென்றும், சங்கடமான ஒன்று என்றும் கருதுகின்றனர். அடுத்த தலைமுறையின் ஆத்துமாக்களை நித்தியத்திற்கு வழி நடத்தும் சிலாக்கியத்தையும், அவர்கள் வாழ்க்கையை சீர்படுத்தும் வேலையையும் விட, சிறந்ததொரு பணியை தேவன் பெண்களுக்கென்று கொடுத்திருக்க முடியாது. குற்றங்கள் மலிந்துவரும் அதே நேரத்தில், ஒழுக்க ரீதியான பிரச்சினைகளும் தீவிரமாக வளர்ந்து வருவதை இன்றைய உலகிலே நாம் பார்க்கிறோம். இதைப் பார்க்கும்போது தாய்மார்கள், தங்கள் வீட்டில் இருந்து செய்ய வேண்டிய வேலைகளை சரியாகச் செய்யாமல் தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதன் விளைவு, குடும்பம் அழிவின் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது. ஏன் இந்தப்**

### விவாதக் கருத்து



**வா***ல் ஸ்டிரீட் பத்திரிக்கையில்* (Wall Street Journal) *வெளிவந்த ஒரு கட்டுரையில், ஆண்ட்ரூ பேடன்* (Andrew Peyton) *என்பவர் சொல்லும் போது, "1960களில் வெளியான பிரபலமான சுயநல கலாச்சாரத்தால், பாதுகாப்பான இல்லங்கள் அடித்து நொறுக்கப்பட்டது. இப்பொழுதோ நாம் அந்த கலாச்சாரப் புரட்சியின் விளைவாக, ஏதோ ஒரு சில நல்ல உடைமைகளை சேர்த்து வைக்க வேண்டுமென் பதற்காகவே நமது குழந்தைகளுக்கு ஒரு இருப்பிடத்தை போன்ற ஒரு கீழ்நிலையான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருகிறோம்.*

*குழந்தை காப்பகங்கள் மற்றும் அது போன்ற நிறுவனங்களில் வளர்க்கப்பட்ட குழந்தைகள் உணர்வுப் பூர்வமாக சீர்குலைந்தும், மனரீதியாக பாதிக்கப்பட்டுமிருப்பதாக சமுதாய விஞ்ஞானம் உறுதிபடுத்துகிறது" என்கிறார்.*

**பிரச்சினையென்றால், ஆண்களுக்குச் சரியாக பெண்களும் வீட்டை விட்டு வெளியே வேலைக்கு செல்லுவதுதான். இப்படிச் செய்வதற்கு என்ன காரணம் வேண்டுமானாலும் கூறலாம். பெண்கள் இப்படி வேலைசெய்வதற்கான அவசியம் எதுவாக இருந்தாலும் தேவன் மனைவிகளுக்கென்றும், பிள்ளைகளுக் கென்றும் திட்டமிட்டுக் கொடுத்த வேலைகளைச் சரிவரச் செய்யாதபடியால், அநேக குடும்பங்கள் அழிந்து போயிருக் கிறதை நாம் காணமுடிகிறது.**

❀ குழந்தைகளையும், வீட்டையும், பாதுகாக்கும் வேலையோடு கூட, "ஏற்றதுணை" என்பவள், தன் கணவன் அருகில், ஒரு சொத்தாக நிற்க தன்னையே தயார் செய்து கொள்ளவேண்டும். அவள் தன் தோற்றத்திற்கு ஏற்றபடி, அவன் ஏற்றுக்கொள்ளும் வகையில், நல்ல உடைகளை உடுத்திக் கொள்ளவேண்டும். தன் கணவனின் எண்ணங்களை பரிமாறிக் கொள்ளவும், அவனுடைய தேவைகளை அறிந்து, தங்கள் சொந்த பிரச்சினைகளையும், மற்ற வெளிப்பிரச்சினைகளையும் உணர்ந்து செயல்படும்படியாக தன் மனதை அவள் வளர்த்துக் கொள்ளவேண்டும். உணர்வுப்பூர்வமான அவனுடைய தேவைகளைச் சந்திப்பதில் முனைப்புக்காட்டுகிறவளாகவும், அவனை சந்தோஷப்படுத்துகிறவளாகவும், அவனுடைய வாழ்க்கையில் நன்மையான காரியங்கள் செய்கிறதையும் தன் இலக்காக அவள் கொள்ள வேண்டும். இப்படி ஒரு வெற்றியுள்ள மனைவி, தன் கணவனுக்கு உற்ற நட்புக்குரியவளாகவும் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவளாகவும் இருக்கிறாள்.

❀ "ஆணுக்கு ஏற்ற துணையாக" இருக்கும் மனைவி, இருவருக்கும் நெருக்கமாக இருக்கும் உறவுகளோடு, பகைமையை வளர்த்தால், அது தங்களுக்குள் மனத் தாங்கல்களை ஏற்படுத்துமென்று அறிந்து, தன் கணவனின் குடும்பத்தாரோடு நல்ல உறவை அமைத்துக் கொள்வாள். இயேசு சொன்ன, "... இரண்டு மைல் தூரம் போங்கள்" என்ற அறிவுரை, குடும்பத்திலிருக்கும் குறைபாடுகளை களைந்து போடுவதில் அருமையாக உதவி செய்யும்.

❀ எல்லாவற்றையும் விட முக்கியமானதாக, மனைவி யானவள், ஆவிக்குரிய காரியங்களைத் தன் கணவனிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். கணவன் ஆராதனைக்குப் போகும் வேளையில், தன் பிள்ளைகளோடு வீட்டிலேயே இருந்தால், அவளும், அவனது பிள்ளைகளும் ஆவிக்குரிய வாழ்வில் வளர முடியாது. உண்மையில், கணவன் தனியாக வளர்வதால் அவனும் வளரவேண்டிய அளவுக்கு வளர முடியாது. தனி நபரின்

**ஆவிக்குரிய வளர்ச்சிக்கு, குடும்பத்தின் பரஸ்பர ஆவிக்குரிய வளர்ச்சியே அடிப்படையாக அமையவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆவிக்குரிய காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், எல்லாரும் இணைந்து வேத வாக்கியங்களை வாசித்து விவாதித்தால், கூடி ஜெபித்தல் - ஆகிய இச்செயல்பாடுகள், முழுக் குடும்பமும், தேவனைப் பற்றிய அறிவில் வளர உதவியாக இருக்கும்.**

பெண்களுக்கென்று அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும் போது", அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக் கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர் களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" (I போதுரு 3:4,7) என்கிறார்.

பவுல், எபேசுவிலிருந்த கிறிஸ்தவப் பெண்களுக்கு எழுதுகையில், "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபே.5:22). மனைவிகளின் கழுத்தில் கணவன்மார்கள் தங்கள் காலை வைக்க தேவனால் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறாரா? அவளுக்கென்று உரிமைகள் இல்லையா? உணர்வுகள் இல்லையா? நிச்சயமாக தேவன் இப்படிச் சொல்லவில்லை.

பெண்கள், தங்கள் கணவன்மார்களுக்கு உண்மையாக மரியாதை செலுத்த வேண்டும், அதே நேரத்தில், ஒரு ஆண் தன்



**விவாதக் கருத்து**

***நீ**ங்களும், உங்கள் கணவனும், உங்கள் திருமண உறவிலே, உங்கள் கீழ்ப்படிதலான நடவடிக்கை பற்றியும் அவருக்கு மரியாதை செலுத்துவது பற்றியும் அவர் குடும்பத் தலைவர் என்ற அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றியும் கலந்துரையாடல் செய்ய வேண்டும்.*

மனைவியைத் தகாத முறையில் நடத்துவதோ, மனைவி கணவனைத் தகாத முறையில் நடத்துவதோ கூடாது. குடும்ப காரியங்கள் சம்பந்தமாக. குறிப்பாக குடும்பத் தேவைகளுக்குப் பணம் செலவழிப்பதில், மனைவிக்கு இருக்கும் அனுபவமும், அறிவும் அவள் அக்காரியத்தை, கணவனைக் காட்டிலும் சிறப்புடன் செய்யும் தகுதியுள்ளவளாக்கக் கூடும். இது போக, ஒரு தாய் மற்றும் குடும்பத் தலைவி என்ற முறையில் அவளுடைய கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டங்களில், எது சிறப்பாக இருக்கும் என்பதை முடிவு செய்ய இருவரும் சேர்ந்து ஆலோசிக்க வேண்டும். ஒருவேளை கணவன் எடுக்கும் தீர்மானத்தின் மீது, மனைவி தன் செல்வாக்கை பலமாக செலுத்தலாம். ஆனாலும், வேத வசனங்களின்படி, குடும்பத் தலைமைக்கான அதிகாரம் கணவனிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.

அணுகு முறையிலோ, அறிவிலோ, முடிவு எடுப்பதிலோ, தன் கணவனுக்கு இன்னும் ஆலோசனையோ அல்லது மேலும் அறிவோ தேவைப்படுகிறது என்று உண்மையாகவே, ஒரு மனைவி நம்பினால், அதை அவள், வேதாகமக் கோட்பாடாகிய

"ஏற்ற துணை" என்பதற்குக் குந்தகம் வராத அளவில், சாந்தமாகவும், அன்போடும் எடுத்துரைப்பது அவளது கடமையாகும். அவளுடைய அறிவு எவ்வளவு சரியானதாக இருந்தாலும், தன் கணவன் எவ்வளவு தவறானவராக இருந்தாலும், அவள் தன் கணவனை அடக்குவது அவனுக்கு ஆணைகளைப் பிறப்பிப்பது, முடிவை மாற்றும்படி கட்டளையிடுவது ஆகிய இச்செயல்கள் ஒரு போதும் சரியாகாது. ஒரு மனைவி இப்படிப்பட்ட அணுகுமுறையை கையாளுவது, கணவனுடைய தலைமையை பெலவீனப்படுத்துவது மாத்திரமல்ல, இது தேவனுக்குக் கீழ்ப்படியாத செயலுமாகும். ஒரு கணவன், இப்படிப்பட்ட நடக்கையைப் பொறுத்துக் கொள்வது, அவனை பெலவீனப்படுத்தி, அவன் மனைவியின் அடக்கும் மனப்பான்மையை பெலப்படுத்துவதோடல்லாமல், இதுவும் தேவனுக்கு கீழ்ப்படியாத செயலாக இருக்கும். நாம் ஒன்றை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது, நாம் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளும் விதம் குறித்து, தேவனுக்கு நாம், ஒரு நாளில் கணக்குக் கொடுத்தே ஆக வேண்டும்.

கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் எப்படி நடத்தப்பட வேண்டுமென்பதற்கு, மிகச் சிறந்த வழிகாட்டியாக, நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய சபைக்கும் இடையேயான உறவு நமக்கு சிறப்பாக கொடுக்கப் பட்டிருக்கிறது. "..உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினி டத்திலும் அன்புகூரக் கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள்"(எபே.5:33)

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. தேவன் மனிதனை உண்டாக்கிய போது, அவனுக்கு என்ன கொடுத்தார்?

2. ஏன் அப்படிக் கொடுத்தார்?

3. ஆதாம் உண்மையில் முழுமை பெற வேண்டுமானால், எந்த வழிகளிலெல்லாம் அவனுக்கு துணை அவசியப் பட்டது?

4. ஏவாளுக்கு யாருடைய டி.என்.ஏ. இருந்தது?

5. தேவன் ஏவாளை சிருஷ்டித்து, ஆதாமிடம் கொண்டு வந்த போது, அவன் என்ன சொன்னான்?

6. ஒரு திருமணம் முழுமை பெற்றதாக இருக்க வேண்டுமென்றால், ஒரு ஆணும், பெண்ணும் ஒருவருக் கொருவர் ஏற்றவர்களாகவும், பொருத்தமானவர்களாகவும் இருக்க வேண்டியது முக்கியமானதா?

7. திருமணத்தின் கால அளவைப் பற்றி, தேவன் ஆதியி லிருந்து கொண்டிருந்த நோக்கம் என்ன?

8. விவாகரத்தைக் குறித்து இயேசு என்ன சொன்னார்?

9. வாழ்க்கைத் துணையாக இருப்பதின் அனுகூலங்கள் யாவை?

10. நல்ல கணவனும், மனைவியுமாய் இருக்கிறவர்கள் சிலரைப் பற்றி நினைக்கையில், மனைவி தன் புருஷனுக்கு எப்படி உதவியாக இருக்கிறாள் என விவாதியுங்கள்.

11. வேதாகமத்தின்படி ஒரு பெண்ணுக்கான அடிப்படை பணி : ................ ................, ................, ................

12. தேவன் கொடுத்திருக்கும் பணியைப் பற்றிய சமுதாய அணுகுமுறைகள், பெண்களின் அணுகுமுறையை பாதித்திருக்கிறதா?

13. தேவன்ஸ்திரீக்கு ..........................................................................விட மிகப் பெரிய பரிசை கொடுத்திருக்க முடியாது.

14. பெண்கள் வீட்டிலே தங்கள் கடமைகளை செய்யாமல் தவிர்ப்பதினால் வரும் சில விளைவுகள் என்ன?

15. தன் கணவருக்கு ஏற்ற துணையாக இருப்பதில், ஸ்திரீகளுக்கு இருக்கும் நான்கு பங்குகளை விவாதி?

16. வீட்டிலே மனைவியாகவும், தாயாகவும் ஒரு பெண் கடமையாற்றுவதால், அவளுடைய முடிவுகளுக்கும் புருஷன் மதிப்பு தர வேண்டுமா? அவள் திறம்படச் செய்யும் வேலைகளின் பொறுப்புகளை அவளுக்கு கொடுக்க வேண்டுமா?

17. புருஷனுக்குச் சில காரியங்களில் ஆலோசனை தேவைப்படும் போது, ஆலோசனையை தன் கணவருக்கு தருவது, "ஏற்ற துணை" என்ற பொருளின் கீழ் பொருந்தி வருமா? எப்படி?



# 6 ஒரு பெண் மூப்பராகவோ, உதவிக்காரராகவோ இருக்க முடியுமா?



மாறுகின்ற இந்த உலகத்தில், பெண்கள் தங்கள் உரிமைக்காக அதிகம் குரல் கொடுத்து, ஆண்கள் மாத்திரமே செய்ய அனுமதிக்கப்பட்ட காரியங்களைச் செய்ய முற்படுகின்றனர். மத உலகிலும், பெண்கள் திரை மறைவிலே தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொண்டு, சபையில், இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்யக் கூடாது என்று தங்கள் கணவனுக்கு சொல்லிக்கொடுக்கிறார்கள். பெண்களை வழி நடத்தும்படியான பொறுப்பை தேவன் ஆண்களுக்குக் கொடுத்துள்ளார் என்று முந்தின பாடத்தில் படித்தோம். ஆண்கள், சரியானவர்களாக இருந்து, தங்கள் வேலையை ஒழுங்காகச் செய்தால், தேவன் அதிலே பிரியப்படுவார். ஆனால், ஆண்கள் பெலவீனமுள்ளவர்களாயிருந்து தங்கள் தலைமைத்துவப் பொறுப்பைத் தட்டிக் கழித்து, பெண்கள் தங்களை, "ஆட்டிப் படைக்க" அனுமதித்தால், தேவன் இவர்களின், இந்த மாறுபட்ட நிலையை அங்கீகரிக்கிறார் என்று சொல்ல முடியாது. உண்மை நிலைமை எப்படியிருந்தாலும், தேவன் இதற்கு ஆண்களையே பொறுப்பாளியாக்குகிறார்.

சபையில் பெண்கள் பேசக்கூடாது என்பதையும், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த அவர்களுக்கு அதிகாரமில்லை

### விவாதக் கருத்து



*சபையிலே பெண்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம் என வேதாகமம் அனுமதிக்கிறதென்று நீங்கள் நம்புகிறீர்களா? சிலரோ, புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் அந்த காலத்துக் கலாச்சாரத்தை பிரதிபலிக்கிறது என்று நினைக்கிறார்கள். புதிய ஏற்பாட்டை எழுதும்படியாக வழி நடத்தியது யார்? அது மனிதர்களின் செய்தியா அல்லது பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்பாடா?*

யென்பதையும் தேவன், பவுலைக் கொண்டு சொல்லியிருப்பதால் (I தீமோத்:2:12, I கொரி:14,34,35), சில நேரங்களில் விமர்சகர்கள் பவுலைக் குற்றப்படுத்துவதுண்டு. பவுல் திருமணமில்லா தவராக இருந்தபடியால், பெண்கள் மீது இருந்த வெறுப்பின் காரணமாக இப்படிச் சொல்லியிருப்பார் என்று சொல்லி, அவருடைய எழுத்துக்களின் நோக்கத்தை சிலர் கொச்சைப்படுத்துவர். ஆனால், வேதாகமத்தின் மற்ற எல்லா எழுத்தாளர்களைப் போலவே, பவுலும் தேவ ஆவியினால் ஏவப்பட்டே எழுதினார். தன்னுடைய விருப்பு, வெறுப்பினடிப்படையில் அவர் எதையும் எழுதவில்லை. II தீமோ. :3:16,17 வசனங்கள் இப்படிச் சொல்லுகிறது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளு

தலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனம் உள்ளவைகளாயிருக்கிறது" என்று.

**நாம் மனந்திறந்து பார்க்க விரும்பினால், தலைமைத்துவத்தைக் குறித்தான தேவதிட்டம் என்ன என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் சுலபம்.**

**❀ பழைய, புதிய ஏற்பாட்டைத் தோராயமாக 40 எழுத்தாளர்கள் எழுதினார்கள். அவர்களில் ஒருவர் கூட பெண் இல்லை.**

**❀ யாக்கோபுக்கு 12 குமாரர்களும் ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். ஆனால், அவர்களைக் கொண்டு உருவான, இஸ்ரவேல் தேசத்தைப் பற்றி வேதாகமம் சொல்லும்போது, யாக்கோபின் 12 குமாரர்கள் பெயரால்தான் கோத்திரங்கள் அழைக்கப்படுகிறது. குமாரத்தியின் பெயர் இல்லை.**

**❀ எண்ணற்ற முற்பிதாக்கள், ஆசாரியர்கள், நியாயாதிபதிகள், ராஜாக்கள் என்று தலைமையேற்று நடத்தும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஆண்களைப் பார்க்கிறோம். இவர்கள் எல்லோருமே ஆண்கள் தான். விதிவிலக்காக தெபொராள் என்று சொல்லக் கூடிய பெண் நியாயாதிபதி இஸ்ரவேலில் இருந்தாள். (நியாயா : 4 : 1 - 9). இதற்குக் காரணம், தேவனுடைய பார்வையில் இஸ்ரவேல் பொல்லாங்கிற்குள் கிடந்து, தலைமைக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படியான விசுவாசமும், தைரியமும் எந்த ஒரு ஆணிடமும் அப்பொழுது இல்லாமல் போனது. வசனம் 9-ல் சொல்லப்பட்டுள்ளபடி, ஆண்களுக்கு இது அவமானமாயிருந்தது.**

**❀ சபையானது, சில இடங்களில், சில பெண்களுடைய வீட்டில் கூடிவந்தது உண்மையாக இருப்பினும், புதிய ஏற்பாட்டிலே பிரசங்கிகளாகவும், தலைமையேற்று நடத்துபவர்களாகவும் ஆண்கள் தான் குறிப்பிடப் பட்டுள்ளார்கள். இயேசுவோடிருந்த சில பெண்களுக்கு அப்போஸ் தலர்களைக் காட்டிலும் அதிக**

**விசுவாசமிருந்திருந்தாலும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 அப்போஸ்தலர்களும் ஆண்களாகவே இருந்துள்ளார்கள். (லூக் : 24 : 10, 11). இதிலிருந்து ஆண்கள், குடும்பத்திலும், சபையிலும் தலைவர்களாக இருக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டது, அவர்கள் பெண்களைக் காட்டிலும் அறிவும், திறமையும், விசுவாசமும் உள்ளவர்களாக இருப்பதாலல்ல என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தேவன், சிருஷ்டிப்பில் மனிதனை முதலாவது படைத்ததாலும், அதிகாரம் செய்யும்படியாக தேவன் அவனை ஏற்படுத்தியதாலும் காரியங்கள் இப்படி இருக்கிறது. ஆகையால், வழி நடத்துவதற்குத் தன்னை தயார்படுத்துவது மாத்திரம் தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்பாக இல்லாமல், முழுத் திராணியையும் பயன்படுத்தி குடும்பத்தையும் வழிநடத்துவது அவனுடைய பொறுப்பாக உள்ளது.**

கிறிஸ்துவின் சபையானது, தனித்தனி அமைப்பாக இருந்து ஒன்றையொன்று சாராமல், தகுதி வாய்ந்த மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைக் கொண்டு வழிநடத்தப்பட வேண்டுமென்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. (அப்:14:23, பிலி:1:1, தீத்து:1:5) இந்தப் பொறுப்பை வகிக்கிற ஆண்களுக்கு எப்படிப்பட்ட தகுதிகள் இருக்க வேண்டும் என்பது கொடுக்கப்பட்டுள்ளது. (I தீமோ:3:2-13, தீத்து:1:5-9).

"ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப் படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப் பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசை இல்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாக நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக்

கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடி நூதன சீஷனாயிருக்கக் கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சிபெற்றவனாயும் இருக்க வேண்டும் (1தீமோ.:3:2-7).

தீத்துவுக்கு எழுதின நிருபம், முதலாம் அதிகாரம், 5 முதல் 9 வசனப் பகுதிகளை வாசிக்கும்போது, "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கு, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே.

**விவாதக் கருத்து**



*மூப்பர்கள் திருமணமானவர்களாகவும், ஒன்றுக்கும் மேற்பட்ட விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதற்கு என்ன காரணங்களை, நீங்கள் தருவீர்கள்? சபை தேவனுடைய குடும்பம் என்று அழைக்கப்படும் போது, தன் சொந்த குடும்பத்தை நடத்திய அனுபவம், சபையில் தனது பராமரிப்பில் இருப்போரை வழிநடத்துவதில் எவ்வளவு உதவியாக யிருக்கும் என நினைக்கிறீர்கள்?*

குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் 4.

பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாய் ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம்.

ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக் காரனுக் கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,

அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்க முள்ளவனும்,

ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.

**இங்கே, மூப்பர்களை ஏற்படுத்தும்படியாய் கொடுக்கப் பட்டுள்ள வழிமுறைகள், பல காரியங்களைக் காட்டுகிறது.**

**❀ ஒவ்வொரு இடத்திலும், அந்தந்த பிராந்திய சபையைச் சேர்ந்த மூப்பர்கள் இருக்க வேண்டும். இது, பன்மையில் சொல்லப்பட்டுள்ளது.**

**❀ மூப்பர் என்பவர், "ஒரே மனைவியையுடைய புருஷனும், .....தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனு மாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (I தீமோத் .3:2, 4, 5).**

**❀ மூப்பராக இருக்க விரும்புகிற ஒருவன் இரண்டு மனைவியை உடையவனாகவோ, பலதாரமுடையவானகவோ, விவாகரத்**

**தடைந் தவனாகவோ இருக்க முடியாது. அவனுக்கு ஒரே மனைவிதான் இருக்க வேண்டும். சரீரப் பிரகாரமான குழந்தைகளாக இருந்தாலும், ஆவிக்குரிய குழந்தைகளாக இருந்தாலும், அவர்கள் ஒரு பூரணத்தை அடைகின்ற அளவில் அவர்களை வழிநடத்தும்படியாய், வசனத்தில் சொல்லியுள்ளபடி, முதலாவது தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாய் இருக்க வேண்டும். தன் சொந்தக் குடும்பத்தை தலைமையேற்று பல ஆண்டுகளாய் வழி நடத்திய அனுபவத்தைக் கொண்டு, அவன் சக மூப்பர்களோடு இணைந்து பணியாற்றி கர்த்தருடைய சபைக்கு ஒரு நல்ல தலைமையைக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கலாம்.**

"ஒரே மனைவியை உடைய புருஷன்" என்று சொல்லப்பட்டிருப்பதால், இது கண்டிப்பாக, ஒரு பெண்ணைக் குறிக்காது என்பது வெளிப்படையானது. அவள் தன் குடும்பத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டும், புருஷன்மீது அதிகாரம் செலுத்திக் கொண்டும், தேவனுக்குப் பிரியமானவளாக நடக்க முடியாது. ஆகவே, தன் கணவன் மீது அதிகாரம் செலுத்தவும், சபையின் மீது அதிகாரம் செலுத்தவும் அவள் ஒரு மூப்பனாக இருக்க தகுதியற்றவளாகிறாள்.

(I *தீமோத்தேயு : 3:8-13) வசனங்களில், "அந்தப்படியே உதவிக்காரரும், இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளு கிறவர்களாயும் இருக்க வேண்டும்.*

*மேலும் இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்பட வேண்டும். குற்றஞ்சாட்டப் படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும், நல்லொழுக்கமுள்ளவர் களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர் களும், எல்லாவற்றிலேயும் உண்மையும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.*

மேலும் உதவிக்காரரானவர்கள், ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும், சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்.

இப்படி உதவிக்காரனுடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலைமையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

உதவிக்காரர்கள், தங்கள் பொறுப்பின்படியாக, மூப்பர்களுக்கு கீழாக இருந்து ஊழியம் செய்ய வேண்டும்.

**விவாதக் கருத்து**

***சி**லர் இப்படிக் கேட்பதுண்டு, "சபையில் தானே முன்வந்து, அதின் மீது அதிகாரம் செலுத்த பெண்ணுக்கு அதிகாரமில்லை, அது தவறு. இக் கருத்தை சரி செய்யும்படியான நோக் கோடு, மூப்பர்கள் ஒரு பெண்ணை அதிகாரம் எடுத்துக் கொள்ளும்படியாக அழைத்தால், அதுவும் தவறா? அவள் அந்த மூப்பருடைய அதிகாரத்தின்படி தானே நடக்கிறாள்? என்று வாதிடுவார்கள்"*



*ஆனால், இந்தக் கருத்தில் உள்ள பிரச்சினை என்னவெனில், எந்த ஒரு மனிதருக்கும் ஒரு வேளை அவர் ஒரு மூப்பராக இருந்தாலும் – தேவ கட்டளைகளை புறம்பே தள்ளி, தன் சொந்த கட்டளைகளை அமுலாக்குவதற்கு எந்த அதிகாரமுமில்லை என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது.*

"உதவிக்காரன்" என்ற வார்த்தையின் பொருள் அதுதான். இன்றைக்கு பிரிவினைச் சபைகளிலே "மூப்பர்கள் என்ற பொறுப்பில் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் "உதவிக்காரர்கள்", மூப்பர்கள் வேலையைச் செய்து கொண்டிருப்பார்கள். "பாஸ்டர்" (Pastor) என்று பெயர் பெற்றவர்கள் (புதிய ஏற்பாட்டின் காலத்தில், இவர் ஒரு மூப்பர்) சுவிசேஷகனுடைய அல்லது பிரசங்கியினுடைய வேலையை. செய்து கொண்டிருப்பார்கள்.

சபையிலே இருக்க வேண்டுமென கர்த்தர் கொடுத்த பொறுப்புகளை தாறுமாறாக்குவது வேதத்துக்குப் புறம்பானது. நமக்கு அதிகாரியாக தேவன் இருக்கும்படி நாம் அனுமதித்து அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு, அவர் தம் வசனத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்களும், உதவிக்காரர்களும் இருக்க வேண்டுமென்று சொல்லியுள்ளார். அங்கே, இரண்டு வேலைகளுக்குமான தகுதியாம்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்பொறுப்புக்கு அவர்களை ஏற்படுத்தும் முன், அவர்கள் அத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்களா? என்று பார்க்க வேண்டும். கிரேத்தா தீவிலே இருந்தது போல, தகுதியானவர்கள் எழும்பும் வரை, சபையானது மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் இல்லாமலே இயங்கலாம்.

மூப்பர்களைப் போலவே, உதவிக்காரர்களும், ஒரே மனைவியையுடைய புருஷர்களாக இருக்க வேண்டும் (I தீமோ.3:12), ஆகவே, பெண்கள் உதவிக்காரர்களாக இருக்க முடியாதென்பது திட்டமாகத் தெரிகிறது.

நாம் இவ்வாறு சொல்லும் போது, சிலர் 11-ம் வசனத்தை மேற்கோள்காட்டி பெண்களும் உதவிக்காரர்களாக இருக்கலாம் என்று சொல்வார்கள். ஆனால் கவனித்துப் படித்தால், அந்தப் பகுதி, சபையிலே தலைமையாளர்களாக இருப்பவர்களின்

மனைவிகளுடைய தேவ பக்தியைக் குறித்துப் பேசுகிறது என அறியலாம். உதவிக்காரராக ஏற்படுத்தப்பட்ட பெண்ணைப் பற்றி அங்கே பேசவில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களும், ஊழியக்காரர்களாக இருந்து ஊழியம் செய்ய வேண்டுமென்பது ஒரு வகையில் சரிதான். கர்த்தருடைய சபையில், மற்றவர்களுக்கு உதவி செய்து, சபையை வளர்ச்சியடையச் செய்யும் பணியில், ஒரு பெண் செய்வதற்கு நிறைய வேலைகள் உண்டு. இப்படிச் செய்வதற்கு அவர்கள் ஊக்கப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

ஆனால், இதை அடிப்படையாக வைத்து, ஒரு பெண்ணை மூப்பராகவோ, அல்லது உதவிக்காரராகவோ எந்தவொரு கூட்டமாகிலும் ஏற்படுத்தி, கர்த்தருடைய சபையின் மீது அதிகாரம் செலுத்தும் பொறுப்பை அவளுக்குக் கொடுத்தால், அது எளிமையாகவும், தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களை நேரிடையாக மீறும் செயலாகும். இப்படிச் செய்வது, வேத வசனத்தோடு ஒன்றைக் கூட்டுகிற காரியமாகும். இது, பாவம். இப்படிச் செய்யக்கூடாதென்று தேவன் கண்டிப்பாக தமது வசனங்களில் நமக்குச் சொல்லியுள்ளார். (வெளி:22:18, 19, உபா : 4 : 2, நீதி 30 : 6).

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. பவுல், பெண்களை வெறுத்தாரா ?
2. ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதின வேதாகம எழுத்தாளர்களில் எத்தனை பேர் பெண்கள்?
3. இஸ்ரவேல் கோத்திரத்திற்கு தலைவர்களாக எத்தனை பெண்கள் இருந்தார்கள்?

மரியாள், மார்த்தாள், பிரிஸ்கில்லாள், இவர்கள் எல்லாம் அப்போஸ்தலர்கள் என்று எண்ணப்பட்டார்களா?

5. பெண்களுக்கு இருந்த பெரிய விசுவாசத்தைப் பற்றிய சில உதாரணங்களை விவாதியுங்கள், இது ஆண்கள் முதலில் சிருஷ்டிக்கப்பட்டதாலே, தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறதை எப்படி நிரூபிக்கிறது என்பதையும் விவாதியுங்கள்.

6. ஆகவே, ..........................................................................................
என்பது தேவன் ஒரு கணவனுக்கு தந்த பொறுப்பாகும்.

7. புதிய ஏற்பாட்டு மாதிரியின்படி ஒவ்வொரு பிராந்திய சபையும் ................ மற்றும் .................. என்று .............. அவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

8. I தீமோ. 3 : 12 – 13, தீத்து 1 : 5 – 9 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள மூப்பர்களின் தகுதிகளைப் பற்றி விவாதியுங்கள்.

9. மூப்பர்கள் ஒவ்வொருவரும், ஒரே மனைவிக்கு புருஷரும், விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவர்களுமாய் இருக்கவேண்டுமென்று தேவன் கண்டிப்பாய் சொல்லியிருக்கிறார் என்று நம்புகிறீர்களா?

10. தன் சொந்த குடும்பத்தை ஒழுங்காக நடத்தாத மனிதனைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது?

11. இந்தத் தகுதிகள், எந்த இரண்டு காரணங்களின் அடிப்படையில், பெண்களை மூப்பராகவும், உதவிக்காரராகவும் இருப்பதிலிருந்து நீக்கிவிடுகிறது?

12. பெண்கள் சபையில் பணி புரியலாமா? பெண்ணை "உதவிக்காரி" என்கிற பதவிக்கு ஏற்படுத்த ஆண்களுக்கு அதிகாரமிருக்கிறதா?

13. சில பிரிவு சபைகளில், "மூப்பர்", "உதவிக்காரர்", "போதகர்" போன்ற பதவிகளுக்குள்ளிருக்கும் குழப்பங் களை விவாதியுங்கள்.

14. மூப்பர்கள், உதவிக்காரர்கள், இவர்களை ஏற்படுத்துவதில் சபையானது தேவனுடைய சட்டங்களைப் பின்பற்றுவது ஏன் முக்கியமானது?



# 7



# இருபாலரும் கூடியுள்ள இடத்தில் ஒரு பெண் பிரசங்கிக்க முடியுமா?

இன்றைக்கு இருக்கும் பெரும்பாலான சபைப் பிரிவுகளின் ஆராதனைகளில், பெண்கள் முக்கியப் பங்கேற்று செயல்படுகின்றனர். இப்படிச் செய்வதற்கும் அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதற்கும் காரணம், பெண்கள் தாழ்ந்தவர் களாகவும், முக்கியத்துவமற்றவர்களாகவும் கருதப்பட்ட, அந்தக் கால வேதாகம நாட்கள் கடந்து போய்விட்டதென்றும், இப்பொழுது ஆண்கள் செய்யும் எதையும் செய்வதற்கு இவர்களுக்கும் உரிமையுண்டு என்றும் எண்ணுவதுதான். எப்படியோ காலங்காலமாய் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எடுத்துப் போடப்பட்டுவிட்டது என்று எண்ணி, இப்புதிய சித்தாந்தத்தில் அநேகர் திளைக்கின்றனர். இதனால், இப்பொழுதெல்லாம், பெண்கள் பிரசங்கிக்கின்றனர், பேராயர்களாக ஏற்படுத்தப்படுகின்றனர். ஆண்கள் அணியும் அங்கிகளை தாங்களும் அணிந்து, ஆண்கள் செய்யும் வேலைகளையும் செய்கின்றனர்.

இப்புதிய சுயாதீனக் கொள்கை தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறதா? வேதாகமத்தின் கொள்கைகள், அது எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு காலத்துக்கும், அதற்கு முந்திய காலத்துக்கும் மாத்திரம் பொருந்தக் கூடிய கோட்பாடுகளைக்

## விவாதக் கருத்து



*நியாயத்தீர்ப்பின் நாளில் நீங்கள் தேவ சமூகத்தில் நிற்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்நாள் முழுவதும் குறிப்பிட்ட கட்டளைகளும், கற்பனைகளும் முக்கியமல்ல, தேவ கிருபை தான் முக்கியம் என்று வாதிட்டிருக்கிறீர்கள். அந்நாளில் நீங்கள் ஒரு புறம்,* **"இவைகள் ஒன்றும் பெரிதானதல்ல"** *என்று சொல்கிறீர்கள். மறுபுறம் பரிசுத்த ஆவியானவரோ,* **"நீங்கள் தேவ வார்த்தையோடு கூட்டியும், குறைத்துமிருக்கிறீர்கள்"** *என்று சொல்கிறார். அப்படியானால், பரிசுத்த ஆவியானவரோடு, துணிகரமான தர்க்கத்தை செய்திருக்கும் சாதாரண மனிதராகிய நீங்கள், அந்த நாளில் இதைக் குறித்து எப்படிப்பட்ட உணர்வு கொள்வீர்கள்?*

கொண்டதா? இது, தேவச் சித்தத்தின்படியானதாக கொடுக்கப் படாமல் உண்மையாகவே மனிதனிடத்திலிருந்து வந்த வார்த்தையாக இருக்குமானால் நம்மையும் அறியாமல் பழங்காலக் கொள்கைகளினால் அடிமையாக்கப்பட்டிருக் கிறோம் என்பது பொருள். ஆனால், வேதவாக்கி யங்கள், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டதாய் இருந்து அது மனிதனுக்காக தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்டதாக இருக்குமானால், எந்த ஒரு மனிதனும் அதை, காலத்துக்கு ஒவ்வாதது என்றும், இக்காலத்துக்கு சம்பந்தம் இல்லாதது என்றும் சொல்வதற்கு அதிகாரம் பெற்றவனாய் இருக்க முடியாது.

இயேசுகிறிஸ்துவானவர் கூறுகையில், "*என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்*" (யோவான் 12 : 48) என்கிறார். மேலும் மத்:16:19-ல் "*பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்*" என்றார். வேத வசனங்களெல்லாம்

**விவாதக் கருத்து**



*ஆவிக்குரிய தலைமைப் பொறுப்பு களை பெண்கள் வகிப்பது பற்றி எப்படி எண்ணுகிறீர்கள்? பெண்கள் இந்தப் பொறுப்பு வகிக்க கூடாதென்று கட்டுப்பாடு பண்ணுவதற்கான காரணம் அடக்குமுறையா அல்லது வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதால் கொடுக்கப்பட்டும் மரியாதையா? தற்போதைய நாகரீக நோக்கு (அதாவது இவைகள் எல்லாம் தேவன் எழுதியதில்லை, மனிதன் தன் சொந்த நம்பிக்கைகளை, அபிப்பிராயங்களை எழுதியிருக்கிறான் என்பது) வேதாகம அதிகாரத்தை செல்லாததாக்கி விட்டதா?*

தேவனுடைய வார்த்தைகள் தான். அவைகள் மனிதனின் கோட்பாடுகள் அல்ல. "**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது**" (II தீமோத் : 3:16). வேதாகமத்தை எழுதி முடிக்கிற தருவாயில், தேவன் கொடுத்துள்ள எச்சரிப்பைப் பாருங்கள். "**இந்தப் புஸ்தகத்**

*திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினரல் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தக் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவை களிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்.* (வெளி : 22 : 18, 19).

தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கையாளுவ தென்பது சாதாரண விஷயமல்ல. அவர் எழுதினதிலிருந்து, தனக்கு அதிகாரமிருக்கிறது என்ற எண்ணத்தில் தன்னை தேவனுக்கு மேலாக எண்ணி, எழுதப்பட்டதற்கு விரோதமாக எதையாவது ஒருவன் மாற்றினால், அது அவனுக்கு அழிவைத்தான் கொண்டு வரும். அப்போஸ்தனாகிய பவுல், (கலா:1:8) வசனப் பகுதிகளில் "*வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்*" என்கிறார். இப்படித் துணிகரமாக அதிகாரத்தை தங்கள் கையில் எடுக்கும், ஆணும், பெண்ணும், நியாயத்தீர்ப்பின் நாளில் ஆக்கினையை சந்தித்தாக வேண்டும்.

**❀ "இயேசு ஆராய்ச்சி மாநாடு" (Jesus Seminar) என்பது, வேதப் படிப்பில் "அதிகாரம் பெற்றவர்கள்" என்றும், மத உலகில் தங்களை "தலைவர்கள்" என்றும் அழைத்துக் கொள்ளும் ஒரு கூட்டத்தார். சுவிசேஷ உண்மையை ஆராய்ச்சி செய்த நிகழ்வு பற்றி ரசல் ஷோர்டோ (Rusell Shorto) என்பவர் ஒரு கட்டுரை எழுதினார். அவர் சொல்லும் போது, "இயேசு ஆராய்ச்சி மாநாட்டினர்" சுவிசேஷத்தை ஒவ்வொரு வார்த்தையாக ஆழ்ந்து ஆய்வு செய்கின்றனர், இப்படிச் செய்வது தன்னில் தானே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சுவிசேஷத்தில்**

**விவாதக் கருத்து**



*வேதாகமம், பொய்த்துப் போகாத தேவ வார்த்தையல்ல வென்று, அது மனிதனால் எழுதப்பட்ட ஒன்றுதான் என்றும் பிரிவினை சபையின் போதகர் களும், தலைவர்களும் வெளிப்படையாக போதிக்கும் போது, வேதாகமத்தை அதிகம் தெரிந்திராத ஒரு சராசரி "விசுவாசிக்கு" இது எதை ஏற்படுத்தும்? அது மாத்திரமல்ல, இயேசு கன்னி மரியாளிடம் பிறக்கவில்லை, அவர் அற்புதங்கள் செய்யவில்லை, அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப் படவில்லை என்றெல்லாம் கூடப் போதிக்கிறார்கள். இதன் பாதிப்பு சாதாரணமாக இருக்கும் என்று எண்ணிவிடாதீர்கள்!*

**உள்ள எந்த வார்த்தைகளும், எந்த நிகழ்வும் வரலாற்றில் தோன்றிய இயேசுவுக்குச் சொந்தமானது என்று இவர்கள் கூடித் தீர்மானிப்பது இவர்களுடைய துணிகரமான செயலை நமக்கு வெளிப்படுத்துகிறது. அவர்கள், இப்படித் தீர்மானிப்பதின் மூலம் இயேசுவுக்குச் சொந்தமான வார்த்தைகளும், நிகழ்வுகளும் எதுவென்று சொல்லுகிறார்களோ அதைத் தவிர மற்ற வேத பகுதிகள் எல்லாம் "கதை சொல்பவர்களால்" கூட்டப்பட்டது என்று கருதப்படுகிறது என்கிறார் இவர்.**

பிரிவினைச் சபையில் இருக்கும் பிரசங்கியார்கள் மற்றும் தலைவர் களிடையே இருக்கும் இப்படிப்பட்ட மனோநிலை தான், பொதுவாக ஜனங்கள் வேதாகமத்தைக் குறைவாக மதிப்பிட்டு, ஆவிக்குரிய காரியங்களில் தங்கள் நடத்தையைக் குறைத்துக் கொண்டு, தங்களுக்குத் தற்கால கலாச்சாரமே போதும் என்று நினைத்து அதை நாடுகின்றனர்.

தன்னுடைய ஜனங்களை வழிநடத்தும்படியான பொறுப்பை, தேவன் மனிதனுடைய கற்பனையான உபதேசங்களுக்கு ஒரு போதும் விட்டு விடவில்லை. அவர் நேரிடையான கட்டளைகளை தெளிவாக வெளிப்படுத்தி, அதை எழுதிக் கொடுத்து, இன்றைக்கு நாம் பயன்படுத்தும்படி பாதுகாத்து வைத்திருக்கிறார். ஆகவே, நமது ஆவிக்குரிய காரியங்களுக்கு வேதமே வழி காட்டியாக அமைய வேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில், பிரசங்கித்தார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் கூட கொடுக்கப்படவில்லை. அநேகப் பெண்கள் இயேசுவுக்குப் பின்சென்று, அவருக்கும், அவருடைய அப்போஸ்தலருக்கும் ஊழியம் செய்வதன் மூலம் அவர்களுடைய சில தேவைகளை சந்தித்தார்கள். ஆனால், அவர்களில் ஒருவர்கூட போதிப்பதற்கென்று நியமிக்கப் படவில்லை. புதிய ஏற்பாட்டில், எழுபது பேரை தெரிந்தெடுத்து அனுப்பும்போது, ஆண்களைத்தான் தெரிர்ந்தெடுத்தாரே தவிர பெண்கள் ஒருவர் கூட இல்லை. அப்போஸ்தலர்களை எடுத்துக் கொண்டால் அவர்களும் ஆண்களாகத்தான் இருந்தார்கள். பதினோரு பேருடன் பேதுரு எழுந்து நின்று பிரசங்கித்த சம்பவத்திலும், எந்த ஒரு பெண்ணும் போதித்ததாகக் கூறப்படவில்லை.

மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு, வல்லமையான சாட்சி திட்டமாக இருந்தது. மகதலேனா மரியாளை எடுத்துக் கொண்டால், அவள் இயேசுகிறிஸ்துவால் அற்புதமாய் குணப்படுத்தப்பட்டவள். அத்தோடு இயேசுகிறிஸ்துவின் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தபோது, முதன் முதலாக அவளுக்குத்தான் காட்சியளித்தார். மாற்கு 16 : 14லில் அவிசுவாசத்திற்காக கடிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களை விட, இந்த காலகட்டத்தில் இவள் மகத்தான விசுவாசம் உடையவளாக

இருக்க வாய்ப்பிருந்தது. ஆனால், இவர்கள் இருவரில், ஒருவருக்காகிலும் போதிக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் இயேசுவுக்கு மிகவும் பிரியமானவர் களாயிருந்தார்கள். மரித்துப்போன தங்கள் சகோதரனாகிய லாசருவை இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பியபோது, அதுபற்றி மற்றவர்களை நம்பச் செய்யும்படியாக எதுவுமே பேசவில்லை. இயேசுகிறிஸ்துவோ அல்லது அப்போஸ்தலர்களோ அவர்களை அவ்வாறு பேசும்படியாக கேட்டுக் கொள்ளவுமில்லை.

ஏன்? ஏனென்றால், சமுதாயத்திலாகட்டும், குடும்பத்திலா கட்டும், சபையிலாகட்டும். பெண்களின் பங்கு, ஆண்களின் பங்குகளிலிருந்து வேறுபட்டுள்ளது. பொது இடங்களில் சுவிசேஷத்தைப் பற்றி உத்தரவு சொல்லவும், கேட்கிறவர்கள், மனமாற்றமடைந்து, மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவில் தைரியமாய் பிரசங்கிக்கவும் ஆண்களுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெண்களைப் பற்றிப் பார்க்கும்போது, அவர்கள் அமைதியாய் இருந்து கற்றுக் கொள்ள கடவர்கள் என்று போதிக்கிறது. “சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே. (I கொரி : 14:34,35).

அன்றியும், புருஷர்கள் (கிரேக்கத்தில் “ஆண்கள்”) கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். ஸ்திரீகளும், மயிரைப் பின்னுதலினாலாவது,

பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்.

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடைய வளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினா லெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள், மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயான வளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். (I தீமோ. 2:11-14).

இங்கே, ஆதியிலிருந்து, ஆணோடு பெண்ணுக்கிருக்கும் உறவு சம்பந்தமான இரண்டு கருத்துக்களுக்கு, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய மனதைக் கொண்டு செல்வதை கவனியுங்கள். முதலாவது, ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். இரண்டாவது, ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் என்பது.

மீண்டுமாகப் பார்த்தால், பெண்ணினம் சாத்தானுக்கு தொடர்ந்து செவி கொடுத்தே வருகிறது. அன்று, ஆதாம் பெலவீனமுள்ளவனாயிருந்து ஏவாளுடைய பாவத்துக்குத் துணை போனது போல, இன்றும் ஆண்கள் பெலவீனமுள்ளவர்களாயிருந்து தவறு செய்கிறார்கள். ஆகையால், பெண்கள் தான், பிரசங்க மேடைகளில் நின்று 5.

பிரசங்கிக்கிறார்கள். தங்களைப் பிரசங்கிகளென்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கின்ற சில பெண்களை கவனித்துப் பார்த்தால், பெரும்பாலானவர்கள், தாங்கள் அளிக்கும் செய்திகளிலும், தங்கள் உடைகளிலும், தங்கள் பேச்சுக்களிலும், தீவிரத் தன்மையுடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது, அத்துமீறி செயல்படுகிறார்கள். சமீபத்தில், தங்களைப் பெரியவர்கள் என அழைத்துக் கொள்கிற இரண்டு பெந்தெகொஸ்தே ஊழியக்காரிகள், தங்கள் தலையில் பொய் முடி அலங்காரம் செய்து, மிகப் பெரிய உடை அணிந்து, படோடாபமாய் தங்கள் முகத்தை அலங்கரித்து, விலையுயர்ந்த நகைகளை அணிந்திருந்தார்கள். ஏவாளுடைய முன்மாதிரியைப் பின்பற்றி, தேவன் பெண்களுக்கென சொல்லியிருக்கிற புத்திமதிகளுக்கு துளியும் செவி கொடுக்காமல் நடந்து கொண்டால், நிலைமை எப்படி இருக்கும் என்பதற்கு இவர்கள் சரியான உதாரணம்.

இல்லவே இல்லை. பெண்கள் பிரசங்கிக்கும்படி தேவனால் அதிகாரம் பெறவேயில்லை.

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. அநேகர் இன்று பெண்கள் ............................................................ ................................................... செய்யலாம் என்று நினைக்கிறார்கள்.

2. இன்றைக்கு, பிரிவு சபைகளில் பெண்கள் வகிக்கும் பதவிகளைப் பற்றி விவாதியுங்கள், இவைகள் முதல் நூற்றாண்டில் இருந்தனவா?

3. வேதாகமத்தை நாம் எப்படிப் பெற்றோம்?

4. இயேசு சொன்னார், என்னைத் தள்ளி, ................................. என்று.

ஒரு தூதன் வேதத்திற்குப் புறம்பாக நடக்கச் சொன்னால், அதை நாம் ஏற்றுக் கொள்ளலாமா? இதற்கு உதாரணமாக ஏதாவது ஒரு நிகழ்வைத் தர முடியுமா?

6. புதிய ஏற்பாட்டில், பிரசங்கிக்கும்படி ஒரு பெண் அனுப்பப்பட்டதாக எடுத்துக்காட்டுகள் இல்லை. சரியா/ தவறா?

7. ............, ............ மற்றும் ................................... இல் ஒரு ஸ்திரீயின் பங்கு ஒரு ஆணைப் போலிருப்பதில்லை.

8. I தீமோத்தேயு 2 : 8 - 14 முடிய உள்ள வசனங்களில், பெண்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது?

9. I தீமோத்தேயு 2 : 8 - 14 முடிய உள்ள வசனத்தில் "ஜெபிக்கும்படி புருஷர்களுக்குப் புத்திமதிகள் சொல்லப் பட்டிருக்கிறது, "புருஷன்" என்று பயன்படுத்தப்பட்ட கிரேக்க சொல் "மனித குலத்தை குறிக்கிறதா" (அதாவது ஆண் பெண் இருபாலாரையும்) அல்லது ஆண்களை மாத்திரம் குறிக்கிறதா?

10. புருஷர் மேல் அதிகாரஞ் செலுத்தவும், போதிக்கவும் ஸ்திரீகள் அனுமதிக்கப்படாததற்கு I தீமோத்தேயுவில் கூறப்படும் 2 காரணங்கள் யாவை?



# 8



# ஒரு பெண் போதிக்க முடியுமா?

ஒரு கிறிஸ்தவப் பெண், இருபாலரும் கலந்திருக்கும் கூட்டத்தில் போதிக்க முடியுமா? என்பது கேள்வியாயிருந்தால், பதில் "இல்லை" என்பது தான். I கொரிந்தியர் **14:34,35** மற்றும் I தீமோத்தேயு **2:11-14**ல் உள்ள வசனப் பகுதிகள், ஒரு பெண், சபையாகக் கூடிவந்திருக்கும் போது, ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதை தடை செய்கிறது. "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும் என்று கூறுகிறது.

ஆனால், போதனை என்பது, பொதுவான ஓர் உரை என்பதிலும் அதிகமான பொருளைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும், நம்முடைய அன்றாட வாழ்க்கையை நடத்தும் போது ஒரு வகையில் "போதிக்கவே" செய்கிறோம்.

**❀ நம்முடைய நடத்தையினால் நாம் போதிக்கிறோம், நாம் மற்றவர்களோடு பழகும் விதத்தினால் போதிக்கிறோம். இளம் ஊழியனாகிய தீத்துவுக்குப் பவுல் எழுதும் போது, பெண்கள், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் "தேவ வசனம் தூஷிக்கப்படாதபடி" நல் நடத்தையுடையவர்களுமாய் இருக்க**

வேண்டும் என்கிறார். தீமோத்தேயுவிற்கு, அவர் இளம் விதவைகளைக் குறித்து எழுதுகையில், அவர்களுடைய நடத்தை, "நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமல் இருக்க வேண்டும் என்கிறார். இந்த புத்திமதியை அவர் எழுதியிருப்பதிலிருந்து, நாம் எல்லோருமே ஒருவகையில் போதிக்கிறோம் என்பது தெளிவாகிறது. நல்ல பாடங்களையோ அல்லது தேவ வசனத்தின் மேலும், அவருடைய ஜனங்கள் மேலும் அவமானத்தையும், நிந்தையையும் கொண்டு வருகிற மோசமான பாடங்களையோ மற்றவர்களுக்கு நாம் வாழ்கிற வாழ்க்கையின் மூலம் கற்றுத் தருகிறோம்.

❀ தங்கள் இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள் பெண்கள் இடைவிடாது போதிக்கிறார்கள். சில கிறிஸ்தவப் பெண்கள் அவிசுவாசமுள்ள புருஷர்களைத் திருமணம் செய்ததை மனதில்

## விவாதக் கருத்து



*இந்த உலகத்தில் நாம் தனியே வாழ்கிறதில்லை. நாம் செய்கிற ஒவ்வொன்றும் மற்றவர்களால் காணப் படுகிறது! அது அவர்கள் மேல் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது! நாம் நம்மை "கிறிஸ்துவின் மாதிரி" என்று அழைத்துக் கொண்டு, அவரைப் போல வாழாவிடில் அது அநேகரை கிறிஸ்தவத்திலிருந்து வழி விலகச் செய்கிறது. ரோமர் 2:24ல் தீர்க்கதரிசனம் மேற்கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது போல* "எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புற ஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப் படுகிறதே" *என்பது நம் மூலமாக நிறைவேறும்.*

வைத்து, பேதுரு புத்திமதிகளை எழுதுகிறார். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். ( I பேதுரு 3 : 1-2).

மனைவி கிறிஸ்தவளாகவும், கணவன் அப்படியில்லாத போதும், இரட்சிக்கப்படும்படி அவனுக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை அவனுடைய மனைவியின் உண்மையான நடத்தை தான். அவள் தன்னுடைய கிறிஸ்தவத்தைக் குறித்து அரை மனதாகவும், அவ்வப்பொழுது சபைக்கு போவதும், அநுதின ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்தோ அல்லது மற்றவர்களுக்குப் போதிப்பதைக் குறித்தோ கவலையற்ற வளாயிருந்தால் அப்படிப்பட்டவள் தனது கணவனுக்கு இடறுதலுக்கான கல்லாக மாறும் வாய்ப்பு இல்லாமல் போகாது. அவளுடைய சொந்த நடத்தையே அவள் சுவிசேஷத்தின் உண்மையைக் காணாதபடி குருடாக்கி விடுகிறது. ஆனால், அவள் அன்பாகவும், மரியாதையாகவும், நடந்து தன்னுடைய வாழ்க்கையில், தேவனுக்கே முதல் இடம் என்பதை வலியுறுத்தி வெளிப்படுத்தினால், கணவனும், குடும்பத்தினரும் அவளுடைய நன் நடத்தையிலிருந்து கற்றுக் கொள்வார்கள்.

❀ பிள்ளைகள், வீட்டிலே கற்றுக் கொள்ளும் விசுவாசப் பாடங்கள் பெரும்பாலானவைகளுக்கு, பெண்களே போதகர்களாயிருப்பார்கள். இளம் பிரசங்கியாகிய தீமோத் தேயுவைக் குறித்து நாம் வாசிக்கிறோம். "அந்த மாயமற்ற விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது, அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்

### விவாதக் கருத்து



முதிர் வயதுள்ள தம்பதியர்களைப் பற்றிய ஒரு சம்பவம் உண்டு. அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. கணவன் மிகவும் உறுதியானவர். மனைவியோ கீழ்ப்படிதலுள்ள அமைதலான ஆவியுடையவள். அவள் சுவிசேஷத்தை கற்றுக் கொண்டாள். அதற்குக் கீழ்ப்படியவும் விரும்பினாள். ஆனால், கணவனோ அவள் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால், விவாகரத்து செய்து விடுவேன் என்று அவளிடம் கோபத்தோடு கூறினான். அது மட்டுமல்ல, நான் ஒரு போதும் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று உறுதியாகவும் சொன்னான்.

இருப்பினும் தன் கணவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்கே கீழ்ப்படிய வேண்டுமென்ற பெலனை பெற்றுக் கொண்டாள். முதலாவது, மிகக் கடுமையான எதிர்ப்பையும், அதிருப்தியையும் தெரிவித்த கணவன் ஒரு வருடத்திற்குள் தன் கடினமான இருதயத்தை மிகவும் இளகிய இருதயமாக மாற்றினான். உண்மையாகவே அவனுடைய நம்பிக்கையாக அவள் மாத்திரமே இருந்தாள். அவள் தன் நம்பிக்கையை நிறைவேற்றும்படி பெலன் கொண்டு செயல்படாமல் இருந்திருந்தால் இவன் கீழ்ப்படியக்கூடிய மெல்லிய இருதயத்தை ஒருபோதும் பெற்றிருக்க முடியாது.

**திருக்கிறேன்** (II தீமோத்தேயு 1 : 5) தீமோத்தேயுவின் தந்தை புறஜாதியாக இருந்தார். கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தைக் கட்டுவதற்கு அடிப்படையாக பழைய ஏற்பாட்டினால் **என்பது**

உண்டாகிற விசுவாசம் அவனுக்குள் இல்லை. தீமோத்தேயு, இந்த சத்தியத்தை சிறுபிள்ளையாயிருக்கும் போதே, அவனுடைய பாட்டியும், தாயும் அவனை மடியிலே வைத்து கவனமாய் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

பெண்கள் வேத வசனங்களைப் போதிக்கும் இந்த உதாரணங்கள், அவர்கள் தங்கள் நடத்தையின் மூலம், சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் போதிக்கும் சுதந்திரமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால், ஒரு பெண் தன் குடும்பத்தினர் அல்லாதவர்களுக்கு போதிக்கலாமா?

**❀ ஆக்கில்லா என்கிற மனிதனைக் குறித்தும், அவனுடைய மனைவியாகிய பிரிஸ்கில்லாளைக் குறித்தும் அப்போஸ்தலர் 18 : 2, 25, 26-ல் வாசிக்கிறோம். அவர்கள் கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்தார்கள். அவர்களின் தொழில் கூடாரம் பண்ணுதல். கொரிந்து பட்டணத்திலிருக்கையில் பவுல் இவர்களோடு தங்கினார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்தார்களா அல்லது பவுலால் மனமாற்றமடைந்தார்களா என்பதைப் பற்றி வேதாகமம் நமக்கு ஒன்றும் திட்டமாகக் கூறவில்லை. ஆனால், பவுல் கொரிந்தை விட்டு புறப்பட்டுப் போகையில், இந்தத் தம்பதிகள், எபேசு மட்டும் அவனோடு சென்றார்கள். அங்கே, யூதனாயிருந்த அப்பொல்லோவைக் கண்டார்கள், அவன் "சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான் (வசனம் 24)", அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (வச. 26).**

**இந்த வசனத்தின் மொழி நடையை நாம் கவனித்துப் பார்த்தால், ஆக்கில்லாவும், அவன் மனைவியும் சேர்ந்து, ஒரு கூட்டு முயற்சியாகத்தான் அப்பொல்லோவுக்கு போதித்தார்கள்**

தெளிவாகிறது. அந்த சம்பவம், ஒரு ஜெப ஆலயத்தில், எல்லோருக்கும் போதிக்கிறோமே அப்படியோ அல்லது சபையாக கூடி வந்திருக்கும் போது, உபதேசிக்கிறோமே அப்படியோ அமைந்திருக்கவில்லை, மாறாக, அவனைத் "தங்களோடு சேர்த்துக் கொண்டு" அவர்கள் அவனுக்கு ஒரு வீட்டுச் சூழலிலே போதித்திருக்க அதிக வாய்ப்புண்டு. வீட்டிலே, வேதாகமத்தைப் பற்றி நாம் படிக்கும் அநேக, சமயங்களில், பெண்களும் பங்கெடுத்துக் கொள்வது நல்லதுதான். அச்சமயங்களில், அவளுடைய மனோநிலையும், நடத்தையும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு என்ன சொல்லப்படுகிறதோ அதைப் போலவே: சாந்தமாகவும், அன்பாகவும் இருக்க வேண்டுமே தவிர, "எனக்கெல்லாம் தெரியும்" என்பதைப் போல அமைந்துவிடக் கூடாது.

❀ அச்சுத் தொழில் வெகு முன்னேற்றம் கண்டிருக்கிற இக்காலத்தில், அநேக விதமான புத்தகங்கள் புழக்கத்திலிருப்பதால், சில வேளைகளில், ஒரு கேள்வி கேட்கப்படுகிறது, அது என்னவென்றால், "ஒரு பெண் எழுதிய ஒரு கட்டுரையையோ அல்லது புத்தகத்தையோ ஒரு ஆண் படித்தால் அது தவறா? என்பது தான் இக்கேள்வி. இதுவும், நாம் ஏற்கனவே படித்தது போல், குடும்பத்தில் வேதத்தைப் பற்றி படிக்கையில் பெண்கள் ஈடுபடுவதைப் போன்றே இருக்கிறது, எப்படியெனில், குடும்ப சூழலில், வார்த்தைகள் வாய் வழியாகப் பேசப்படுகிறது. இங்கு, அச்சிலிருக்கிறது அவ்வளவுதான். பொது இடத்தில் போதிப்பதைப் போன்று, இந்த காரியத்தில் எதுவும் நடப்பதில்லை, புத்தகத்தைப் படிப்பவர் தான் விரும்பினால் அதைப் படிக்கலாம் அல்லது அதை மூடி கீழே வைத்துவிடலாம். அவர் எதைத் தெரிவு செய்யவும் அவருக்கு உரிமை உண்டு. அவர் படிக்கும் போது, அருகில் இல்லாத அந்த ஸ்திரீயானவள் தலைமைக்கான எந்த ஒரு அதிகாரத்தையும் (அந்த ஆண் மேல்) செலுத்துவதில்லை.

❀ பெண்கள் பொதுவான இடங்களில் பிரசங்கிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏதாவது உண்டா? பவுல், தீத்துவுக்கு, முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பற்றி எழுதும் போது, "பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும்...." (தீத்து 2:3-5) என்று எழுதுகிறார். ஆகவே, தேவன் பவுலைக் கொண்டு பெண்கள் மற்ற பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் போதிக்கலாம் என்று அனுமதி மாத்திரம் தராமல், கட்டளையும் கொடுத்திருக்கிறார். இது வீட்டிலோ, பொதுவான இடத்திலோ, சிறு வகுப்பிலோ, பெரிய வகுப்புகளிலோ, கருத்தரங்குகளிலோ, ஆண்கள் இல்லாத எந்த இடத்திலும் அப்படிச் செய்யலாம்.

❀ சிறிய ஒரு கிராமத்திலோ அல்லது வேறு இடத்திலோ பெண்கள் மாத்திரம் இருக்கக் கூடிய சபைகள் இருக்க வாய்ப்புகள் உண்டு. அப்படிப்பட்ட வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும்? தங்களை வழிநடத்துவதற்கு ஆண்கள் இல்லை என்பதால், சபையாக கூடிவருவதையே விட்டுவிட வேண்டுமா? இல்லை; அந்த சபையின் அங்கத்தினர்கள் அனைவருமே பெண்களாக இருந்தால் அவர்களே ஆராதனையை நடத்தலாம், எந்த ஒரு ஆணும் அக்கூட்டத்தில் இல்லாத வரை.

ஆகவே, பெண்கள் போதிக்கலாமா என்பது கேள்வியல்ல? ஆனால், அவர்கள் வழிநடத்துகிறவர்களாக, தலைமைப் பொறுப்பை ஏற்கலாமா? என்பதுதான் கேள்வி. ஆண்கள் இருக்கும் கூட்டத்தில் பெண்கள் பிரசங்கிக்கக் கூடாது. கிறிஸ்தவர்களாக கூடிவரும்போது, அதுவும் ஆண்களும் இருக்கும் போது, ஆராதனையின் பங்கை ஒரு ஆண்தான்

நடத்த வேண்டும். இது ஆண்களுக்கென்று தேவன் தந்த கடமையாக இருக்கிறது, அதை அவர்கள் பெண்களிடம் கொடுக்கும் போது, அந்த பெண்கள் எவ்வளவு திறமையுள்ளவர்களாக இருந்தாலும் கூட இதுதான் நிலைமை. இப்படி பொறுப்புகளை பெண்களிடம் கொடுக்கும் ஆண்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள் என்பதுதான் உண்மை.

சிறு பிள்ளைகளுக்கும், மற்ற பெண்களுக்கும், அவிசுவாசிகளுக்கும் போதிப்பதே மகத்தானதொரு செயலாகும். அதற்கே அதிக நேரம் செலவாகும். அதைப் பெண்கள் அதிக கவனத்தோடு செய்தாலே, அநேகர் தங்கள் நித்தியத்தை, தேவனோடு கழிக்க முடியும். ஆகவே, பெண்களால் என்ன செய்யக் கூடாதோ அதைப் பற்றிய சர்ச்சையில் ஈடுபடுகிறதும், தர்க்கம் பண்ணுகிறதுமாயிராமல், அவர்களால் என்ன செய்ய முடியுமோ அதில் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது.

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. இருபாலரும் கூடியிருக்கும் கூட்டத்தில் பெண்கள் பிரசங்கிக்கலாமா?

2. நம்முடைய .................................. யினாலும், மற்றவர்களோடு .................................. மற்றவர்களுக்கு போதிக்கலாம்.

3. விசுவாசியாத கணவருக்கு ஒரு கிறிஸ்தவ பெண் எப்படி போதிக்க முடியும்?

4. பெலவீனமான மற்றும் அரைகுறையான கிறிஸ்தவர்களான புருஷனோ, மனைவியோ, தன் குடும்பத்தின் மற்ற நபர்களுக்கு இரட்சிப்பின் கதவைப் பூட்டி, தங்களுடைய

மோசமான முன்னுதாரணத்தின் மூலம், வேறு யாரும் அவர்களை நெருங்க முடியாமல் செய்து வருகிறார்களா?

5. பெண்கள் தங்கள் .................................. விசுவாச போதகர்களாக இருக்கிறார்கள்.

6. தன் குடும்பத்தைச் சாரதவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பெண்கள் போதிக்கலாமா? உதாரணம் தருக.

7. எந்த சூழலில் ஒரு பெண் போதிக்க அனுமதிக் கப்படுகிறாள்?

8. பெண்கள் போதிக்கக் கூடிய பல சூழ்நிலைகளைப் பற்றி படித்த பின், உண்மையான கேள்வி .................................. பற்றியது என்பதை நாம் உணருகிறோம்.

9. .................................. கூடியிருக்கும் பொதுவான கூடுகையில், எல்லாவற்றையும் .................................. செய்யவேண்டும் .................................. உட்பட.

10. கூட்டத்திலிருக்கும் ஒரு பெண், அங்குள்ள அனைத்து ஆண்களையும் விட அதிக தகுதியுள்ளவளாகவும், கல்வியுடையவளாகவும், சிறந்த பேச்சாளராகவும் இருந்தால், போதிக்கவும், பிரசங்கிக்கவும் அவள் அனுமதிக்கப்படலாமா? ஏன் அல்லது ஏனில்லை?

11. தேவன், பெண்களுக்கு போதுமான மற்றும் முக்கியமான பொறுப்புகளை கொடுத்திருக்கிறாரா? நாம் எதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்?

# 9



# பொதுவான கூடுகையில் ஒரு பெண் பேசும்படி அழைக்கப்பட்டால்...

“பெண்கள் விடுதலை” இயக்கங்கள், பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பொதுவான கூடுகையில் வெளிப்படையான தலைமைத்துவப் பங்கைச் செய்யும்படி, பெண்களுக்கு அதிகாரம் தரும்படி, எவ்வகையான வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகிறது.

“உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்திரவு கொடுக்கிறதில்லை....” (I தீமோ. 2:12) என்று வேதாகமம் கூறுகிறதை உணர்ந்து கொண்டு, ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. “மூப்பர்கள் அல்லது சபையின் ஆண் அங்கத்தினர்கள், பெண்களின் மேல் அதிகாரம் செலுத்த முடியும் என்பதால், ஒரு மூப்பர், ஒரு பெண்ணை ஆராதனையில் ஜெபிக்கும் படியாகவோ அல்லது போதிக்கும்படியாகவோ அழைத்தால், அது அனுமதிக்கப்படக் கூடியதா? ஏனென்றால், ஒரு பெண் இப்படிச் செய்யும் போது மூப்பரின் அதிகாரத்திற்குத்தானே கீழ்ப்படிகிறாள்?”

இது முறையானது தான் அல்லது ஒழுங்கானது தான் என்பது போல் தோன்றும். ஆண்களே, அவளை ஜெபிக்கும்படி அல்லது போதிக்கும்படி அழைக்கிறபோது, பெண்கள் எப்படி

## விவாதக் கருத்து

*நம் மத்தியில், அப்போஸ்தலனாகிய பவுல் இன்றைக்கு இருந்து, அவர், "நான் (பரிசுத்த ஆவியின் அதிகாரத்தின்படி) பெண்கள் போதிக்கும்படி அனுமதிப்பதில்லை...." என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம், அவர் முகத்திற்கு நேராகவே ஒருவன், "ஆனால், அதில் தவறில்லை என்று நான் சொல்கிறேன்!" என்பானானால் அது எப்படியிருக்கும்? இப்படி அகங்காரமான பதிலை சொல்வதற்கு சாதாரண மனிதர்களாகிய இவர்கள் யார்?*



ஆண்களின் அதிகாரத்தை மீறி நடக்க முடியும்? என்று. ஆனால், ஒரு முக்கியமான கருத்தை நாம் இங்கே மறக்கக்கூடாது : "ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார்" (I கொரி. 11:3) பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தினால் தான் வேதாகமம் எழுதப்பட்டது. மனிதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படவில்லை. சபை கூடிவரும் வேளையில், ஆண்கள் தலைமையேற்று நடத்த வேண்டும் என்று எழுதும் போது, பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலால்தான் அப்படி எழுதப்பட்டதேயொழிய, இவைகள் எழுதியவருடைய கருத்துக்களோ, வார்த்தைகளோ இல்லை.

ஒரு மூப்பரோ அல்லது சபையின் ஆண் அங்கத்தினர்களோ, இருபாலரும் கூடியிருக்கும் ஒரு கூட்டத்தில் ஜெபிக்கும்படியோ அல்லது பிரசங்கிக்கும்படியோ ஒரு பெண்ணை அழைத்தால், அவர் வேதாகமத்தின் தெளிவான போதனைக்கு விரோதமாகச் செயல்படும்படி

அவளைத் தூண்டுகிறார் என்று பொருள். ஒரு புருஷனாக, பெண்ணின் மீது அதிகாரம் செலுத்தும்படியான பொறுப்பிலிருந்தாலும், கர்த்தருக்கு மிஞ்சிய அதிகாரம் இவர்களுக்கு ஒரு போதும் கிடையாது. இப்படிப்பட்ட காரியங்களை செய்யச் சொல்வது துணிகரமான பாவமாயிருக்கிறது. இப்படிப்பட்ட செயல், வேத வசனங்களால் பலமாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக இந்தக் கட்டளையைப் பின்பற்றுவதென்பது தனிப்பட்ட சூழல்களில் ஆரம்பிக்கும்: இரண்டு தம்பதியர் உணவு விடுதியில் இருக்கிறார்கள், அதில் ஒரு ஆண், பெண்ணை உணவுக்காக தேவனுக்கு நன்றி சொல்லும்படியாக அழைக்கிறார் அல்லது ஒரு வீட்டில் இருபாலரும் கூடியிருக்கும் போது ஜெபத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கூடியிருக்கின்ற அச்சமயத்தில் அவர்கள் "சங்கிலி" தொடர் ஜெபத்தை நடத்த வேண்டியிருக்கிறது. அது முழுவதுமாக சபையின் ஆராதனையாக அமையவில்லை என்பதால், இதில் வேதத்தின் கட்டளையை பின்பற்றுவதற்கு மாறாக, அவரவர் நினைப்பது போல் அமைத்துக் கொள்ளலாம் என்கின்ற தவறான முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

இருப்பினும், ஜெப வேளை என்பது, எப்போதும் ஆராதனை வேளைக்குரியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட சமயத்தில் ஒரு ஆண், பெண்ணை எல்லாருடைய மனதையும் வழிநடத்தி தேவனுடைய சிங்காசனத்தைச் சென்றடையும் ஜெபத்தைச் செய்யும்படியாக அழைப்பது துணிகரமான செயலாக இருக்கிறது. வேதாகமத்தில் ஆண், பெண் இருபாலரும் கூடியிருக்கின்ற இடத்தில் தேவனுடைய சிங்காசனத்தில் எட்டக்கூடிய செயல்களில் வழிநடத்தும்படியாக நமக்கு வேத உதாரணங்கள் இல்லை, ஆகவே நாம் அப்படிப்பட்டதான செயல்களைச் செய்வதற்கு அதிகாரமில்லை.

இந்த கேள்விக்குப் பதில் சொல்லும்படியான, இதே போன்றதொரு வினா உபாகமப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. தீர்க்கதரிசியோ அல்லது சொப்பனக்காரனோ (அதிகாரத்தை எடுத்துக் கொள்கிற யாரும்) இஸ்ரவேலரை வழிவிலக்க முயற்சித்து, "அற்புதத்தையும்", ஒரு "அடையாளத்தையும்" நடத்தி வேறே தேவர்களைப் பின்பற்றுவோம் என்று சொன்னால், "அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக...நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக் கொள்வீர்களாக, அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனாக்காரனும் கொலை செய்யப்படக்கடவன்; நீங்கள் நடக்கும்படி உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியை விட்டு உங்களை விலக்கும்படி.....பேசினான்" (உபா.13 : 2 – 5) என்று.

நாம் மோசேயின் கட்டளைக்கு உட்பட்டோ அல்லது தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்களைக் கொலை செய்யும் அதிகாரத்தை, தேவனுடைய ஜனங்களே பெற்றிருந்த அந்த நாட்களிலோ நாம் வாழவில்லை. ஆனால், தேவன் சொன்னதைக் கேட்டு, அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய முக்கியத்துவத்தை, நாம் என்றைக்கும் குறைத்துக் கொள்ளக் கூடாது. நம்முடைய சொந்த எண்ணத்தினால், கர்த்தரின் கட்டளையை மாற்றுவதும், அவர் ஏற்படுத்திய ஒழுங்குமுறையை மீறுவதும், ஒருவரின் மிக மோசமான குற்றமாகும். ஒரு கிறிஸ்தவன் இப்படிப்பட்ட பாவத்திற்கான குற்றத்தை சுமக்க விரும்பவே கூடாது!

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. கலாச்சாரம் மாறியிருப்பதால், அதனடிப்படையில் கிறிஸ்தவர்கள் ஆணுக்கு, பெண் கீழ்ப்படிய வேண்டும் என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமா?

2. ஸ்திரீக்கு தலை யார்? புருஷனுக்கு தலை யார்?

3. வேதாகமம் தலைமைத்துவக் கேள்வியை தொடர்ந்து எழுப்புவதேன்?

4. .................வரின், ................. படி தான் வேதாகமம் எழுதப்பட்டது, அது ................. ................. .................................. ளல்ல.

5. ஒரு ஆண், ஒரு பெண்ணை, இரு பாலரும் கூடியிருக்கும் கூட்டத்தில் ஜெபிக்கும்படியோ, போதிக்கும்படியோ அழைத்தால், உண்மையில் அவளை என்ன செய்யும்படி கூறுகிறான்?

6. இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும் போது, அது ஒரு மூப்பரை ................. மேலான ................. கொள்ளும்படி செய்கிறது.

7. இது எப்படிப்பட்ட பாவம்?

8. ஆணும், பெண்ணும் கலந்து கொள்ளும் சங்கிலித் தொடர் ஜெபத்தில் ஒரு பெண் ஜெபிக்கிறதற்கு அனுமதி உண்டா?

9. தேவ வழிநடத்துதலை மீறும் மூப்பர்களைப் பற்றி உபாகமம் என்ன முன்மாதிரியைக் காண்பிக்கிறது?

10. நீங்கள் உங்கள் ................. ................. பின்பற்றி, அவருக்குப் ................., அவர் ................. ................., அவர் ................. ................. அவரைச் ................., அவரைப் .................

11. பொய்யான அல்லது தவறான ஆவிக்குரிய தலைமை குறித்து தேவன் எப்படி கண்டிப்புள்ளவராயிருந்தார்?

12. நாம் இன்று பழைய பிரமாணத்தின் கீழ் வாழாவிட்டாலும், தேவனின் முறைமைகளை ................., அவர் நியமித்த நியாயங்களை ................., ................., ................. .................

## 10



# ஆராதனையில் ஒரு பெண் முக்காடிடுவது அவசியமா?

சபையாகக் கூடி வரும்போது, பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டுமென I கொரிந்தியர் 11ம் அதிகாரம் வலியுறுத்துவதாகக் கூறுவோர் பலர் உண்டு. இப்படிக் கூறுபவர்கள், ஒரு பெண், பெண்களுக்கென்று பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் போதும், தான் வெளியில் சந்திக்கும் ஒரு தோழியுடன் வேதாகமத்தைக் குறித்தான உரையாடல் நடத்தும் போதும் அல்லது வீட்டு வேலைகளைச் செய்து கொண்டே ஜெபிக்கும் போதும் முக்காடிட வேண்டுமா என்பதைப் பற்றி ஒன்றும் கூறுவதில்லை.

பிற கலாச்சாரங்களைப் பின்பற்றும் மற்றவர்கள், ஸ்திரீயானவள் எல்லா வேளையிலும் கட்டாயம் முக்காடிட வேண்டும் என்கிறார்கள். சிலர், தலைமுடி மாத்திரமல்ல, முகமும், முழுச் சரீரமும் மறைக்கப்பட வேண்டுவது அவசியம் என்கிறார்கள்.

இப்படி ஒன்றைப் பற்றி, வேறுபட்ட கருத்துக்கள் வருவதற்கு என்ன காரணம்? I கொரி. 11 : 2 முதல் 16 வசனப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள தலைமைத்துவம், பழக்க வழக்கம், முக்காடிடுதல் பற்றிய உபதேசங்களைத் தவறாகப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட குழப்பமே.

ஸ்திரீகளின் ஆடையைக் குறித்தோ அல்லது ஆராதனையில் பெண்கள் எவ்விதமான உடை அணிந்திருக்க

**விவாதக் கருத்து**



*உங்கள் கலாச்சாரத்தில், பெண்கள் முக்காடிடுவது, தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிவதின் அடையாளமாகவோ அல்லது மரியாதையின் சின்னமாகவோ இருக்கிறதா? இந்த வழக்கத்தை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா? மேல் சொல்லப்பட்ட வேத வசனங்களை படித்திருக்கிறீர்களா? அப்படியானால், அது தலையில் முக்காடிட வேண்டும் என எதிர்பார்ப்பதாக நம்புகிறீர்களா?*

வேண்டும் என்பதைக் குறித்தோ, I கொரி. 11ம் அதிகாரம் சுட்டிக்காட்டுவதில்லை என்பதை இந்தப் பாடத்தின் ஆரம்பத்திலேயே கூறுவது அவசியம். "அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைப்பதின் மூலம்" விசேஷித்த விதமாகப் பரிசுத்த ஆவி அருளப்பட்ட முதல் நூற்றாண்டுக் காலத்தில், பெண்களும் வாக்குத்தத்தத்திற்கு உட்பட்டவர்களாயிருந் தார்கள். "...... மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்...." (அப். 2:17) என்றுள்ளது.

அப். 21:9ல் பிலிப்புவுக்கு தீர்க்கதரிசனம் சொல்லும் நான்கு கன்னியாஸ்திரீகள் குமாரத்திகளாக இருந்தார்கள் என வாசிக்கிறோம்.

இருப்பினும், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பவுல் கூறுவதுபோல், ***ஆண்களும், பெண்களும் கலந்திருக்கும் சபை கூடுதலில் பெண்கள் பேசுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.*** "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை, அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. (I கொரி. 14:35) ஆகையால், பிலிப்புவின் குமாரத்திகள் தீர்க்கதரிசனம் உரைத்தது ஸ்திரீகள் மாத்திரம் கூடிவந்த இடங்களிலோ, தனிப்பட்ட சூழ்நிலையிலோ, இல்லங்களிலோ, அல்லது தனி நபர்களிடமோ நடந்திருக்க வேண்டும்.

சபையில் பெண்களின் ஒட்டுமொத்த பங்குகளைப் பற்றி வெளிச்சமிட்டுக் காட்டும் இந்த வேத வசனப் பகுதியாகிய I கொரி 11ம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில், பொதுவான சூழ்நிலைகளில் பெண்கள், அமைதலாகவோ அல்லது கேட்கப்படும்படியாகவோ ஜெபிக்கும்போதும், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தீர்க்கதரிசனம் உரைக்கும்போதும், தனிப்பட்ட மற்றும் தனிநபருடன் உரையாடும்போதும், மற்ற பெண்களுக்குப் போதிக்கும்போது அணிய வேண்டிய முக்காடு பற்றியும், ஆடைகள் பற்றியும் இந்த அதிகாரம் பேசுகிறது என்ற முடிவுக்கு வரலாம்.

கிறிஸ்தவப் பெண்களுக்குள்ளாக ஆவிக்குரிய ஊழியம் செய்கிறவர்களுக்கும், புற ஜாதி பெண் வேலைக்காரிகளுக்கும் ஒரு வேறுபாட்டைக் காண்பிக்கும்படி, காரியங்கள் வகையறுக்கப்பட்டிருப்பதை நாம் இங்கு காண முடியும். **இந்நிருபம் எழுதப்பட்ட அந்த நாட்களில் தங்கள் கலாச்சாரத்தின்படியாக, தாங்கள் யார் என்று காண்பிக்கும்படி, கோயில் வேசிகள் தங்கள் தலையை மூடாமலும், தலையை மொட்டை அடித்துக் கொண்டும் இருக்கும்போது,** கிறிஸ்தவப்

பெண்கள், தேவன் ஏற்றுக் கொள்ளும்படியாகவும், ஒழுக்கமாகவும் எப்பொழுதும் உடையணிவது அவசிய மாயிருந்தது. அதுவும் குறிப்பாக, ஜெபிப்பதும், தீர்க்கதரிசனம் சொல்லுவதும், முற்றிலும் தங்களுடைய வேலையாயிற்றே என்று பிறர் கருதக்கூடிய காரியத்தில், ஒரு பெண் தன்னை இப்படி உடுத்திக் கொள்வது அவசியம்.

பொதுவான வழக்கத்தின்படி தலையை மூடிக்கொள்ளுகிற கிறிஸ்தவப் பெண், தன்னை ஒரு புறஜாதிப் பெண்ணிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கிறதோடல்லாமல், ஆவிக்குரிய வேலை செய்யும்போது, சபையிலிருக்கிற மற்ற ஆண்களோடு தான் போட்டியிடாமல், தன் கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்கிறேன் என்ற உண்மையையும் உணர்த்துகிறாள்.

பொதுவான எண்ணத்திற்கு மாறாக, இவ்வசனப் பகுதி, முழு சபையாக கூடிவரும்போது, ஒரு பெண் அணியவேண்டிய உடை குறித்து பேசுவதுபோல் தெரியவில்லை. உண்மையில், ஒரு பெண் தன் தனிப்பட்ட, வாழ்வில் அணியும் உடைகளே, சபை கூடிவரும்போது அவள் அணியக்கூடிய உடையாக இருக்கலாம், வசனங்கள் பொதுவான கூடுகையைக் குறித்துப் பேசவில்லை என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். I கொரிந்தியர் 11ம் அதிகாரம், 2 முதல் 16 வசனப் பகுதிகளில் "சபை கூடி வருதல்" (11:18) "நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது" (11.18) "நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது" (11:20) சபையாரெல்லாரும் ஏகமாய் கூடி வந்து" (14:23) "நீங்கள் கூடி வருகிறபோது" (14:26) என்ற சொற்றொடர்கள் இடம் பெறவில்லை.

இப்பொழுது, நாம் வசனப்பகுதியை ஆராய்ந்து பார்ப்போம்

இந்த வேத பகுதி வேறு எதைப் போதித்தாலும், தேவன் ஏற்படுத்தியிருக்கிற, அதிகார ஒழுங்கின் நிச்சயத்திலிருந்து,

I கொரி. 11 : 2ல் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளை (கலாச்சாரம், வழக்கம்) கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்

"ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும் கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்

இம்மியளவு நாம் விலகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வேளை, எந்த வகையான முக்காடு பற்றி இங்கே பேசுகிறது என்றும் அல்லது எப்படிப்பட்ட ஓர் அதிகாரம் இங்கே விவாதிக்கப்படுகிறதென்றும் நாம் உண்மையாகவே

ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்க தரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண் டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப் படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்க தரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப் படுகிறதும், சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக்கொண்டிருக்கக்கடவள் I கொரி.11 : 4-6.

ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு கொண்டு அதனடிப் படையில் தவறான முடிவுக்குக் கூட வந்து விடக் கூடும். எது சரி என்று தீர்மானிப்பதற்குப் போதுமான வசன ஆதாரங்கள் இதற்காக இல்லாததால், முடிவு தவறாக இருந்தாலும், தேவன், கண்டிப்பாக அதை மன்னிப்பார். ஆனால், ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயி ருக்கிறார். ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்ற தெளிவான போதனையின் உட்கருத்தை தவறாகப் புரிந்துகொள்ள முடியாது. இதை ஒதுக்குவது அல்லது மறுதலிப்பது தேவனுடைய திட்டத்தின் அடித்தளத்தையே அசைக்கிற ஒரு செயலாக இருக்கும்.

தேவனுடைய அதிகார ஒழுங்கை (தேவன், கிறிஸ்து, மனிதன், மனுஷி) தெளிவாக வரிசைப்படுத்திக் கூறியுள்ள பவுல், ஜெபிக்கும்போதோ, தீர்க்கதரிசனம் உரைக்கும்போதோ தலையை மூடுதல் அல்லது மூடாமலிருத்தல், ஒருவரின் தலையை கனம்படுத்தும் அல்லது கனவீனப்படுத்தும் என்கிறார். ஒரு புருஷன், தன் தலையை மூடி ஜெபித்தால் அது அவன் தலையை அவமானப்படுத்துவதாகும், (அது அவனின் சொந்த தலையையா அல்லது புருஷனுக்கு தலையாயிருக்கிற கிறிஸ்துவா என்பது தெளிவாய்த் தெரியவில்லை). ஒரு கிறிஸ்தவ புருஷன், இப்படிப்பட்ட கனவீனத்தைக் கொண்டுவர விரும்பமாட்டான் என்பதை உணர்ந்து கொண்டால் அது போதுமானது.

இதைப் போலவே, தலையை மூடாமல் ஜெபிக்கிற பெண், தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். மீண்டும், அவள் கனவீனப்படுத்துவது, தன் சொந்த தலையையா அல்லது தன் தலையாகிய புருஷனையா என்பது சரிவரத் தெரியவில்லை. கிறிஸ்தவப் பெண், இதில் ஒன்றையாகிலும் அவமானப் படுத்தும் குற்றத்தைச் செய்யக்கூடாது.

## விவாதக் கருத்து



*இந்த வசனத்தில், பவுல் ஆவியானவரின் ஏவுதலினால் "அது வெட்கமானால்" என்ற நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டு, முக்காடிடுவது சம்பந்தமாக சில கட்டுப்பாடுகளைச் சொல்லியுள்ளார்.*

*ஒரு தேசத்தின் கலாச்சாரம் அல்லது வழக்கம். தலைமுடியின் அளவு குறித்தும், முக்காடிடாமலிருப்பது வெட்கமானது அல்ல என்றும் சொன்னால், இந்தக் கட்டுப்பாடுகள் அங்கே பொருந்துமா?*

ஆனால், இத்தருணத்தில் நாம், பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களோடு விவாதிக்கிற சூழ்நிலை, நிபந்தனைக் குட்பட்டது என்பதைக் காண தொடர்ந்து படிப்பது அவசியம் : "தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால்" என்று சொல்வதால், இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும், அதாவது, தன்னடக்கம் என்பதற்கு தேவன் கொடுத்துள்ள பிரமாணம் மீறப்படாத அளவில், ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய உடை அல்லது அவமானகரமான உடை எது என்பதை, கலாச்சாரமும், வழக்கமும் ஓரளவுக்கு எடுத்துச் சொல்கிறது.

ஆதாமும், ஏவாளும் ஆதியிலே பாவம் செய்து, தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து கொண்டபோது, தேவன், ஏவாளின் மீதான ஆதாமின் தலைமைத்துவத்தை நிலை நாட்டினார் என்றும், அவர்களின் நிர்வாணத்தை மறைக்க தோல் உடைகளை உண்டாக்கினார் என்றும் வேதாகமம் விளக்குகிறது. (ஆதி. 3:16-21).

இதில், இரண்டு முக்கிய கருத்துக்களை கற்றுக் கொள்ள வேண்டும்.

1. குடும்பத்தில் அதிகார ஒழுங்கு (மனுஷன் தலையாகவும், மனுஷி அவனுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்பதும்) ஒரு சட்டமாயிருக்கிறது, அது, ஆதியிலிருந்து உண்டான ஒரு கலாச்சாரமல்ல.
2. நமது நிர்வாணத்தை மறைப்பதற்காக தேவன் நமது தேகத்தை உடைகள் உடுத்தி மறைக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். ஏவாளின் தலை மறைக்கப்பட வேண்டுமென்றோ அல்லது முக்காடிடப்பட வேண்டுமென்றோ அங்கே ஒன்றும் சொல்லப்படவில்லை. இது, முக்காடிடுவது, ஆதியிலிருந்து ஒரு கட்டளையாக கொடுக்கப் படவில்லையென்று சொல்வதைப் போலிருக்கிறது.

இது தொடர்பாக, நாம் தலைமுடி, முக்காடு, இன்னும் முக்காடு சம்பந்தமான பிற வகைகள், எல்லாக் கலாச்சாரங்களிலும், காலங்காலமாக எவ்விதம் கடைப்பிடிக்கப்பட்டதென்பதை கவனிக்க வேண்டும். அதே நேரத்தில், ஒருவனுடைய வாழ்க்கை முறை, நம்பிக்கை, ஒழுக்கம் இன்னும் ஒருவனுடைய மார்க்க நம்பிக்கைகள் குறித்தும் வேத வசனங்கள், எதை எடுத்துச் சொல்லுகிறது என்பது குறித்தும் நாம் கவனிக்க வேண்டியது முக்கியமாகும்.

**❀ பழைய ஏற்பாடு முழுவதிலும், யூதப்பின்னணியைக் கொண்ட புதிய ஏற்பாட்டிலும், தலையை "மூடாமலிருத்தல்" என்பது சவரம் செய்வதற்கு சமமாக அர்த்தம் கொள்ளப்பட்டிருக்கிறது. லேவியராகமம் 10 : 1-ல் நாதாபும், அபியூவும், தங்கள் பாவத்தினிமித்தம் கொல்லப்பட்டபோது, துக்கத்தின் அடையாளமாய் ஆரோன் அன்றைய வழக்கத்தின்படி தனது தலைப்பாகையை எடுத்துப் போட தேவன் தடைசெய்தார். யோபு 1 : 20ல் யோபு தனது பிள்ளைகள் சூறைக்காற்றால் மடிந்து**

போனார்கள் என்ற செய்தி கேட்டு, தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு, தனது தலையை மொட்டை அடித்துக் கொண்டான்.

மோசேயின் பிரமாணத்திற்குக் கீழிருந்த ஆசாரியர்கள், "மகிமையாகவும், அலங்காரமாகவும், தலைப்பாகையை அல்லது தொப்பியை அணிந்தார்கள். (யாத் 28 : 40 ; 39:28) பிரதான ஆசாரியன் தன் தலைப்பாகையோடு "பரிசுத்த கிரீடமும்" (29:6) அணிந்திருந்தார். யூத மக்கள் தங்கள் ஆராதனையில் இன்றும் ஒருவிதமான தொப்பிகளை அணிகிறார்கள்.

❀ இதற்கு மாறாக, ஒரு குஷ்டரோகி, தன் தலையை மூடாதவனாகவும், தன் தாடியை மூடியவனாகவும் இருந்திடல் வேண்டும் என்று கூறுகிறது. (லேவி 13:45)

❀ எண்ணாகமம் 6ம் அதிகாரத்தில், நசரேய விரதம் மேற்கொண்ட ஒருவன், அந்த விரதத்தைக் கைகொள்ளும் வரை மயிரை கத்திரிக்காமல் இருக்க வேண்டும். சிம்சோன் நசரேய விரதத்தை மேற்கொண்டவன்.

❀ ஆதியாகமம் 24: 65ம் வசனமானது, தங்களுடைய திருமணத்திற்கு முன்பு, ரெபெக்காள், வயல்வெளியில் ஈசாக்கு தனக்கு எதிர்பட்டு வருகிறதைக் கண்டு, "அப்பொழுது, அவள் முக்காடிட்டுக் கொண்டாள்" என்று சொல்கிறது. இது, திருமணமாகாத இளம்பெண்கள் தங்கள் அடக்கத்திற்கு அடையாளமாக முக்காடிட்டுக் கொள்ளும் அன்றைய வழக்கத்தை எடுத்துச் சொல்கிறது.

❀ ஆனாலும், தாமார், யூதாவை ஏமாற்ற நினைப்பதைக் குறித்து வாசிக்கையில், " தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களை (அதில் முக்காடு இல்லை என்பது தெளிவாய் தெரிகிறது) களைந்து முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டாள் என்று ஆதியாகமம் 38:14 சொல்கிறது. முக்காடானது, அந்தக்

கலாச்சாரத்தில், வேசித்தனத்தின் ஓர் அடையாளமாக மாறியிருக்கிறது எனத் தெரிகிறது.

❀ சாராள் மற்றும் ரெபெக்காள் ஆகிய இருவரையும் எகிப்து மற்றும் பெலிஸ்திய ராஜாக்கள், "அவர்கள் அழகுள்ளவர்கள் என்று கண்டு", தங்கள் அரண்மனைக்குள் வலுக்கட்டாயமாகக் கொண்டு சென்றார்கள் என்று ஆதி 12:14, 26:7 வசனங்களில் வாசிக்கிறோம். அந்த காலக்கட்டத்தில், வாழ்ந்த பெண்களின் அழகை, யாரும் காணாதபடிக்கு முக்காடிடும்படியான கலாச்சாரம் இல்லை என்பது, இதனால் நமக்குத் தெரிகிறது.

❀ முதல் நூற்றாண்டிலே, கொரிந்து பட்டணத்து புறஜாதிகளின் கலாச்சாரத்தில், பெண்கள் - அப்ரோடைட் தேவதையின் - ஆசாரியைகளும், மதரீதியிலான வேசிகளுமாக இருந்தவர்கள் - தங்களுடைய தொழிலின் அடையாளமாக முடியை "கிராப்" வெட்டிக் கொள்வார்கள் அல்லது மொட்டை போட்டுக் கொள்வார்கள். ஒரு கிறிஸ்தவப் பெண் அவர்களைப் போல இப்படித் தலையை மூடாமலிருப்பது அவமானமான ஒன்றாக இருந்தது. ஏனெனில், அது, அவள் தன்னையும், தன் கணவனோடு தனக்கு இருந்த உறவையும் பற்றி மற்றவர்கள் ஒரு தவறான முடிவுக்கு வரக் காரணமாக அமையும் என்பதால்.

❀ கிரேக்கர்கள், ரோமர்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் என்று பலதரப்பட்ட மக்களையும், கலாச்சாரத்தையும் கொண்டதுதான் கொரிந்துபட்டணம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் முக்காடிடுதல், சிகை அலங்காரம் போன்றவை, அவர்கள் யார் என்பதை அடையாளப் படுத்துவதாக இருந்தது.

❀ அதேபோன்று, இன்றைக்கும் சமுதாயத்தில் சீரழிவு சக்திகளால் கொண்டுவரப்பட்டுள்ள விதவிதமான சிகையலங்காரத்தை பின்பற்றத் துணியும் கிறிஸ்தவ பெண்ணுக்கு, அது அவமானகரமானதாயும், வெட்கக்கேட்டை வெளிப்படுத்துவதாயும் இருக்கும். அதே போன்று, முடியை

**நீளமாக வளர்க்கும் சிலவகையான ஆண்களின் சிகையலங்காரம் அதிகாரத்தை எதிர்ப்பதற்கும் நிலை நாட்டப்பட்ட முறைமையை தள்ளிவிடுவதற்கும் அடையாளமாக வெளிப்படையாகத் தெரிகின்ற ஒன்றாக உள்ளது.**

பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருப்பது உண்மைதான். ஓர் உடன்படிக்கையிலே இருக்கும் சட்டம் மற்றொன்றிலிருக்கும் சட்டத்தின் மேல் அதிகாரம் செலுத்த முடியாது. ஆகையால், பழைய ஏற்பாட்டில்

> *"புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை. ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்ல. ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும். (I.கொரி 11:7-10).*

ஆண்கள் தலைபாகையையும், நீண்ட முடியையும் உடையவர்களாகவும், பெண்கள் முக்காடிட்டும், முக்காடிடாதவர்களாகவும் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கும். உண்மையை வைத்து, புதிய ஏற்பாட்டில், கிறிஸ்தவர்களுக்கு இப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று நாம் முடிவெடுத்து விட முடியாது.

ஆனாலும், (ஆசாரியர்கள், நசரேய விரதமிருந்தோர், குஷ்டரோகிகளின் தலை முடியைத் தவிர) நாம் கண்ட இக்காரியங்கள், கலாச்சாரம் மற்றும் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்றதொரு முடிவுக்கு நாம்

வரலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேவன் முடியைக் குறித்தோ முக்காட்டைக் குறித்தோ குறிப்பாக எதையும் கட்டளையிடவில்லை.

ஆனாலும், அப்போதிருந்த கலாச்சாரத்தை மனதில் கொண்டு, கொரிந்துவிலிருந்த கிறிஸ்துவர்களுக்கு கட்டளைகளை எழுதியுள்ளார் பவுல்.

உலகத்தின் அப்பகுதியில், அன்றைக்கு நடைமுறையிலிருந்த வழக்கத்தின்படி, பக்தியுள்ள யூத ஆண்கள், தங்கள் தலையை முடியினாலோ அல்லது தலைப்பாகையினாலோ மூடியிருந்தபோது, புறஜாதியார் அப்படிச் செய்யவில்லை. ஆனால், அதற்கு மாறாக, கீழ்ப்படிதலும், மரியாதைக்குரிய பெண்களுமாய் இருந்தவர்கள் அப்படிச் செய்தார்கள். கொரிந்து பட்டணத்து சபை, பெரும்பாலும், புறவினத்தைச் சேர்ந்த மக்களை அங்கத்தினர்களாகக் கொண்டிருந்தபடியால், அப்பொழுது அவர்களுக்கிருந்த வழக்கத்தின்படி ஆண்கள் தலையை மூடாதவர்களாயும், பெண்கள் முக்காடிடுபவர்களாகவும் இருந்தார்கள்.

சிருஷ்டிப்பின் ஒழுங்கின்படி, மனுஷியின் மேல், அதிகாரம் செலுத்தும் தலைமைத்துவத்தை மனுஷன் பெற்றுக் கொண்டான் என்ற நமது ஆரம்ப விவாதத்துக்கு இங்கே திரும்புகிறோம். நாம் பார்த்த உண்மைகள் தெளிவாய் இருந்தாலும், ஒரு கேள்வி இங்கே எழும்புகிறது.

❀ **“.....தூதர்களினிமித்தம் என்றால் என்ன என்பதே அது? இக்கேள்வியைக் குறித்து அநேக விவாதங்களும், ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டிருக்கிறது. ஒருவரும், இதைத்தான் இது குறிக்கிறது என்று உறுதியாய் தெரிவிக்க முடியாது. ஆனாலும், விவாதத்தின் மையக்கருத்துக்கு ஏற்றதாக**

**இருக்கும் காரியம் யாதெனில், விழுந்துபோன தூதன் - சாத்தான் - ஏவாளிடம் வந்து, அவளை தேவனுக்கு கீழ்ப்படியாமலிருக்கும்படி வழிநடத்தினான். இதன் விளைவாக, ஏவாளுக்கு பாதுகாப்பளிக்கும்படி, தேவன் அவளை கணவனின் அதிகாரத்திற்கு கீழ்ப்படுத்தினார். அவன் எல்லா வகையிலும், உலகிற்கும், அவளுக்கும் மத்தியில் இருக்க வேண்டியவனாய் இருந்தான்.**

சாத்தானும், அவனுடைய பொல்லாத தூதர்களும் இப்பொழுதும் உலகத்தில் இருந்து, இன்னும் மானிடத்தை சோதித்துக் கொண்டிருக்கிற படியால், தன்னுடைய தலையாகிய புருஷனின் அதிகாரத்தின் கீழ் வாழ்கிற ஒரு பெண், தனக்கும், சாத்தானுக்குமிடையே ஒரு பாதுகாப்புக் கேடயத்தைக்கூடுதலான

**(I கொரி.11:11,12)** *"ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறது போல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.*

**(I கொரி.11:13,15)** *"ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சண மாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாயிருக் கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிற தில்லையா ? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே.*

கொண்டிருக்கிறாள். தன்னுடைய பாதுகாப்பைக் குறிப்பதற்கான அடையாளமாக அவள் ஒரு முக்காட்டை அணிகிறாளோ அல்லது . பாதுகாப்புக் கேடயமாக அவளுடைய கீழ்ப்படிதலுள்ள இருதயமே இருந்தாலோ, எப்படியிருந்தாலும் அவள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான உறவைக் குறித்து மேலுமான விவாதம் அவர்கள் ஒருவர் மற்றொருவரை சார்ந்திருப்பதையே விளக்குகிறது. முதலில் ஸ்திரீயானவள், மனுஷனிலிருந்து உருவாக்கப் பட்டாலும், தேவன் ஏற்படுத்திய இனவிருத்தி ஒழுங்கில், பின் வந்த ஆண்வர்க்கம், இவ்வுலகத்தில் பெண்ணின் மூலமே தோன்றியது. ஆகவே, மனுஷனும், மனுஷியும் ஒருவரையொருவர் சார்ந்திருக் கிறார்கள் என்று நாம் முடிவு செய்யலாம். ஆனாலும், எல்லாம் தேவனிடத்திலிருந்து வந்தது.

இக்காரியத்தைக் குறித்து நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள் என்று கொரிந்தியருக்கு சவாலாக விடப்பட்டு, அத்தோடு ஒரு கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. “ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக் கொள்ளாமலிருக்கிறது இலட்சணமா யிருக்குமோ?” மேலுமாக, முக்காடிடுதல் அல்லது ஏதாவது செயற்கையான முறையில் தலையை மூடிக் கொள்ளுதல் என்ற விவாதத்திலிருந்து மாறி, நீளமான தலைமுடி அவளுக்கு மகிமையாகவும், முக்காடாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்ற பதில் தரப்பட்டுள்ளது. ஆணோடு ஒப்பிடும்போது, ஸ்திரீயின் முடி நீளமாயிருப்பதே அவளுக்கு முக்காடு என்று இப்பகுதி முழுவதிலும் விவாதிக்கப்படுகிறது என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கனம் பொருந்திய ஸ்திரீகளால், தங்களுடைய வழக்கத்தின்படியாக தலைமுடியை மூடிக் கொள்ளுதல்

முக்காடாக அணியப் பட்டதென்று, முந்தின வசனங்கள் விவாதிப்பது போல திட்டமாகத் தெரிகிறது. இருப்பினும், இந்த வசனமானது, எல்லாக் காலகட்டத்திலும், உலகெங்கிலும் இருக்கக் கூடிய அனைத்துப் பெண்களுக்கும் பொதுவாக இருக்கக் கூடிய நீளமான தலைமுடியானது முக்காடாகவே இருக்கிறதென்று சொல்லுகிறது. அவரவர்களுடைய வழக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த இயற்கையான முக்காட்டை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை.

தர்க்கத்திற்கு இடமின்றி, பெண்களை விட ஆண்கள், அடையாளம் காணும் அளவுக்கு முடியை சிறியதாய் வைத்திருக்கிறார்கள் என்பது உண்மையாக இருந்துள்ளது. இந்த வசனம் சொல்வதைப்போல், இந்த உண்மை, இயற்கையை தன் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது ஆண்கள் முடியே வைத்துக் கொள்ளக் கூடாது என்றோ அல்லது பெண்களின் முடியில் கத்தியே படக் கூடாது என்றோ அர்த்தம் தராது. "நீளம்" என்பது 'சென்டிமீட்டர்' அல்லது 'இஞ்ச்' அளவுகளில் வரையறுக்கப் படவில்லை. மாறாக தலைமுடியானது, குறைக்கவோ அல்லது வளர்க்கவோ கூடிய ஒன்றாக இருப்பதால், ஆணுக்கும், பெண்ணுக்கும் சரீரத் தோற்றத்தில் ஒரு வேறுபாட்டைக் காட்டுவதற்கு உதவியாக தலைமுடியின் நீளம் பயன்படுத்தப்பட வேண்டும்.

இரண்டு வேதாகமக் காரியங்களுக்கிடையே ஒரு ஒப்பீடு செய்வதன் மூலம், இங்கே நாம் ஒரு எடுத்துக்காட்டைக் கொண்டு வர முடியும்.

❀ **இயற்கையான முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கும் தலைமுடி மற்றும் செயற்கையான முக்காட்டிற்கும் இடையேயும், ஆராதனையில் இசையை வெளிக்கொணர பயன்படுத்தப்படும் கருவிக்கும், மனித குரல் வளத்திற்கும் இடையேயும் நாம் ஓர் ஒப்பீடு செய்ய முடியும்.**

❀ மனிதன் தன் குரல் நாளத்தைப் பயன்படுத்துவது, அவன், இடம், காலம், சூழ்நிலை இவைகளைப் பற்றிக் கவலைப்படாமல், தேவனைப் பாடல் மூலம் துதிப்பதற்கு எந்நேரமும் அவனுக்கு உதவுகிறது. மாறாக, இசைக் கருவி, பாடுவதற்கு அவசியம் என்றதொரு நிலை இருக்குமானால், பாடல்கள் மூலம் தேவனைத் துதிப்பது எல்லாச் சமயத்திலும் முடிகின்ற ஒன்றாக இருக்காது.

❀ இசைக்கருவி, குரல் வளம் ஆகிய இதிலிருந்து நம்முடைய கருத்துக்கு வலு சேர்க்கும்படியாய் நாம் தெரிந்து கொள்வது2.

**விவாதக் கருத்து**

*இந்த வசனப் பகுதியில் உள்ள வார்த்தைகளை கவனியுங்கள்: "நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்", "இலட்சணமாயிருக்குமோ", "வெட்கமானால்", "வேண்டுவதில்லை" இப்படிப்பட்ட வார்த்தைகள், கட்டளைகளாயிராமல், நாம் நிதானித்துப் பார்க்கும்படியான வேண்டுகோளாகவே இருக்கிறது.*



*செயற்கையான முக்காடு தேவையென இந்த வசனப் பகுதி வலியுறுத்துகிறதென்று சொல்லு கிறவர்கள், அவர்களின் இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக வேறு ஒத்த வசனங்களை காண்பிக்க முடியுமா? தேவன் எப்பொழுதுமே, ஒரு காரியத்தைக் குறித்து சொல்லப் பட்டிருக்கும் வசனங்களைக் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் போது, தெளிவான புரிந்து கொள்ளுதல் உண்டாக வேண்டுமென்பதற்காக, அந்தக் காரியத்தைக் குறித்து தேவன், ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் போதிக்கிறார்.*

**யாதெனில், ஒரு பெண்ணுக்கு இயற்கையாக இருக்கக் கூடிய நீளமான தலைமுடியானது, ஆண்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டுவதோடு, செயற்கையான முக்காடு இல்லாவிட்டாலும், அது அவளுடைய கீழ்ப்படிதலுக்கு அடையாளமாகவே இருக்கிறது என்பது.**

இது சம்பந்தமாக இரண்டு கருத்துக்கள் உண்டு

- **சபையிலே பெண்கள் முக்காடிடுவதைக் குறித்துக் கட்டளையிடுகிற வசனங்கள், வேறெங்கும் இல்லாதிருப்பது, "ஏன் அப்படி" என்ற ஆச்சரியத்தைத் தருகிறது. பவுல், கலாச்சாரத்தைக் குறித்துப் பேசாமல், உலகமனைத்திற்குமான தேவ கட்டளையைக் குறித்துச் சொல்லியிருப் பாரானால் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு, அன்றாட வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் முறை (தேவனுடைய கட்டளைக்கு விரோதமாயிராத பட்சத்தில்) மற்ற இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக, விக்கிரகத்திற்கு படைக்கப்பட்டதை புசித்தல் (I.கொரி.8:10) கிறிஸ்துவுக்குள் சுயாதீனம் (கலா. 5:13-15) ; தனியாயிருக்கவோ அல்லது திருமணம் செய்யவோ சுதந்திரம் (I.கொரி.7) யூத வழக்கத்தை பின்பற்றுவது அல்லது பின்பற்றாமலிருப்பது (அப்.16:3; கலா. 2:3-5; அப். 21:18-26).**

- **மத்தேயு 23:5ல் காப்பு நாடாக்களை அகலமாக்குதலையும் மத்தேயு 5-ம் அதிகாரத்தில் உபவாசத்தையும், ஜெபத்தையும், மனுஷர் காணும்படி செய்ய வேண்டாம் என்பது குறித்தும் எச்சரித்ததுபோல், கிறிஸ்தவர்கள், மற்றவர்களுடைய கவனத்தை தங்கள் பக்கம் ஈர்க்கும்படியாக மார்க்க காரியங்களைச் செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது.**

I கொரி. 11:13-15, வசனத்தின் உட்கருத்து இதுதான்: பெண்களைப் போன்று தோற்றமளிப்பதின் மூலம், ஆண்கள்

தன்னைக் கனவீனப்படுத்துவதை தேவன் விரும்புகிறதில்லை. அதைப் போலவே, ஒரு கிறிஸ்தவப் பெண், இவள் ஆணா அல்லது பெண்ணா என்று குழப்பமடையச் செய்யும் தோற்றத்தைப் பெறுவதையோ அல்லது அந்நாட்களில் தேவதாசிகளை அடையாளப்படுத்தும் காரியமான தலைசிரைத்தல் அல்லது கத்திரிக்கப்படுதல் போன்றவை மூலம் தலையை மூடாமலிருந்து தன் புருஷனை கனவீனப்படுத்துவதையும் தேவன் விரும்புகிறதில்லை.

ஆண், பெண் தோற்றத்தைப் பற்றிய கேள்வி, நவநாகரீகத்தால் உண்டாகும் திடீர் கலாச்சாரத்தின் விளைவல்ல. ஆண்-பெண் இவர்களின் பங்கும், அவர்களை அடையாளப்படுத்தும் தோற்றமும் குறித்து ஆதாம் - ஏவாள் காலத்திலேயே தேவன் ஏற்படுத்தின அதிகார கட்டளையின் அடிப்படையிலேயே இது அமைகிறது.

இயற்கையான முக்காடாக அமைந்திருக்கும் தலை முடிக்கு மேலாக, செயற்கையான ஒரு முக்காடு அணிய வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது அந்தந்த கலாச்சாரம் சம்பந்தப்பட்டதும், காலத்திற்கு ஏற்றபடி மாறக்கூடியதாகவும் இருக்கிறது.

❀ **இன்றைக்கு, தன் தலையை மூடாதிருக்கிற ஒரு பெண்ணை ஒழுக்கம் கெட்டவள் என்றோ, தன் கணவனை அவமதிக்கிறவள் என்றோ கருதப்படும் நிலை ஒரு கலாச்சாரத்தில் இருக்கு மானால், அதை நிராகரிப்பதைவிட அக்கலாச்சாரத்தை ஏற்று**

> *"ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ் செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக் கடவன்" (1.கொரி. 11:16).*

**நடப்பதே ஞானமானது அல்லது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில், ஸ்திரீயானவள் தன் கணவனுக்கு கீழ்ப்படிதலைக் காட்டும்படியான வேறு ஏதாவது அடையாளம் இருக்குமானால்,** *"எதிரியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்க வேண்டுவது அவசியம் ஆதலால்"* **(I தீமோ. 5:14) சொல்லுகிறபடி அந்த கலாச்சாரத்தைப் பின்பற்றுவதே சிறந்ததாகும்.**

❀ **இதற்கு மாறாக, முக்காடோ அல்லது தொப்பியோ ஒரு கலாச்சாரத்திற்கு சம்பந்தமில்லாததாக இருந்தால், அதை அணிவது அர்த்தமற்றதாயிருக்கும், அது மாத்திரமல்ல அப்படி அணிவது கிறிஸ்தவனை காட்சிப் பொருளாகவும் மாற்றிவிடும். இப்படிப்பட்ட, தேவையில்லாமல் மற்றவர்கள் கவனத்தை ஈர்க்க முயற்சிப்பது நமக்கு உகந்ததல்ல (மத். 16:5, 16).**

உலகமெங்குமுள்ள கிறிஸ்துவின் சபையாராகிய நாங்கள் - முக்காடு வேண்டாமென்று சொல்லும் பழக்கம் இல்லாதவர்கள் என்று பவுல் கூறுகிறாரா? அல்லது உலகமெங்குமுள்ள கிறிஸ்துவின் சபையராகிய நாங்கள் - கண்டிப்பாக முக்காடிட வேண்டும் என்ற பழக்கத்தை வலியுறுத்தாதவர்கள் என்கிறாரா அல்லது பவுல் இது விவாதத்திற்கே தகுதியற்ற ஒன்று என்கிறாரா? அல்லது ஒட்டு மொத்தக் கேள்வியும் ஒரு கலாச்சாரம் சார்ந்தது என்று சொல்லுகிறாரா?.

இப்பொழுது, முடிவாக, ஒட்டுமொத்தமாக இது என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

1) **இந்த முழு வசனப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்டபடி அதிகார ஒழுங்கைக் குறித்துப் பேசுகிறது. கிறிஸ்துவின் தலை தேவன் ; புருஷனின் தலை கிறிஸ்து; ஸ்திரீக்கு தலை புருஷன். மனுஷன் மனுஷிக்காக உண்டாக்கப் படவில்லை. ஸ்திரீயே ஆணுக்காக உண்டாக்கப்பட்டவள். புருஷனானவன் தேவனுடைய சாயலாகவும், மகிமையு**

**மாகவும் இருக்கிறான். மனுஷனின், ஒருபகுதியிலிருந்து உண்டான மனுஷி புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.**

**2) இரண்டாவது, முக்கிய கருத்து யாதெனில், ஆணுக்கும், பெண்ணுக்குமிடையே அவர்களது தோற்றத்தைப் பொறுத்தளவில், வெளிப்படையான வேறுபாடு இருந்தாக வேண்டும். நீளமுடி கொண்டவனாய் ஆண் இருந்தால், அது அவனுக்கு அவமானமென்று இயற்கையே கூறுகிறது. ஆனால், பெண்ணுக்கு நீள முடியிருத்தல் அது அவளின் மகிமையாயிருக்கிறது.**

**3) ஸ்திரீயின் முடி, அவளுக்கு முக்காடாக கொடுக்கப் பட்டிருக்கிறது.**

**4) முடி முக்காடாயிருப்பது தேவனிடமிருந்து வந்தது. இதற்கு மேலாக ஒரு முக்காடு இருக்க வேண்டுமானால், அது அந்த இடத்திலுள்ள கலாச்சாரத்தின் அடிப்படையில் இருக்கலா மேயொழிய வேதாகமத்தின் படியல்ல.**

**5) ஒவ்வொரு கலாச்சாரத்திலுமுள்ள கிறிஸ்த்துவப் பெண்கள் முழுமையான முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினால், கிறிஸ்தவர்கள் மற்றவர்களை தங்கள் பக்கமாய் ஈர்க்கும்படி நடந்து கொள்ளக் கூடாது என்ற வேதாகமத்தின் போதனையை இது மீறுகிற செயலாக இருக்கும்.**

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. I கொரிந்தியர் 11ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தும் அதிகார ஒழுங்குமுறை யாது?

அந்த வசனப்பகுதி வேறு எந்த காரியத்தை போதித்தாலும் .......... உண்மையைப் பற்றி நாம் ............................................ மறந்து விடக் கூடாது.

3. ஒரு ஸ்திரீ தன் தலை முடியை வெட்டினாலோ அல்லது முக்காடிடமாலிருந்தாலோ உங்கள் சமுதாயம் அதை அவலட்சணமென்று கருதுகிறதா?

4. கடந்த காலங்களில், தலை முடியும், முக்காடும், ஒழுக்கத்திற்கும், மத ரீதியான பக்திக்கும், உறுதியான நம்பிக்கைக்கும் அடையாளமாக பல வழியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு சில உதாரணம் தருக?

5. விக்கிரகத்தை வழிபடும் மற்ற மதங்களின் பெண் பூசாரிகள் தங்கள் தலைமுடியை வெட்டிக் கொண்டும், சிரைத்துக் கொண்டுமிருப்பதால், ஒரு கிறிஸ்தவப் பெண் அதே விதமாக ................... ..................... இருக்கும்.

6. "............ .......... நோக்கி .......... தன் தலையை ........... .......... என்று உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள்".

7. தேவன், பெரும்பாலான வேதாகமப் பகுதிகளில் .......... பற்றிய சட்ட நிரூபணத்தை கொடுக்கவில்லை.

8. கொரிந்து பட்டணத்தில், ஆண்களுக்கும், பெண்களுக்கும் முடியின் நீளம் மற்றும் முக்காடு சம்மந்தமாக, நடைமுறையில் இருந்த வழக்கம் என்ன?

9. "தேவ தூதரினிநிமித்தம்" என்பதற்கு என்ன பொருளைக் கொடுக்க முடியும் என்பதை விவாதி?

10. சுபாவமே எதைப் போதிப்பதாக பவுல் கூறுகிறார்?

11. 15ம் வசனத்தில், ஒரு பெண்ணின் தலை முடியைப் பற்றி

பயன்படுத்தப்பட்டிருக்கும் இரண்டு வார்த்தைகள் யாது?

12. தலைமுடி மாத்திரமே ஸ்திரீக்கு முக்காடாக தேவனால் எண்ணப்படும் என்பதற்கான இரண்டு கருத்துக் களிடையே இருக்கும் ஒற்றுமையை, கொடுக்கப் பட்டிருக்கும் எடுத்துக் காட்டில், உங்களால் பார்க்க முடிகிறதா?

13. ஒரு கிறிஸ்தவன் தன் தலையில் எதை அணியலாம் அல்லது எதை அணியக் கூடாது என்பதற்கு புதிய ஏற்பாட்டில் வேறு ஏதாவது வசனப்பகுதிகளை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

14. "கட்டளையாக எண்ணப்படாமல், கலாச்சாரமாகவே எண்ணப்பட்டு வேதாகமத்திலே பேசப்பட்டிருக்கும் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட காரியங்களைப் பற்றிய கருத்துக்கள் இருக்கிறதா? அதைக் குறித்து விவாதி.

15. மற்றவர்களின் கவனத்தை தங்கள் பக்கமாக ஈர்க்கவேண்டுமென்ற ஒரு எண்ணத்தோடு உடை அணிவதும், தங்கள் நடத்தையை அமைத்துக் கொள்வதும், கிறிஸ்தவர்களுக்குத் ஏற்றதா?

16. தேவ கட்டளைக்கு விரோதமாக ஒரு கலாச்சாரம் இல்லாதிருந்தால் அதை நாம் கடைபிடிக்கலாமா?

17. ஓர் அமெரிக்க கிறிஸ்தவப் பெண், எல்லாப் பெண்களும் முக்காடிட்டிருக்கும் ஒரு இந்திய சபையில் கூடி வரும் போது, முக்காடிடாமலிருப்பாளானால் அது ஏற்புடையதாக இருக்குமா? அது போலவே, இந்தியாவிலே பிரத்தி யேகமாக அணியப்படும் முக்காட்டை, அமெரிக் காவிலுள்ள சபையில் ஒரு பெண் அணிந்திருந்தால் அது

ஏற்றுக்கொள்ளப்படுமா?

18. ஒரு கிறிஸ்தவன் எந்த ஒரு நாட்டில் வாழ்ந்தாலும், எந்தக் கலாச்சாரத்தில் வாழ்ந்தாலும், அதற்க்கேற்றபடி அவன் பழக்கவழக்கத்தை அமைத்துக கொள்ளலாம் என்கின்ற உரிமை, கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கிருக்கும் சுதந்திரத்தை இன்னும் அதிகமாக புரிந்து கொள்ள உதவுமா?

19. "................... ................... ................... வேண்டுமென்றிருக்கிறேன்" (I தீமோ.5 : 14)

20. முடிவுரையில் சொல்லப்பட்டிருக்கும் 5 காரியங்களை விவாதி.



# 11



# பொதுவான கூடுகையில் ஒரு பெண் "அந்நிய பாஷையில்" பேச முடியுமா?

**உ**லகத்தில் அதிவேகமாய் வளர்ந்து கொண்டிருக்கிற மத இயக்கங்களில் **"பெந்தெகொஸ்தே"** என்ற இயக்கமும் ஒன்று. பெந்தெகொஸ்தே என்ற பொதுவான பெயரில் அநேக சபைகள் உண்டு. **தி அசெம்பிளிஸ் ஆப் காட்,** (தேவ ஐக்கிய சபை) தி **சர்ச் ஆப் காட்** (தேவ சபை), **தி பெந்தெகொஸ்தெ சர்ச்** (பெந்தேகொஸ்தே சபை) என்று ஏராளமுண்டு. இன்னும்,**பெரிய சபைகள் என்று பெயர் பெற்றுள்ளவைகளின், பிராந்திய சபைகள்,** பெந்தெகொஸ்தெ சபையாரின் போதனைகளாகிய, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், அற்புதங்கள், அந்நியபாஷை பேசுதல், மற்றும் பரிசுத்த ஆவியானவர் அற்புதமான விதத்தில் செயல்படுதல் ஆகியவைகளை தங்களோடு ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த சபைகள், வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள வார்த்தைகளாகிய **பரிசுத்த ஆவி, பெந்தெகொஸ்தெ, தேவனுடைய சபை** போன்ற இன்னும் அநேக வார்த்தைகளை மற்ற சபையாரைக் காட்டிலும் வலியுறுத்திச் சொல்வதால், அநேகர் இவர்களுடைய வரலாறு, உபதேசம், நடத்தை போன்றவற்றை, உண்மைதானா என்று தேவனுடைய வார்த்தைகளோடு ஒப்பிட்டுப்பார்க்காமல், அவர்கள்

சொல்லிக்கொள்வதுபோல், இதுவும் வேத வசனங்களின் படியான சபைதான் என்று ஏற்றுக் கொள்கிறார்கள்.

### விவாதக் கருத்து



*முதல் நூற்றாண்டில், தெரிந்தெடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு, விசேஷ வரங்களாகிய "அற்புத அடையாளங்களைச் செய்தல்", "அந்நிய பாஷை பேசுதல்" போன்றவை கொடுக்கப்பட்டது பற்றி வேத வசனங்கள் என்ன சொல்லுகிறது என்று நீங்கள் வாசித்ததுண்டா? இவைகளைப் பற்றி நீங்கள் வேதாகமத்தில் படித்ததுண்டா? இன்று அற்புதங்கள் என்று அழைக்கப்படுவது, முதல் நூற்றாண்டில் நடந்தது போல நடக்கிறது என்று நம்புகிறீர்களா? இன்றைய பெந்தெகொஸ்தே கூட்டங்களில், ஆதித் திருச்சபையின் ஆராதனை முறை மற்றும் பிரசங்கம் போன்றவைகளின் சாயல் எதையாவது காணமுடிகிறதா?*

❀ **இயேசுவானவர், பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து ஏறக்குறைய ஒரு வார காலத்தில், பெந்தெகொஸ்தே என்னும் நாளில், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டபோது கிறிஸ்துவால் சபை ஆரம்பிக்கப்பட்டது என்று புதிய ஏற்பாட்டில் நாம் வாசிப்பது உண்மைதான். இந்த குழுக்கள் இந்த பெயர்களைத் தங்களுடையதாக்கிக் கொண்டு ஆதாயம் தேடுவதால், சத்தியத்தை உண்மையாய், நேர்மையாய் தேடுகிறவர்களுக்கு மத்தியில் இது பெரும் குழப்பத்தை விளைவிக்கிறது.**

இங்கே, கவனிக்க வேண்டியது என்னவெனில், இந்த சபைகள், முதல் நூற்றாண்டில், கிறிஸ்துவினால் தொடங்கப் பட்டவையல்ல. **“தி அசெம்பிளீஸ் ஆப் காட்”** என்று அழைக்கப்படும் சபையானது, பல பிரசங்கிகள் மற்றும் மிஷனரிகளால், 1914ஆம் ஆண்டு, அமெரிக்க ஐக்கிய தேசத்திலுள்ள அர்கான்சஸ் (Arkansas) என்கிற மாநிலத்திலுள்ள ஹாட் ஸ்பிரிங்க்ஸ் (Hot Spirings) என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. **“தி ஹோலினஸ் சர்ச்”** (The Holiness Church) என்று முதலில் பெயர் கொண்ட **“சர்ச் ஆப் காட்”** (The Church of God) சபை, ரிச்சர்டு ஜி. ஸ்பர்லிங் (Richard G. Sparling) என்பவரால் 1902ல் டென்னிசியிலுள்ள, மோன்னோர் கவுண்டி (Monore County) என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. 1943-ல் தன் தகப்பனிடத்திலிருந்து தலைமைத்துவத்தை பெற்ற டாம்லின்சன் (Tomlinson) என்பவர் இச்சபையை இரண்டாக பிளவுபடச் செய்தார். இரண்டு கிளைகளுடன் டென்னிசி யிலுள்ள கிளீவ்லேண்டு (Cleveland) என்கிற இடத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது. தெற்கு கரோலினாவிலுள்ள, ஆண்டர்சன் (Anderson) என்கிற இடத்தில் 1898-ல் **“தி பெந்தெகொஸ்தெ ஹோலினஸ் சர்ச்”** ஆரம்பிக்கப்பட்டது. குழுக்களாகவும் மற்றும் தனிப்பட்டும் இயங்குகிற பெந்தெகொஸ்தே சபைகளை போன்று எண்ணிலடங்காதவைகள் இன்று உலகத்தில் இருக்கிறது. இயேசுவால் ஆரம்பிக்கப்பட்ட உண்மை சபையாக, இவைகளெதுவும் வேத வசனங்களினடிப்படையில் இல்லாத காரணத்தால், இக்கூட்டத்தில் இடம் பெற்றிருக்கும் எதுவுமே முதல் நூற்றாண்டில் ஆரம்பிக்கபட்டதல்ல.

❀ **சபையின் பிறந்த நாள் பெந்தெகொஸ்தெ தினமாக இருந்த போதிலும், தன் ஆவிக்குரிய குடும்பத்திற்கு, அப்பெயரிடப்பட்டு, இதன் மூலம் இந்த யூதப்பண்டிகையை மகிமைப்படுத்தும்படி தேவன் ஒருபோதும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. மாறாக, எபே. 3:14,15 நம்முடைய முழங்கால்களை “பரலோகத்திலும்,**

**பூலோகத்திலும் உள்ள முழு குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுக் கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி" முடக்க வேண்டுமென்கிறது. "அவராலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர் களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (கிறிஸ்துவின் நாமமேயல்லாமல்) வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை என்று அப்போஸ்தலர் 4:12 கூறுகிறது. நாம் கிறிஸ்துவுக்கு திருமணம் செய்யப்பட்டிருக்கிறோம் என்று பவுல் ரோம சபைக்கு எழுதுகிறார் (ரோமர் 7) மற்றும் ரோமர் 16:16-ல்" ... கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் என்றுள்ளது. எபே. 5:23-32ல் கணவனுக்கும்-மனைவிக்கும், கிறிஸ்துவுக்கும் - சபைக்கும் இடையே ஓர் அழகான ஒப்புமை இடம் பெற்றிருக்கிறது.**

இந்த வசனப் பகுதிகள், ஒட்டுமொத்த சபையாகவும், தனிப்பட்ட கிறிஸ்தவனாகவும், நாம் மணவாளனாகிய கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரம் தரித்துக் கொள்ளவேண்டும் என்று நமக்குக் காட்டுகிறது. சபைக்கு "பெந்தெகொஸ்தே" என்ற பெயரிடப்பட்டு, அதன் மூலம் யூதப் பண்டிகை மகிமைப்பட்டதாக, வேத வசனங்களில் எங்குமே இல்லை. இல்லாத ஒன்றைச் செய்வதன் மூலம், இந்த ஜனங்கள் மிகப்பெரிய தவறைச் செய்திருக்கிறார்கள், தொடர்ந்து செய்துகொண்டும் இருக்கிறார்கள். இப்படித் தவறிழைத்ததோடு, தாங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்றும் கூறிக் கொள்கிறார்கள். ஒருவேளை இவர்கள் சொல்வது போல், பரிசுத்த ஆவியானவர், அப்போஸ் தலர்களோடு இருந்ததுபோல் இவர்களோடும் இருப்பாரானால், புதிய ஏற்பாட்டில், அவரே தெளிவாக எழுதிக் கொடுத்த வைகளுக்கு விரோதமான தவறுகளை இவர்கள் செய்யும் படியாய் ஒருபோதும் அனுமதித்திருக்க மாட்டார்.

பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் முதன்மையானவர் போலவும், அற்புத அடையாளங்களைச் செய்வதும், மாம்ச சரீரத்தை குணமாக்குவதுமே தேவனுக்கு முதன்மையானது போலவும், இந்த மக்கள் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வழிநடத்துதலை அதிகமாய் வலியுறுத்துகிறார்கள்.

புதிய ஏற்பாட்டை நாம் கவனமாக, திறந்த மனதோடு படித்துப் பார்த்தால் புதிய ஏற்பாடு முற்றிலும் எழுதப்பட்டு, முழுமையடைவதற்கு முன்பாக, தேவமனிதர்கள், தேவ ஆவியினால் ஏவப்பட்டு புதிய ஏற்பாட்டை எழுதும் படியாகவும், அந்த நாட்களில் பிரசிங்கிக்கப்பட்ட தேவ வார்த்தைகள் உறுதி செய்யப்படும்படியாகவும் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார் என்பதைக் காணமுடியும். ஆனால், அப்பொழுது கூட அவர், "கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்கவே" ஏவினாரேயொழிய, தன்னைக் குறித்துப் பிரசங்கிக்கும்படி அல்ல. பிரசங்கிப்பவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று நிரூபிக்கும்படியாகவே, சரீர சுகமளித்தல் இருந்தது. அற்புதங்கள் செய்வது **பிரசங்கத்தின் நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை.**



**விவாதக் கருத்து**

*பெந்தெகொஸ்தெ கூட்டத்தாரால் நடத்தப்படும் கூட்டங்களை நீங்கள் கவனிக்க நேர்ந்தால், "பரிசுத்த ஆவியானவர்" என்ற வார்த்தையும் "தேவன்" மற்றும் "இயேசுவானவர்" என்ற வார்த்தைகளும் எத்தனை முறை பயன்படுத்தப்படுகிறதென்று பாருங்கள். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிற பிரசங்கத்தோடு அவைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.*

பெந்தெகொஸ்தெ நாளில் பேதுரு **"இயேசுவைப்"** பிரசங்கித்தான் (அப்.2) பிலிப்பு, சமாரியாவுக்குச் சென்று **"தேவனுடைய இராஜ்யத்தையும், இயேசுவையும்'** குறித்துப் பிரசங்கித்தான். (அப். 8:12), எத்தியோப்பிய மந்திரிக்கு அவன் **"இயேசுவைக்"** குறித்துப் பிரசங்கித்தான். (அப் 8.35) பவுல் மனமாற்றமடைந்த உடனே **"இயேசுவை"** பிரசங்கிக்கத் தொடங்கினான். (அப் 9:20) இன்றைய நாட்களில் பெந்தெகொஸ்தே பிரசங்கியார்கள் செய்வதுபோல், பரிசுத்த ஆவியானவரைக் குறித்து, எந்த ஒரு வசனப்பகுதியிலும் அல்லது எந்நேரத்திலும் அன்றைய பிரசங்கியார்கள் பிரசங்கித்தாக ஆதாரம் இல்லை.

சுவிசேஷ நூல்களுக்குப் பிறகு, **அப்போஸ்தலர்** புத்தகத்தில் மாத்திரம் தனிப்பட்ட அளவிலான அற்புதங்கள் பிரதானமாக இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, நாம் **அப்போஸ்தலர்** புத்தகத்திற்குச் சென்று, ஒவ்வொரு அற்புதமாக குறிப்பிட்டுப் பார்ப்பது, இக்காரியத்தில் நமக்கு இன்னும் தெளிவைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இன்றைக்கும் பெரும்பாலான சபைகளில் அற்புதங்கள் பற்றிப் பேசுவதற்கும், அற்புதங்கள் செய்வதற்கும் கொடுக்கப்படும் அளவுக்கதிகமான முக்கியத்துவத்தை நாம் கவனித்து, அதை அப்போஸ்தலர் நடபடிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அங்கே, அவைகள் மிகக் குறைவாகவே சொல்லப்பட்டிருப்பதையும், அவைகளுக்கு மிக மிகக் குறைவான அளவிலேயே முக்கியத்தும் கொடுக்கப் பட்டிருப்பதையும் கண்டு, ஆச்சரியமடைய முடியும். இன்னும் நிருபங்களை எடுத்துக்கொண்டால், I கொரிந்தியர், கலாத்தியர், எபிரெயர் ஆகியவைகளில் மாத்திரமே அற்புதத்தைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. ஏன்? நன்றாக கவனித்தால் இதற்கான பதில் நமக்கு சந்தேகமற விளங்கும். ஆம், புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால், அற்புதங்களின் தேவை அங்கே குறைந்து கொண்டே வந்தது.

மாற்கு 16:20ல் சொல்லப்பட்டது போல், வசனங்கள் எழுதி முடிக்கப்பட்டு, அற்புதங்களால் உறுதிப்படுத்தப்பட்டவுடன், அற்புதங்களின் காலம் முடிவுக்கு வந்தது.

**விவாதக் கருத்து**



*அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தையும், சபைகளுக்கும் தனிநபர்களுக்கும், எழுதப்பட்ட நிருபங்களையும் வாசித்து, அதில் உள்ள அற்புதங்கள் ஒவ்வொன்றையும் குறித்துக் கொள்ளுங்கள். உங்கள் வேதாகமத்தின் பக்கங்களை நீங்கள் புரட்டி எளிதாய் அந்தப் பகுதிகளை பார்க்கும்படி வண்ணம் தீட்டிக் கொள்ளுங்கள். இப்படிச் செய்தால், வேதத்தில் அற்புதங்கள் எவ்வளவு குறைவாக இடம் பெற்றிருக்கிற தென்பதை நீங்களே கண்டுகொள்ள முடியும்.*

கிங்ஜேம்ஸ் மொழியாக்க வேதாகமத்தில் “அந்நிய பாஷை” என்கிற பதம் இடம் பெற்றிருப்பதால், I கொரிந்தியர் 14ம் அதிகாரம், பெந்தெகொஸ்தெ மக்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாக உள்ளது. “அந்நிய பாஷை” என்பதை பரலோக மொழி என்றும், தேவன் மாத்திரமே இதைப் புரிந்து கொள்ளமுடியும் என்றும் தாங்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலேயே இதைப் பேசுகிறோம் என்றும் சொல்லுகிறார்கள். இது உண்மையா? இந்த வசனப்பகுதியை நாம் உற்று நோக்கினால், அங்கு போதிக்கப்படும் தெளிவான காரியங்களுக்கு, அவர்களின் உபதேசமும், கிரியையும் முற்றிலும் முரண்பட்டதாக இருப்பதைக் காண முடியும்.

1. இவ்வதிகாரத்தின் 40வது வசனத்தைப் பார்ப்போமானால், பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலன் பவுலிடத்தில் ஏவின போது *"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது"* என்றார். பெந்தெகொஸ்தெ கூட்டங்கள், கைதட்டுதலுக்கும், ஒழுங்கின்மைக்கும், அந்நிய பாஷையில் பேசுவதற்கும், பரிசுத்த ஆவியானவரால் திடீர் என்று அசைக்கப்பட்டோம் என்று சொல்லிக் கொண்டு அடிக்கடி அலறுதலுக்கும் பெயர் போனது. **பரிசுத்த ஆவியானவர் I கொரி. 14:40ல் தான் வெளிப்படுத்தி எழுதிய வசனத்திற்கு நேர் விரோதமாக, இன்று மக்கள் செயல்பட கட்டாயம் காரணமாயிருக்கமாட்டார்.**

2. அந்நிய பாஷை குறித்தும், தீர்க்க தரிசனம் குறித்தும், பேசுகின்ற வசனங்களின் மையப் பகுதியிலேயே, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் *"சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள்;ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே".* (I.கொரி.14:34,35) என்று கட்டளையிடப் பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

❀ **பெந்தெகொஸ்தே குழுக்களில் பெண் பிரசங்கி மார்களுக்குப் பஞ்சமில்லை, அது மாத்திரமல்ல, அவர்களுடைய கூடுகையில், ஆண்களைக் காட்டிலும் பெண்களே "அந்நிய பாஷை" பேச அதிக தீவிரம் காட்டுவார்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், தூண்டுதலினாலும், தாங்கள் பேசுகிறோம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டாலும் உண்மையில், தாங்கள் செய்கிற காரியத்தின் மீது எவ்வித கட்டுப்பாடு**

**மற்றவர்களாகவே இருக்கிறார்கள். ஆனாலும், 32ம் வசனம், சொந்த விருப்பத்திற்கு மாறாக, பரிசுத்த ஆவியானவர் அவனை ஆட்கொண்டு பேசச் செய்ய மாட்டார் எனத் தெளிவாய்ச் சொல்கிறது. ஆகவே, தாங்கள் இப்படிப் பேசவேண்டும் என்று விரும்புவதாலேயே இப்படிப் பேசுகிறார்கள் என்று தெரிகிறது. அவர்கள் சொல்லுவதும், செய்வதும் பரிசுத்த ஆவியானவரால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தெளிவான வார்த்தைகளுக்கு நேர் விரோதமாயிருக்கிறது. இந்த உண்மையிலிருந்தே, அவர்களைப் பேசத் தூண்டுவது பரிசுத்த ஆவியானவரல்ல என்பதை நாம் நன்றாகவே அறிந்து கொள்ளலாம்.**

3. **"தேவன் கலகத்திற்கு தேவனல்ல"** என்று வசனம் 33 கூறுகிறது, 29-32 ஆகிய வசனங்கள், தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்கள் (போதிக்கும்போதும் அல்லது பிரசங்கிக்கும் போதும்) குழப்பம் வராதபடிக்கு ஒவ்வொருவராகப் பேச வேண்டுமென்று போதிக்கிறது. பெந்தெகொஸ்தே சபைகளில் பரிசுத்த ஆவியானவரால் வெளிப் படுத்தலை பெற்றுக்கொண்டோம் என்று சொல்லிக் கொண்டு ஒரு சாரார் குதித்துக் கொண்டிருப்பர். அவர்களில் அந்நிய பாஷை பேசுகிறோம் என்பவர்கள், தங்களின் செயலால் குறுக்கீடு செய்து கொண்டிருப்பர். இக்காட்சிகளை நாம் சகஜமாகக் காணமுடியும். ஆவியின் பெயரால் இப்படி இவர்கள் போடும் ஆட்டங்களை, **பரிசுத்த ஆவியானவர் தாமே தமது வசனத்தில் தடை செய்திருக்கிறார்.**

4. 9,10,11ம் வசனங்கள், "பாஷை" என்பது மனிதர்கள் பேசும் மொழிகள் என்று தெளிவாய் அடையாளம் காட்டுகிறது. 9ம் வசனத்தில் பவுல், "அதுபோல் நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களா

யிருப்பீர்களே என்று கேள்வி கேட்கிறார். இன்றைக்கு "அந்நிய பாஷை" பேசுகிறோம் என்பவர்களிடம், நாமும் இதே கேள்வியை, கேட்க வேண்டும்.

5. 10 வது வசனம், உலகில் அநேக மொழிகள் இருப்பதாகவும் (பரலோக பாஷையைக் குறித்து ஒன்றும் சொல்லப் படவில்லை யென்பதை கவனியுங்கள்) அவைகள் அனைத்தும் அர்த்தம் உள்ளதாக இருப்பதாகவும் கூறுகிறது.

6. வசனம் 11-ல் பேசப்படுகிற மொழி, பவுலுக்குப் புரியவில்லை என்றால், அதைப் பேசுகிறவர் தனக்கும், தான், அப்படிப் பேசுகிற அவருக்கும் அந்நியராகவே இருப்பதாக பவுல் கூறுகிறார். உலகில் உள்ள பலவிதமான மொழிகளையும், கேட்கிறவர்களுக்கு புரியாத அளவில் பேசப்படும் ஒரு

**விவாதக் கருத்து**



*உங்களை வளர்ப்பதிலே உங்கள் பெற்றோரின் கொள்கை என்னவென்று நினைக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளை நீங்கள் வளர்ப்பதற்குரிய கொள்கை என்ன? தங்கள் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதில் எந்தக் கொள்கை பெரிதும் உதவுமென்று நம்புகிறீர்கள்? பெரியவர்களாக வளர்ந்திருக்கும் நீங்கள், எப்பொழுதாவது உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து, "இதை நான் கற்றிருந்தால் அல்லது இது எனக்கு சொல்லப்பட்டிருந்தால் நான் இப்பொழுது நன்றாக இருந்திருப்பேனே? என்று எண்ணியதுண்டா? பெரியவர் களுக்கான பொறுப்புகளுக்குள் நீங்கள் மாற்றப்பட்ட காலகட்டம் உங்களுக்கு எளிதான ஒன்றாக இருந்ததா அல்லது கஷ்டமாக இருந்ததா?*

மொழியையும் நாம் கவனித்துப்பார்க்கும்போது, பவுல் இங்கே கூறுவது பொருள் தருவதாகவே இருக்கிறது.

7. சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக, அவைகள் இருக்க வேண்டுமென்பதே பவுலின் முடிவாக இருக்கிறது. (வச.12), வசனம் 19ல் நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும் என்கிறார் பவுல். அக்காலத்திலே, பவுலை இப்படித் தெளிவான வார்த்தைகளை எழுதும்படியாக வழி நடத்தின பரிசுத்த

### விவாதக் கருத்து

*உபாகமம் 13:1–5வரையுள்ள வசனப் பகுதியில், ஒரு கள்ளத்தீர்க்கதரிசி, தேவன் நியாயப்பிரமாணத்தில் எழுதிக் கொடுத்த கட்டளையை ஜனங்கள் மீற வேண்டும் என்று சொல்லி அதற்கு ஆதாரமாக ஒரு அடையாளத்தையோ அல்லது ஒரு அற்புதத்தையோ "நடப்பிக்கலாம்" என்றும், அப்படி ஏதாவதொன்று நடந்தால் ஜனங்கள் அந்த தீர்க்கதரிசிக்கு செவி கொடுக்கக் கூடாதென்றும், அத்தீர்க்கதரிசி கொல்லப் படவேண்டுமென்றும் தேவன் அவர்களுக்கு கட்டளை யிட்டிருந்தான்.*



*புதிய ஏற்பாட்டில் எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கின்ற கட்டளைகளை மீறி "அற்புதங்களை" செய்கிறோம் என்று சொல்லும் "பிரசங்கியார்களையும்" அவர்களுடைய செய்திகளையும் நாம் எப்படிக் கையாள வேண்டும்?*

ஆவியானவர், யாருக்கும் விளங்காத குழப்பத்தை விளைவிக்கிற அந்நிய பாஷை பேசுதலுக்கு காரணமாயிருப்பார் என்று ஒருவர் எப்படிச் சொல்லக்கூடும்? இவை அனைத்தும் இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்டிருப் பவைகளை நேரடியாக மீறுகிற செயலாயிருக்கிறது.

I கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில் உண்மையில், பவுல் எப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் குறித்து விவாதிக்கிறார்?

**❀ அப். 2ம் அதிகாரத்திற்கு நாம் போகும்போது, இயேசுவானவர் அப். 1:5-ல் வாக்குத்தத்தம் செய்தபடி பரிசுத்த ஆவியானவரால், அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் எனக் காண்கிறோம். இந்த ஆவியின் ஞானஸ்நானம் அவர்களை எல்லாவித அற்புதங்களைச் செய்யும்படி பெலப்படுத்தியது. அறிவு, ஞானம், பகுத்தறிதல், முன்னொரு போதும் கற்றிராத பல பாஷைகளைப் பேசுதல், வியாதியஸ்தர்களை குணப்படுத்துதல், அசுத்த ஆவிகளைத் துரத்துதல் மற்றும் மரித்தோரை உயிரோடே எழுப்புதல் ஆகிய இவைகளை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அப்போஸ்தலரிடத்திற்குக் கொண்டு வரப்பட்ட எல்லோரும் குணமானார்கள் என்று அப் 5:16 கூறுகிறது. "விசுவாச குணமளிப்போர்" என்று இன்றைக்கு தங்களை அழைத்துக் கொள்பவர்கள், தங்களால் குணப்படுத்த முடியாதபோது, " குணம் பெற வருபவரிடம் விசுவாசமில்லை" என்று சாக்குச் சொல்வதுபோல, அன்றைக்கு சொல்லவேண்டிய அவசியம் எழவில்லை. அப்போஸ்தலர்களுடைய அற்புதங்கள், உடனடியானதாகவும், முழுமையானதாகவும் இருந்தது. இன்றைக்குச் சொல்லுவது போல் "கொஞ்சம் பரவாயில்லை", "போகப்போகச் சரியாகிவிடும்" என்பதெல்லாம் அன்றைக்கு அறவே இல்லை.**

அப் 5:32ல் கீழ்ப்படிகிற யாவருக்கும் பரிசுத்த ஆவியானவர்

அருளப்பட்டதாகக் கூறினாலும், அன்றைக்கு அற்புதங்கள் செய்யக் கூடிய வல்லமையுள்ளவர்களாக அப்போஸ்தலர்கள் மாத்திரமே இருந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானார்கள் என்பது உண்மையே. ஆனாலும், வசனம் 12, "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது" என்றே சொல்கிறது.

**❀ அப்போஸ்தலர்கள், சில கிறிஸ்தவர்களைத் தெரிந்தெடுத்து (ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருந்தவர்கள். அப் 6:3) அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களுக்குக் குறிப்பிட்ட வரங்களை தரும் வரைக்கும், அப்போஸ்தலர்களைத் தவிர வேறொருவராலும் அற்புதங்கள் செய்ய இயலவில்லை. இவர்களும் கூட, அப்போஸ்தலர்களால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்ய முடியவில்லை. ஆனால், ஒருவர் ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் வல்லமையுடையவராகவும், இன்னொருவர் வேறு மொழி பேசும் திறன் கொண்டவராகவும், மற்றொருவர் வியாதியஸ்தர்களைக் குணமாக்கு பவராகவும், அடுத்தவர் அற்புத ஞானம் பெற்றவராகவும் இன்னும் பல மொழி பேசுபவர்கள் சபையில் இருந்தால், ஒருவர் மொழி பெயர்க்கும் திறன் கொண்டவராகவும், இன்னொருவர் தீர்க்கதரிசன வரமுடையவராகவும், இப்படி பல வரங்களுள்ளவர்கள் இருந்தனர். இருப்பினும், இவர்கள் அப்போஸ்தலர்கள் போல், தாங்கள் பெற்றுக்கொண்ட அற்புத வல்லமையை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது.**

I கொரிந்தியர் 12 : 8-10 வசனப் பகுதியில் இடம் பெற்றிருக்கிற வரங்களின் பட்டியல், ஒரு கிறிஸ்தவனுக்கு ஒரு வரமும், மற்றொரு கிறிஸ்தவனுக்கு வேறொரு வரமும் கொடுக்கப்பட்டது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. புதிய

ஏற்பாடு எழுதி முடிக்கப்படாத அந்த நாட்களில், ஆவிக்குரிய வளர்ச்சியைப் பொருத்தவரை, கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர், சார்ந்திருக்க வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்யப்பட்டது.

அந்நிய பாஷை பேசும் சில வேளைகளில் வியாக்கியானம் அல்லது மொழியாக்கம் தேவைப்பட்டது (அப்போஸ்தலர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்பட்டதாக, வேதாகமத்தில் எங்கும் காண முடியாது அவர்கள் எங்கு சென்றாலும், அங்கு பேசப்படும் மொழியை தாங்களும் பேசும்படியான வல்லமையை பரிசுத்த ஆவியானவர் தந்தார் என்பது வெளிப்படையான ஒன்று.) ஆகவே, ஒரு கிறிஸ்தவன், தன் சொந்த ஊரை விட்டு, அந்நிய இடத்தில் வசித்தால், அங்குள்ள மக்கள் பேசும் உள்ளூர் மொழியை புரிந்து கொள்ளும்படியான அறிவு அற்புத முறையில் கொடுக்கப்படலாம். ஆனால், அவன் வேறொரு மொழி பேசும் இடத்திற்குப் போனால், அந்த மொழிபேசும் அறிவைப் பெற்றுக் கொள்ளும்படியான வல்லமையை, "தங்கள் கைகளை வைப்பதின் மூலமாக" கொடுக்க அங்கு அப்போஸ்தலர்கள் இல்லாமலிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், அவனுக்கு ஏற்கனவே இருக்கும் அந்நிய பாஷை பேசும் வரம், அவன் அறியாத பாஷை பேசும். இவ்விடத்தில், ஒரு மொழி பெயர்ப்பாளன் இருந்தால்தான் உதவிகரமாக இருக்கும். ஏனென்றால் அப்பொழுது தான் அவன் பேசும் "அந்நிய மொழி", அங்கு பேசப்படும் பாஷைக்கு மொழி பெயர்க்கப்பட முடியும்.

I கொரி. 12 : 8 - 10, வரையுள்ள வசனப்பகுதி தெளிவாக சொல்லுவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், அது என்னவென்றால், ஒரு கிறிஸ்தவனுக்கு அந்நிய பாஷை பேசும் வரம் கொடுக்கப்படுமானால், அவனுக்கு கொடுக்கப்படும் ❀

அந்தநேரத்தில், என்ன மொழியை புரிந்து கொள்ளும் தேவை அவனுக்கு இருந்ததோ, அந்த ஒரே மொழியை மாத்திரம் புரிந்து கொள்ளும்படியான அறிவு அற்புதவிதமாக கொடுக்கப்படும் என்பது. அவனுக்கு, எல்லா மொழியையும் புரிந்து கொள்ளும்படியான வரம் கொடுக்கப்படவில்லை, அவன் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு சென்றால், உடனே, அவனுக்கிருந்த அந்நிய பாஷையின் வரமும் மொழிகளின் அறிவும் இடத்திற்கு இடம் மாறுவது இல்லை, அப்படி மாறியிருந்தால் மொழிபெயர்ப்பாளர்களே அவசியமில்லா திருந்திருக்கும். ஆனால், முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்பட்டதால், அடிக்கடி இடம் மாறினார்கள். ஆகவே, மற்ற மொழிகள் பேசும் அறிவும், வியாக்கியானம் செய்யும் வரமும் தேவைப்பட்டது.

வசனப்பகுதிகளில், பவுல், அற்புதவிதமாக கொடுக்கப்பட்ட "அந்நிய பாஷை" வரத்தை பயன்படுத்துவது பற்றி அநேக கருத்துகளைச் சொல்லுகிறார்.

❀ **தாங்கள் வசிக்கும் இடத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள முடியாத மொழிகளை பேசுகிறவர்கள், அந்த வரம் தேவனிடத்திலிருந்து வந்தது என்று அறிந்திருந்தார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை தேவனும் அறிந்திருந்தார். இன்றைக்கு அந்நிய பாஷையில் பேசுகிறவர்கள், தாங்கள் பேசுவது தங்களுக்கே புரியாது என்று சொல்வதற்கு நேர்மாறாக, வசனம் 4ல் பவுல், அன்றைய அந்நிய பாஷையில் பேசினவன் தனக்கு பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான் என்கிறார், அப்படி என்றால், அவன் என்ன பேசுகிறான் என்பது அவனுக்கு புரிந்து தானே இருந்திருக்கிறது, ஆனால், மொழி பெயர்க்கும் வரத்தை உடையவன் இல்லை என்றால், அந்நிய பாஷை பேசுவதை கேட்கிறவர்களுக்கு எவ்வித பிரயோஜனமுமில்லை (I கொரி.14:2).**

**அவன் சத்தியத்தைப் புரிந்து கொண்டதை தன் செய்கையின் மூலம் விளக்கினாலும், அவன் பேசுவதை கேட்கிறவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், அது கேட்கிறவர்களுடைய இருதயத்தில் கனி கொடுக்காது (வசனம். 14)**

**❀ வியாக்கியானம் செய்பவர் இல்லாதிருந்தால், அந்நிய பாஷையில் பேசுவது தடை செய்யப்பட்டுள்ளது (வசனம் 27) அந்நிய பாஷை பேசும் போது, கூட்டத்தில் இருப்போர் அதைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தால், அவிசுவாசிகள் உள்ளே பிரவேசித்து, இதைக் கண்டு, அந்நிய பாஷை பேசுகிறவர்களுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்று சொல்லும் சூழலை இது ஏற்படுத்திவிடும் என்பதால், அப்படி தடை செய்யப்பட்டது (வசனம் 28).**

**❀ அந்நிய பாஷை வரத்தை நாடுவதைக் காட்டிலும், தீர்க்கதரிசன வரத்தையும், ஞானவரத்தையும் நாடும்படி புத்தி சொல்லப்படுகிறார்கள், ஏனெனில், கேட்கிறவர்களுக்கு இது பக்தி விருத்தியையும், புத்தியையும், ஆறுதலையும் கொடுக்கும். இந்த வரத்தை நாம் பயன்படுத்தும் போது, அது கூடிவந்திருக்கும், எல்லாருக்கும் பிரயோஜனமாக இருக்கும். இப்படி, தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களுடைய நோக்கம், கேட்கிறவர்கள் பக்தி விருத்தியடைய வேண்டும் என்பதிலே இருக்க வேண்டுமேயொழிய, தாங்கள் பெரிய காரியத்தை நிகழ்த்துகிறோம் என்பதைக் காண்பிக்கும்படியாக இருக்கக்கூடாது.**

இந்த வசனப் பகுதிகளை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, I கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில் பவுல் விவாதிக்கும் காரியத்திலிருந்து, இன்றைக்கு பெந்தெகொஸ்தே கூட்டத்தார் செய்யும் காரியங்கள் மிகவும் வித்தியாசப்படுகிறதை நாம் காணமுடியும். உண்மையில், இன்றைக்கு ஆவியின் பெயரால் செய்யப்படும் அநேக காரியங்கள், பரிசுத்த ஆவியானவரால்

ஏவப்பட்டு பேசிய பவுலின் பல கருத்துகளுக்கு நேர் விரோதமானதாக இருக்கிறது. ஆவியானவர், வசனத்தில் ஒன்றைச் சொல்லிவிட்டு, அதற்கு எதிரான காரியத்தில் இன்றைக்கு ஒருவனை கட்டாயம் வழி நடத்தமாட்டார் என்பதை நாமறிவோம், ஆகவே, நாங்கள் ஆவியானவரின் வல்லமையினால் செய்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் பொய்யாகவே அப்படிக் கூறுகிறார்கள். ஒருவேளை அவர்கள் தங்கள் செய்கையில் உண்மையுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால், வேத வசனங்களை அவர்கள் அறியாதிருக் கிறபடியால், வஞ்சிக்கப்பட் டிருக்கிறார்கள். ஐயோ, பாவம்!

**இன்றைக்கு சபைகளில் பெண்கள் ”அந்நிய பாஷையில்” பேசக் கூடாது. உண்மையில், அந்நிய பாஷையின் வரம் இருந்த காலமாகிய அப்போஸ்தலர்களின் காலத்திலேயே, பெண்கள் அப்படிச் செய்யும்படி அனுமதிக்கப்படவில்லை.**

## வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்

1. “பெந்தெகொஸ்தே” மற்றும் ”அதைச் சார்ந்த முக்கிய” சபைகளும் எதில் நம்பிக்கையாக இருக்கிறார்கள்?
2. அப்.2ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, கர்த்தருடைய சபை எப்பொழுது ஆரம்பமானது? “அசெம்பிளிஸ் ஆப் காட்”, “சர்ச் ஆப் காட்” ஆகிய சபைகள் எப்பொழுது ஆரம்பமானது?
3. யாருடைய நாமத்தினால் நாம் அழைக்கப்பட வேண்டும்?
4. இன்றைக்கு “பெந்தெகொஸ்தே” பிரசங்கிமார்கள் செய்வது போல, புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த பிரசங்கிமார்கள், பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய அவசியம்.

வல்லமையையும் மையமாக வைத்து பேசும்படியோ, எழுதும்படியோ அவர்களை வழி நடத்தினாரா?

5. புதிய ஏற்பாட்டிலே எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களில் கொஞ்சம் கொஞ்சமாக அற்புதங்களைப் பற்றிய குறிப்புகள் குறைந்து கொண்டே வந்து, இறுதியில் இல்லாமல் போனது ஏன்?

6. I கொரிந்தியர் 14:40ல், பவுல் கொரிந்து சபைக்குப் புத்திசொல்கையில், சகலமும் ................ ................ ................ ................ கடவது என்றார். இது "பெந்தெகொஸ்தே" கூட்டங்களுக்கு பொருந்தி வருமா?

7. இந்த வசனப்பகுதியின் மையத்தில் என்ன கட்டளை கொடுக்கப் பட்டிருக்கிறது?

8. "பெந்தெகொஸ்தே" பெண் பிரசங்கியார்கள் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படுவதாக சொல்கிறார்கள், அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று நமக்கு எப்படித் தெரிகிறது?

9. வசனம் 9ல் பவுல் என்ன கேள்வி கேட்கிறார்?

10. வசனம் 10ல் பவுல், அந்நிய பாஷையை "பரலோக மொழி" என்று சொல்லுகிறாரா? அல்லது அது இவ்வுலகில் பேசப்படும் பல மொழிகளை குறிக்கிறது என்று பேசுகிறாரா?

11. பரிசுத்த ஆவியானவர், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், அந்நிய பாஷை பேசும்போது, புரிந்து கொள்ளும்படி பேசவேண்டும் என்பது குறித்து, என்ன எழுதும்படி பவுலுக்கு கட்டளை கொடுத்தார்?

12. அப் 5 : 32ன் படி சுவிசேஷத்திற்கு கீழ்படிகிற யாவருக்கும் வாசம் செய்யுமளவில் பரிசுத்த ஆவியானவர்

கொடுக்கப்பட்டாரா? ஆனால் ஆரம்பத்திலிருந்து எல்லா கிறிஸ்தவர்களும் அற்புதம் செய்யும் வல்லமையை பெற்றிருந்தார்களா?

13. அப்.6:3ல் அப்போஸ்தலர்கள் மற்றவர்களுக்கு அற்புதம் செய்யும் வரத்தை எப்படிக் கொடுத்தார்கள்?

14. இப்படிப்பட்ட வரத்தை உடைய கிறிஸ்தவர்கள் எல்லா வகையான அற்புதத்தையும் செய்யமுடியுமா?

15. அந்நிய பாஷை பேசப்படும் வரம் ஒருவனுக்கு கொடுக்கப்பட்டதென்றால் அவனுக்கு .................. .................. .................. என்று பொருள்.

16. அந்நிய பாஷை பேசும் ஒருவருக்கு எல்லா மொழிகளைப் பற்றிய அறிவும் கொடுக்கப்பட்டதா?

17. "வியாக்கியானம்" செய்ய ஒருவருமில்லாத போதிலும் பெந்தெகொஸ் தேகாரர்கள் அந்நிய பாஷை பேசுவதுண்டா? பரிசுத்த ஆவியானவரும், பவுலும் இதை தடை செய்திருக்கிறார்களா?

18. இன்றைய காலகட்டத்தில், சபையாக கூடிவரும் போது, அந்நிய பாஷையில் பேசும்படி தேவன், பெண்களுக்கு அனுமதி அளித்திருக்கிறாரா? I கொரிந்தியர் 14ம் அதிகாரத்தின்படி, தேவன் இதை எப்பொழுதாவது அனுமதித்ததுண்டா?



# 12 தாய்மார்களே, உங்கள் சிறு பிள்ளைகளுக்கு போதித்துப் பயிற்சியளியுங்கள்



***கடந்த 11 பாடங்களில் நாம் பயன்படுத்தின வசனப்பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு, இக்கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.***

அதி வேகமானதும், பரபரப்பானதுமான இவ்வுலகில், அநேக காரியங்களுக்கு மிகக்குறைவான நேரமே ஒதுக்கப்படுகிறது. இதிலே வருத்தப்படவேண்டிய காரியம் என்னவெனில், நமது முக்கியத்துவப் பட்டியலில், நமது பிள்ளைகள் கடைசியிடத்தைப் பெறுவதுதான்.

பெற்றோர்களுக்கான கடமைகளைச் செய்யும் அணுகுமுறையில், மக்கள் வெவ்வேறு கருத்துடையவர்களாக பிரிந்திருக்கிறார்கள். அவைகளில் மூன்றை நாம் இப்பொழுது கவனிப்போம்.

**❀ முதலாவதாக, தங்கள் குழந்தைகள் மற்றும் பிள்ளைகள், "சிறுவர்களாக" இருக்கிறபடியால், உணவும், உடையும் கொடுத்து அவர்களைப் பராமரித்தால் போதும், பிற காரியங்கள் அவ்வளவு முக்கியமானது அல்ல என்று எண்ணுகிறார்கள். பிள்ளைகள் வாலிபப் பருவம் அடையும் பொழுது அவர்கள் எண்ணம் எப்படி இருக்கிறது, அவர்கள் பிரச்சனை, விருப்பு, வெறுப்பு என்னவென்பதை அறிந்து அதில் கவனம் செலுத்தினால் போதும் என்றும் நினைக்கின்றனர்.**

## விவாதக் கருத்து



*உங்களை வளர்ப்பதிலே உங்கள் பெற்றோரின் கொள்கை என்னவென்று நினைக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளை நீங்கள் வளர்ப்பதற்குரிய கொள்கை என்ன? தங்கள் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதில் எந்தக் கொள்கை பெரிதும் உதவுமென்று நம்புகிறீர்கள்? பெரியவர்களாக வளர்ந்திருக்கும் நீங்கள், எப்பொழுதாவது உங்கள் வாழ்க்கையை திரும்பிப் பார்த்து, "இதை நான் கற்றிருந்தால் அல்லது இது எனக்கு சொல்லப்பட்டிருக்குமானால் நான் இப்பொழுது நன்றாக இருந்திருப்பேனே?என்று எண்ணிய துண்டா? பெரியவர்களுக்கான பொறுப்பு களுக்குள் நீங்கள் மாற்றப்பட்ட காலகட்டம் உங்களுக்கு எளிதான ஒன்றாக இருந்ததா அல்லது கஷ்டமாக இருந்ததா?*

ஆனால், அநேக பெற்றோர்கள் நினைப்பதுபோல், இப்பொழுது அவர்களுக்கென்ன அவசரம், "பிறகு பார்க்கலாம்" என்ற நிலையில் இருப்பவர்கள் அல்ல குழந்தைகள். வாலிபத்தை நோக்கி அவர்கள் வேகமாக வளருகிறபடியாலும், அப்பொழுது, எல்லாமே அவர்களுக்கு முக்கியமாக இருக்கப்போகிறபடியாலும், அவர்கள் **குழந்தைகளாக இருக்கும்போதும் எல்லாமே முக்கியம்தான்!** "நான் ஒரு வாலிபனை வளர்க்கிறேன், நான் அவளுக்கோ / அவனுக்கோ போதிக்கும் காரியங்கள், அவர்கள் வயது வந்து பக்குவமடையும் காலத்தில் வாழ்க்கையை எப்படி அணுகுவாள் / அணுகுவான் என்பதைத் தீர்மானிக்கும்" என்பதை மனதில் கொண்டால், பிள்ளை வளர்க்கும் விதமே சற்று வித்தியாசமானதாக சிறப்பாக

அமைந்துவிடும்.

ஒவ்வொரு குழந்தைக்கும், முதல் 5 வருடங்கள் மனத்தளவிலும், உணர்விலும் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பருவமாகும். எந்த அளவு நாம் அவர்களோடு நேரத்தை செலவு செய்து, கற்றுக் கொடுத்து, பகிர்ந்துகொண்டு, போதித்து வளர்க்கிறோமோ அந்த அளவு அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு அவசியமானதை பெற்றுக்கொள்ளமுடியும். பரிசுத்த வேதாகமம், இதைப்பற்றிப் பேசும்போது, "நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக" என்கிறது. (உபாகமம் 11:19,20) ஆகையால், உணவு தயாரிக்கும் வேளையானாலும், பயண நேரமானாலும், ... துணிகளை மடித்து வைக்கும் சமயமானாலும் சரி, இன்னும் வேறு எந்த சந்தர்ப்பமாக இருந்தாலும், அப்பொழுதெல்லாம், தேவன் நமது பிள்ளைகளுக்கு, வேத வசனங்களைப் போதித்து, அவர்களை சத்தியத்தில் பலமாக நாம் கட்டுவிக்கவேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்.

**❀ பிள்ளை வளர்ப்பு பற்றி பெற்றோர்கள், கொண்டிருக்கும் இரண்டாவது தவறான கருத்து, "அளவுக்கதிகமான காரியங்களை அவன்மேல் சுமத்த வேண்டாம். குழந்தைப் பருவத்தை அவன் சந்தோஷமாக அனுபவிக்கட்டும். இன்னும் கொஞ்ச காலத்தில், அவன் வளர்ந்து, தொடர்ந்து பொறுப்புகளை சுமக்க வேண்டியதிருக்கிறது" என்பார்கள். இப்படிப்பட்ட முடிவு, பெரும் பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.**

நிச்சயமாக, ஒரு குழந்தை, பெரியவர்களுக்கான பொறுப்பை ஏற்று நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் அதே நேரத்தில், இளம் வயதில் சற்றும் பொறுப்பில்லாமல் தன் இஷ்டப்படி செய்ய அனுமதிக்கவும் கூடாது. ஏனென்றால், நமக்கே ஆச்சரியத்தை உண்டாக்கும் விதத்தில், நாட்கள் வேகமாக ஓடி, தன்னுடைய மேற்படிப்புக்காக நமது பிள்ளை வீட்டைவிட்டு வெளியேறி, வேலைபெற்று, திருமணமும் ஆகி, தன்னுடைய சொந்த குடும்பத்தை நடத்தத் தொடங்கிவிடுவான். அவன் வளரும் பருவத்தில் கொஞ்ச கொஞ்சமாக பெற்றுக்கொள்ள வேண்டிய எந்த ஒரு பயிற்சியும், ஒழுக்கமும் இல்லாமல் வளர்ந்துவிட்டு, குடும்பம்

**விவாதக் கருத்து**

***நீ**ங்கள் வளர்ந்த விதம், உங்கள் பிள்ளைகளை நீங்கள் வளர்ப்பதை பாதிக்கிறதா? உங்கள் இளம் பிராயத்தில் நீங்கள் தவறவிட்ட எல்லா அநுகூலமான காரியங்களையும் உங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்க முயற்சிக்கின்ற பெற்றோரா நீங்கள்? அல்லது உங்கள் பெற்றோர்கள் உங்களுக்காக அதை ஏற்கனவே செய்தார்களா? இப்பொழுது அத்தருணம் உங்களுக்கு வந்திருப்பதால், இவ்வுலகத்தின் பொருள்கள் கொஞ்சமாக இருந்தாலும் அதிலே சந்தோஷமாய் இருக்க வேண்டுமென்று உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுத் தருகிறீர்களா? உங்கள் பெற்றோர்கள் உங்களை கண்டித்ததை விட நீங்கள் உங்கள் பிள்ளைகளை கண்டிப்பாய் வளர்க்கிறீர்களா? இல்லையா? யாருக்கு பிள்ளைகள் அதிக மரியாதை கொடுப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?*



நடத்த ஆரம்பித்தவுடன், அதிக பாரம் ஏற்றப்பட்டு, மேட்டிலே செல்லும் ஒரு வண்டியைப்போல திணறுவான். எதைச் செய்யவேண்டும், எப்பொழுது செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்பவைகள் அவனுக்குத் தெரியாதபடியால் தன்னுடைய பொறுப்புகளைத் தட்டிக்கழிப்பான். இன்றைக்கு சமுதாயம் சீரழிந்து கொண்டிருப்பதற்கும், குடும்பங்கள் பிளவுபட்டு நிற்பதற்கும், விவாகரத்து, கைவிடப்பட்ட குழந்தைகள், முதியோர் இல்லங்களின் தேவை போன்ற இவைகளுக்கு, இதுதான் காரணம்.

**❀ மூன்றாவதாக, பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் கடைப்பிடிக்கும் இன்னொரு அணுகுமுறை என்னவெனில், குழந்தைகளின் கண்களுக்குமுன், அவன் எப்படியாக இருக்கவேண்டுமென்பதற்கான சிறந்த மாதிரி வைக்கப்படுமானால், அந்தக் குழந்தை தானும் தன்னை அது போலவே வளர்த்துக் கொள்ளும் என்பது. இது ஞானமும், தொலைநோக்கும், பொறுமையும் உள்ள பெற்றோர்களின் சிந்தையாகும்.**

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்று ஞானி சாலமோன் கூறுகிறார் (நீதி : 22:6)

பெண் பிள்ளைகள் சிறுவயதாய் இருக்கும்போதே, அவர்களுக்குக் கற்றுத்தரப்படவேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் எதிர்காலத்தில் மனைவிகளாக, தாய்மார்களாக, வீட்டை உருவாக்குகிறவர்களாக மாறப்போகிறார்கள். எந்த ஒருபிள்ளை, சிறுவயதில், தன் வயதிற்கு கீழ் இருக்கும் பிள்ளைகளை, குழந்தைகளைப் போல் பாதுகாத்து கவனித்துக் கொள்கிறாளோ அந்தப் பிள்ளை ஒரு பலமான தாய்மைக்குரிய உணர்வை பெற்றுக் கொள்கிறாள். இதே உண்மைதான் சமையல் செய்தல், வீட்டை சுத்தம் செய்தல், மேசை நாற்காலிகளை சுத்தம் செய்தல், பாத்திரங்களை கழுவுதல் போன்ற காரியங்களிலும்

பெண் பிள்ளைகளின் வாழ்வில் அமைகிறது.

சிறுபையன்கள், தங்கள் வீட்டில் இருக்கும் வாகனங்களைக் கழுவி சுத்தம் செய்தல், அதைப் பாதுகாத்தல், வீட்டைச் சுற்றிலும் நடக்கிற காரியங்களில் கவனமாய் இருத்தல், தோட்டத்தை சீராக வைத்தல், புல்வெளிகளை அழகாக வரிசைப்படுத்துதல், போன்ற ஆண்களின் வேலைகளைச் செய்து பழக வேண்டும். ஒரு வேளை, அவன் தனித்து அந்த வேலைகளைச் செய்ய முடியாவிட்டால், தகப்பன் அதை அறிந்து அவனோடு கூட வேலை செய்து அவனை ஒரு பொறுப்புள்ளவனாக வளர்க்க வேண்டும். பொதுவாக, பிள்ளைகள் நம்மிடமிருந்து கேட்பதைக் காட்டிலும், பார்ப்பதின் மூலம் அதிகம் கற்றுக் கொள்கிறார்கள்.

ஆகவே, மனைவிகள் வீட்டைச் சுற்றி வளர்ந்த புல்களை வெட்டலாம், கணவன்மார்கள் வீட்டை சுத்தம் செய்தல், தரையை துடைத்தல், சில வேலைகளில் குழந்தைகளுக்கு துணியை மாற்றுதல், இன்னும் இது போன்ற வேலைகளைக் கூடச் செய்யலாம். குழந்தையாக இருக்கும் போது, சிறு வேலைகளை அவர்களுக்குத் தந்து பொறுப்புணர்வை வளர்க்கும் பயிற்சி, திருமண வாழ்க்கையில், கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்கிறவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக அளிக்கப்படும் பயிற்சியின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆனால், ஒரு பையனுக்கு கொடுக்கப்படும் பயிற்சி, அவனை ஒரு ஆணாக உருவாக்குவதற்கு உதவியாக இருக்க வேண்டும். அதே போல, பெண் பிள்ளைகளுக்கும் அப்படியே பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்., அதிலும் குறிப்பாக பெண்களுக்கான வேலைகளிலும், உணர்வு சம்பந்தமான காரியங்களிலும் அவர்களை வளர்க்க வேண்டும். இருபாலரும் செய்யும் வேலைகள் வேறுபட்டு இருப்பதால், தங்கள் பணிகளை அவர்கள் சிறப்பாக செய்வதற்கு, அவர்களுக்கு இயற்கையாக கொடுக்கப்படும் இயல்புகளை பெலப்படுத்த வேண்டியது

## விவாதக் கருத்து

*பெற்றோர்களின் பொறுப்பு பற்றியும், குடும்ப பொருளாதார சூழ்நிலை பற்றியும் பிள்ளைகள் அறிந்து கொண்டால் அது நமது பிள்ளைகளுக்கு நம்பிக்கையற்ற சூழ்நிலையையும், பொருட்களை வீண் செய்யும் மனப்பான் மையும் உண்டாக்குமா? பணத்தை கையாளுகின்ற விசயத்தில் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு எப்படிப் போதிக்க வேண்டும்? பொருட்களுக்கும், உடைமை களுக்கும் மற்றும் சரீரப் பிரகாரமான காரியங்களுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை விட ஆவிக்குரிய காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை பெற்றோர்கள் எப்படிப் பிள்ளைகளுக்கு சொல்லித் தரமுடியும்? (மத் 6:19–34)*



பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது, அவர்கள், பணத்தை கையாளுவது எப்படி என்றும், குடும்ப வரவு செலவுகளுக்கு தேவையான தொகை எவ்வளவு என்று அறிவதும், வீட்டு வாடகை, மின்சாரக் கட்டணம், வீட்டு வரி, உடை, உணவு இவைகளுக்கான செலவு பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். குடும்பத்திற்கான வரவு செலவு கணக்குப் பார்க்கையில், அவர்களையும் அருகில் உட்கார வைத்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் "தேவைகள் சந்திக்கப்படுவதில்" எத்தனை கஷ்டம் குடும்பத்தில் இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள முடியும். பெரியவர்களின் உலகம் எத்தனை பொறுப்புகளை கொண்டது என்ற உண்மையை அவர்கள் அறிந்து கொள்ள இது உதவியாக இருக்கும்.

படிவங்களையும், பத்திரங்களையும் பூர்த்தி செய்யும்

பெரியவர்களுக்கான பொறுப்பை (அடகு பத்திரம், வருமான வரிபடிவும், காப்பீட்டுப் பத்திரம்) இளைஞர்களும் அறிந்து கொள்ள வேண்டும். தேவனை வஞ்சிக்கும் பாவத்தை (மல். 3 : 8-10) அவர்கள் தங்கள் வாழ்வில் ஒரு போதும் செய்யாதிருக்க, தங்கள் பகுதி நேர வேலையிலிருந்து வரும் வருமானத்திலிருந்தும் அல்லது பெற்றோர் தரும் பணத்திலிருந்தும், ஒரு பகுதியை தேவனுக்கு கொடுக்கும்படி பயிற்சியளிக்க வேண்டும். பொருளாதார விஷயத்தில், கணவன் மனைவி இருவரில் யாரோ ஒருவருக்கிருக்கும் பொறுப்பற்ற தன்மையால், பல திருமண உறவுகள் முறிந்திருக்கிறது. சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு கவனமாக பயிற்சி அளிக்கப்படுமானால், இப்பிரச்சினையை தவிர்க்க, அது உதவியாக இருக்கும்.

**ஆண்கள் தலைவர்களாகவும், பெண்கள் உதவி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.**

ஒரு ஆண்பிள்ளைக்கு, அவனுக்குரிய காரியங்களைச் செய்யும்படியாக, பணத்தை கையாளுவது பற்றியும், தேவனுடைய மனுஷனுக்கு தேவையான மனப்பான்மையை வளர்க்க உதவுவது பற்றியும் போதிப்பது முக்கியமானது. அவன் தன் குடும்பத்தில், தாழ்மை மற்றும் அன்புள்ள ஒரு தலைவனாக இருக்க வேண்டுமென்றும், உலகத்திற்கும், தன் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் நடுவே ஒரு பாலமாக இருக்க வேண்டுமென்றும் ஓர் ஆவிக்குரிய தலைவனாக, தன் செயலுக்கெல்லாம் தேவனிடத்தில் பதில்தர வேண்டியவனாக இருக்க வேண்டுமென்றும் நாம் அவனுக்கு கற்றுத்தர வேண்டும்.

ஒரு பெண்ணுக்கு, ஆணோடு இணைந்து, ஈடுகொடுத்துச் செயல்படுவது எப்படி என்ற பயிற்சி, அவளுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகளில் ஒன்றாக இருக்க வேண்டும். வாழ்க்கைத் துணையோடு அவளுக்கு எழும் பிரச்சினையை சமாளிக்க இது உதவியாக இருக்கும். தேவனுடைய பார்வையில்

ஒரு பெண், தன் வாழ்க்கையில் ஒரு பகுதியாக இருக்கிற திருமண உறவுக்காக ஆயத்தமாக வேண்டியது அவசியமாக இருக்கிறது. தான் தெரிந்து கொண்ட வாழ்க்கைத் துணை (அல்லது தன்னை தெரிந்து கொண்ட வாழ்க்கை துணையை) முழுமையடைச் செய்வதும், தன் குடும்பத்தின் மீது அன்பு செலுத்தி, கருணையாக கவனிப்பதும் அவசியம். தன்னுடைய நலனுக்காக தேவன் தன் கணவனை பொறுப்பாளியாக வைத்திருக்கிறார் என்பதை அவள் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு பெண், தன் கணவனுக்கு ஏற்ற துணையாகவும், பிள்ளைகளுக்கு நல்ல பயிற்சியாளராகவும் செயல்படுவதற்காக, தன்னை உயர் கல்வி கற்பதில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுதெல்லாம், மனைவியாகவும், தாயாகவும், குடும்பத் தலைவியாகவும் இருந்து கடினமாக உழைத்துக் கொண்டேயிருப்பது துக்கமான ஒன்று என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. மனைவியாக, தாயாக, குடும்பத் தலைவியாக இருப்பது சோர்வான மற்றும் ஆர்வமில்லாத வேலை என்றும் சொல்லப்படுகிறது. அநேக தாய்மார்கள், பிள்ளை வளர்க்கும் ஆர்வக்குறைவான வேலையிலிருந்து தப்பி, ஏதோ ஒரு அலுவலகத்தில் பணிபுரிவது மிக மகிழ்ச்சியானது என்று எண்ணுகிறார்கள். ஒன்றும் அறியாதவர்களும், ஒடுக்கப்பட்டவர்களுமே வீட்டிலிருப் பதாகவும், அறிவு மிகுந்தோர், வெளி உலகில் போட்டியிட்டு, தங்கள் வாழ்வைக் கட்டுவதும், அதிக சம்பாத்தியம் செய்வதுமாக இருக்கிறார்கள் என்று நவீன கலாச்சாரம் மீண்டும், மீண்டும் சொல்லுகிறது. இதுதான் கற்றவர்களின் அணுகுமுறை என்றும் கருதப்படுகிறது.

தாய்க்கு உரிய பணிகள், கடந்த கால சந்ததியில் புகழப்பட்டதாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளை மகிமையாக எண்ணினார்கள். தங்கள் புருஷரில் பெருமை கொண்டார்கள்; அவர்களனைவருமே தங்கள் வாழ்க்கையில் ஒதுக்கப்பட்டவர்களாக, கல்வியறிவற்ற பேதைகளாக

இருக்கவில்லை. அவர்கள் எப்படியிருக்க வேண்டுமென்று போதிக்கப் பட்டார்களோ, அதின்படியே செய்ததால், குடும்பத்திற்காகப் பாடுபடுவதில் மிகவும் சந்தோஷமுள்ளவர் களாயிருந்தார்கள்.

**அவர்கள் எதைக் கேட்கிறார்கள் அல்லது எதைப் பார்க்கிறார்கள்?**

நாம் எப்படி சிறப்பானதைக் கற்றுக் கொள்கிறோம்? நமது பிள்ளைகள் எப்படி சிறப்பானதைக் கற்றுக்கொள்கிறார்கள்?

❀ **நமது வாயின் வார்த்தையின் மூலமாக: நமது பிள்ளைகள், சிறப்பாக வளர்ந்து பெரியவர்களாக நாம் விரும்பினால், அவர்கள் எதை கற்றுக் கொள்ள வேண்டுமோ, அதை, நம் வாயின் வார்த்தைகளால் அன்றாடம் சொல்லித் தர வேண்டும்.**

❀ **முன் மாதிரியான வாழ்க்கையின் மூலமாக: நாம் அவ்வப்பொழுது அநேக காரியங்களைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால், ஒரு நாளில் 24 மணி நேரம் வாழ்கிறோம். ஆகவே, நமது பிள்ளைகள், நம்மிடம் கேட்பதின் மூலமாக கற்றுக் கொள்வதை விட பல மடங்கு நம்முடைய வாழ்க்கையைப் பார்த்துக் கற்றுக் கொள்கிறார்கள்.**

அதுவும் குறிப்பாக, மனப்பான்மைகளை வளர்த்துக் கொள்வதில் இது இன்னும் உண்மையாக இருக்கிறது. ஒரு மனைவி தன் கணவனோடு எப்பொழுதும் வாக்குவாதம் செய்து சண்டையிட்டு, அவன் தலைமைக்கு சதா சவாலாக இருக்கும் ஒரு பெண், தன்னுடைய மகள், தன் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பவளாக இருக்க வேண்டுமென்ற போதனையில் வெற்றியடைய முடியாது? அது போலவே, தன் மனைவியை அவமதித்து தவறாக நடத்தின கணவனோ அல்லது தன் மனைவிக்கு அடிமையாக இருப்பவனோ தன் மகன்களுக்கு, கிறிஸ்து சபையை நேசித்தது போல நீங்களும் மனைவியை நேசிக்க வேண்டுமென்றோ அல்லது தலைமைத்துவ பொறுப்பு

பற்றியோ சரிவர போதிக்க முடியாது. நமது பிள்ளைகள், வாழ்க்கைகான நமது அணுகுமுறையிலிருந்து அநேக காரியங்களை கற்றுக் கொள்வார்கள் என்பது சந்தேகமில்லாத உண்மையாக இருப்பதால், நாம் கற்றுக் கொடுக்கும் பாடங்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

## உண்மையான அதிகாரி யார்?

ஆண், பெண், பெற்றோர் ஆகிய இவ்வுறவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரத்தை இவர்கள் யாரிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்? தலைமைத்துவம், கீழ்ப்படிதல் ஆகிய இவைகள் ஓர் இடத்தில் உள்ள நடை முறை கலாச்சாரத்தைப் பொறுத்து தான் இருக்கும், அதற்கு மேல், இதில் ஒன்றுமில்லை என்று நினைக்கிறார்கள். ஆண்கள், ஆணாதிக்கம் உடையவர்களாக இருப்பதால்தான் பெண்களை அடக்கி ஆளுகிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள். பெண்களும், தங்கள் கணவன்மார்களுக்கு அடங்கி, ஒடுங்கி, நடந்ததால் தான், கணவன்மார்கள் அவர்களைக் காலின் கீழ்போட்டு மிதித்து தவறாகப் பயன்படுத்தி யிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இன்றைக்கு பிள்ளைகள், தங்களை கட்டுப்படுத்தும் பெற்றோர், ஆசிரியர், அதிகாரிகள், அரசாங்கம் ஆகியவைகளுக்கு கீழ்ப்படியாமல் எதிர்த்து நின்று எந்த ஒரு அதிகாரத்தையும் மதிக்காமல் நடந்து கொள்கிறார்கள்.

ஆனால், அதிகாரம் அனைத்தும் தேவனிடத்திலிருந்து வருகிறது. மனுக்குலம் முழுவதற்கும், அவர்களுக்கிருக்கும் உறவுக்கும் அவரே அதிகாரியாக இருக்கிறார். கணவன், வீட்டுக்கு தலைமை ஏற்று நடத்த வேண்டுமென்று அவர் சொல்லும் போது, ஒரு சிருஷ்டிகராக, முழு அதிகாரத்தோடுதான், ஆண்களை அந்த கனமான பணிக்கு நியமிக்கிறார். பெண்கள், ஆணுக்கு “ஏற்ற துணை” என்றும், அவள் இதற்காகத்தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறாள் என்றும் அவர் சொல்லும் போது, அவர் சிருஷ்டிகர் என்ற அதே அதிகாரத்தோடுதான் (எபே. 6 ; 1

சொல்லுகிறார். தேவனுடைய அதிகாரத்தை, அவருடைய முறையை அல்லது ஒழுங்கை, எந்த ஒரு மனிதனும் எதிர்த்து வெற்றி பெற முடியாது.

பொறுப்புகளில், கவனமாக இருக்க மறுக்கும் ஆண், தன்னைக் குற்றப்படுத்துகிற, சந்தோஷமில்லாத மனைவியை ஆர்வமில்லாமல் அல்லது அக்கறையில்லாமல் நடத்துவான். ஆனால், தேவன் தன்னுடைய பிரமாணத்தை அவன் மீறியிருக்கிறான் என்று அவனிடம் ஒரு நாளில் கேட்கும் போதுதான், உண்மையில் அவன் யாரோடு யுத்தம் செய்தான் என்பது அவனுக்கு விளங்கும். அதுபோல, ஒரு பெண்ணும், தன் கணவனுடைய தலைமைத்துவத்தை அசட்டை செய்தால், அவள் தேவனோடு யுத்தம் செய்கிறாள்.

இந்த உண்மையை, ஆண்களும், பெண்களும் தங்கள் குழந்தைகளுக்கு சொல்லித் தர வேண்டும். “நான் சொல்கிறேன், ஆகவே நீ இதைச் செய்” என்று பெற்றோர் ஒரு போதும் சொல்லக் கூடாது. ஆனால், பெற்றோர்களான தாங்கள், தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்பதால், இவைகளை சொல்வதாக அவர்களிடம் வலியுறுத்திக் கூற வேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்கு எதிராக செயல்படும் பொதுவான சூழலை, இது தவிர்க்க மிகவும் உதவியாக இருக்கும். இது மாத்திரமல்ல தேவ கட்டளைக்கு பிள்ளைகள் கீழ்ப்படிய வேண்டும் என்றும் கற்றுக் கொள்வார்கள்.

“பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம், உனக்கு நன்மை உண்டயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும், உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக

- 4). “பிள்ளைகளே, உங்களை பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது” (கொலோ. 3 ; 20)

பிள்ளைகள், தங்கள் பெற்றோர், தேவன் தந்த பிரமாணத்திற்கு உட்பட்டு இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். தேவன் மீது அன்பு செலுத்து, பெற்றோருக்கு கீழ்ப்படி, சட்டங்களுக்கு கீழ்ப்படி, என்றும், மற்ற காரியங்களை போதிப்பதிலும், பெற்றோர்கள் தேவ கட்டளைக்கு கீழ்ப்படிவதைத் த்விர வேறு வழியில்லை. பெற்றோர்கள் எப்படி தேவனுக்கு கீழ்ப்படிவது அவசியமோ அது போலவே பிள்ளைகளும் பெற்றோருக்கு மாத்திரமல்ல, தேவனுக்கும் கீழ்ப்படிவது அவசியம்.

மனுக்குல உறவு பற்றிய சிறப்பான பொக்கிஷத்தை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சொல்வது, ஒரு கனமான பொறுப்பாகும். குடும்பத் தலைவனாக இருப்பதால் கணவனுக்கு அதிக பொறுப்பிருக்கிறது. ஆனால், மனைவி, தன் குடும்பத்தோடு எப்பொழுதும் இருந்து, குடும்பத்தை உருவாக்குவதில் முழு நேரத்தையும் செலவழிப்பதாலும் ஈடுபடுவதாலும் அவளுக்கு இன்னும் அதிகப் பொறுப்பிருக்கிறது. இப்படிப்பட்ட, கண்ணோட்டத்தைத் தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இப்படி செய்யும் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும்.

**வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்**

1. பிள்ளை வளர்ப்பிலிருக்கும் 3 வகையான அணுகுமுறைகள் யாது?

2. குழந்தைகளோடு ஒரு சிறுபெண் விளையாடும்போது அவள் எவ்வகையாக நெருக்கத்தைக் கற்றுக் கொள்கிறாள்?

3.சிறுபெண்களிடம் தாய்க்குரிய மனப்பான்மை வளர்க்கப் படாமல், அவளுக்கு, பையனுக்குரிய ஆர்வங்களை திணித்து வளர்த்தால்,

அவள் பெரியவளாகி, பெண்ணுக்குரிய பணிகளை ஏற்றுக் கொள்வதற்கு, ஆயத்தமாகிறதை அது பாதிக்குமா?

4.தகப்பன்மார்கள் தங்கள் மகன்களிடம் ஆணுக்குரிய குணத்தை எப்படி வளர்ப்பது?

5.ஒரு பிள்ளை வளரும் போது அவளுக்கோ, அவனுக்கோ எவ்வகையான பயிற்சிகள் தேவைப்படுகிறது? நாம் பாடத்தில் பார்க்காத காரியங்களையும் விவாதி.

6.நமது பிள்ளைகளுக்கு "தேவனை வஞ்சிக்கும்"படியான சோதனை வராமல் இருக்க, நாம் அவர்களுக்கு எப்படி போதிக்க வேண்டும்? பயிற்சி கொடுக்க வேண்டும்?

7.அணுகுமுறை பற்றி பையன்களுக்கு தொடர்ந்து என்ன போதிக்க வேண்டும்? பெண் பிள்ளைகளுக்கு என்ன போதிக்க வேண்டும்?

8.பெண்களுக்கென்று, தேவன் கொடுத்திருக்கும் பணிகளைப் பற்றி பெண்கள் இன்று எவ்வாறு நினைக்கிறார்கள்?

9.பிள்ளைகள் எப்பொழுது சிறந்ததை கற்றுக் கொள்வார்கள்?

10.மனித உறவுகளில் யார் இறுதியான அதிகாரத்தை உடையவராக யிருக்கிறார்?

11.தேவனுக்குக் கீழ்ப்படியும் மனப்பான்மையை பிள்ளைகள் கற்றுக் கொள்ளும்படி, பெற்றோர்கள் எப்படியெல்லாம் உதவி செய்யலாம்?

12.பிள்ளைகள் எதைக் கற்றுக் கொள்ளவேண்டும்?

**ம**னித சிருஷ்டிப்பில் சரிபாதியிடத்தை ஒரு பெண்

## 13 பெண்களின் பங்கு என்ன?



பெற்றிருக்கிறபடியால் அவள் முக்கியமானவளென்பதும், வாழ்க்கையில் அவள் பங்கு முக்கியமானதென்பதும் தெளிவாகவே தெரிகிறது. தேவன், குறிப்பிட்ட பொறுப்புகளை ஆண்களுக்குக் கொடுத்துள்ளார். மற்ற பொறுப்புகள் பெண்களுக்குச் சொந்தமானதாக இருக்கிறது. எதுவும் பாதிப்புக்குள்ளாகதபடி அனைத்து காரியங்களும் சரியாகச் செய்து முடிக்கப்படுவதற்கு, இருவரும் தங்கள் பங்கை சரிவரச் செய்வது முக்கியமாகும். இதில் ஆணோ, பெண்ணோ தங்களுக்கென கொடுக்கப்பட்ட வேலையை நிராகரித்துவிட்டு, அதற்குப் பதிலாக மற்றவர்களின் வேலையில் குறுக்கிட்டு, அவர்களுடைய வேலையை செய்ய முற்படும்போது, அங்கே பிரச்சினைகள் வந்து சேரும்.

**தேவனுக்கு முன்பாக பெண்களுக்கென்று நான்கு வகையான பொறுப்புகள் உள்ளன.**

**1. திருமணத்தில் 2. வீட்டில் 3. சபையில் 4. சமுதாயத்தில்.** இவைகளில் ஏதாவதொன்றில், பெண்கள் தாங்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்யத் தவறினால் எல்லாம் பாதிப்புக்குள்ளாகும்.

### திருமணத்தில் பெண்களின் பங்கு

**❀ புருஷனானவன், தன் மனைவிக்குத் தலையாய் இருந்து, அவளுடைய தேவைகளைச் சந்தித்து, பாதுகாக்கும் பொறுப்பை உடையவனாய் இருக்கிறான். எபே. 5: 25, 28, 29 ஆகிய வசனங்கள் ஒரு கணவன், கிறிஸ்துவானவர் சபையின் மேல் அன்பு கூர்ந்து அதன் மேன்மைக்காகத் தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்தது போல மனைவியைத் தன் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூர வேண்டும். ஒரு மனிதன் தன் மனைவியின் மீது இந்தளவு அக்கறை கொண்டு, அவளைப் பாதுகாத்து போஷிக்க உறுதியாகத் தீர்மானித்து விட்டால் அங்கே பலமான, பாதுகாப்பான திருமணத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டு விடும்.**

தேவனால் கொடுக்கப்பட்ட இந்த தலைமைத்துவத்தின் பொருள், கணவன் ஒரு கொடுமைக்காரனாகவும், இழிவாக நடத்துகிறவனாகவும் இருப்பதற்கு வழங்கப்பட்ட அதிகாரம் என்றாகிவிடாது. சில ஆண்கள், எப்போதெல்லாம் பொறுமையை இழக்கிறார்களோ, அப்போதெல்லாம் மனைவிகளை அடிக்கிறார்கள். சில ஆண்கள், தன்னுடைய மனைவியின் நலன் மற்றும் அவர்களின் மகிழ்ச்சி பற்றி துளியும் கவலைப்படாமல், முடிந்தளவு வேலை வாங்கி, கசக்கிப் பிழிந்து, அடிமைகளைப் போல நடத்துவர். சிலர், தங்கள் மனைவிகளை மதிப்பில்லாமல் பேசி, அவர்களைச் சிறுமைப்படுத்தி, ஏதோ அவர்கள் அறிவீனர்கள், ஒன்றுமறியாதவர்களென்றும், அவர்களுடைய யோசனைகள் எந்தவகையிலும் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்பட தகுதியற்றது என்றும் நினைக்கும்படி செய்கின்றனர், இப்படி மட்டரகமாக நடந்து கொண்டு, தாங்கள் ஆண்களென்றும், பெண்களை ஆளும்படி தேவனால் உண்டாக்கப்பட்டவர்களென்றும் சொல்லி, தங்கள் தவறான செய்கையை நியாயப்படுத்துவார். இருப்பினும், இவர்களின் செயலும், செய்யும் தவறுக்கு இவர்கள் கொடுக்கும் விளக்கமும் கிறிஸ்தவ ஆண்களுக்கென்று தேவன் திட்டமிட்டவைகளல்ல. இந்தக் காரியம் சரியில்லாததும், பாவமுமாகும். மேலும்,

பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சூழ்நிலை வரும்போது, பாவத்தோடு கூடிய பதிலடியை பெண்கள் கொடுக்க இது தூண்டுகிறது.

### விவாதக் கருத்து



*ஒரு கிறிஸ்தவப் பெண்ணும், ஒரு கிறிஸ்தவ ஆணும், கணவன் மற்றும் மனைவி, கிறிஸ்து மற்றும் சபை ஆகிய இவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமைகளைப் பற்றி, வேதாகமம் எடுத்துரைக்கும் அழகான மற்றும் நடைமுறைக்குரிய கருத்துக்களைத் தங்கள் மனதிலே நிறுத்துவார்களானால், அவர்கள் ஒருவரோடொருவர் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரோ அப்படி அவர்கள் நடந்து கொள்வது எளிதாக இருக்கும். ஒரு வகுப்பறையில் / பாடச் சூழலிலிருக்கும் நீங்கள், இந்த ஒற்றுமை கருத்துக்களினால் உங்கள் கணவனோடு நீங்கள் கொண்டிருக்கும் உறவில் என்ன மாற்றம் நிகழும் என்பதைக் குறித்து விவாதியுங்கள்.*

எந்த ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கும் தன்னைத் தன் கணவனிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருபோதும் கட்டாயம் வரக்கூடாது. கிறிஸ்துவுக்குச் சொந்தமாக இருக்கும் சபைக்கு, எப்பொழுதாகிலும் தன்னைக் கிறிஸ்துவிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்ற நிலை வந்திருக்கிறதா? கிறிஸ்துவக் கணவன், தங்களுடைய அன்பு, தலைமைத்துவம் ஆகியவற்றை, கிறிஸ்து கொடுத்துள்ள மாதிரியைப் பார்த்து அமைத்துக் கொள்ள வேண்டும்.

❀ தன் கணவனுக்கு மரியாதை கொடுப்பதும் அவனுடைய தலைமைக்கு கீழ்ப்படிதலோடு தன்னை ஒப்புக்கொடுப்பதும் மனைவியின் வேலையாயிருக்கிறது. அவன் எந்த சூழ்நிலையிலும் சோதனைக்குட்பட்டு, தன்னை விட்டு வேறொருத்தியை நாடாதபடி, அவனுடைய சரீரப் பிரகாரமான உணர்வுப்பூர்வமான மற்றும் பாலியல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்கிறவளாக இருக்க வேண்டும். இதைப்பற்றி பவுல் கூறும்போது, "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கும் அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன் அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள், மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல. புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல; மனைவியே அதற்கு அதிகாரி. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால், சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்."
(I.கொரி.7:2-5) என்கிறார்.

❀ கணவன், எதில் குறைவுபட்டுக் காணப்படுகிறானோ அதை நிவர்த்தி செய்யும் ஓர் "உதவிக்காரியாக" மனைவி இருக்க வேண்டும். சில நேரங்களில் தலைமைக்கான தகுதியிலும், பெலனிலும் குறைவுபட்டுக் கணவன் காணப்படுவான். அப்படிப்பட்ட நேரங்களில் குடும்பத்தின் தலைவனாக அவன் தன்னைத் தகுதிப்படுத்தி வளருவதற்கு, ஊக்கப்படுத்தி உதவி செய்ய வேண்டுமேயொழிய, மற்றபடி இது தான் சமயம் என்று அவனை ஒதுக்கித் தள்ளி தான் தலைமையை அபகரித்து விடக் கூடாது.

எல்லோருக்கும் எல்லாம் தெரியாது. அதுபோல எல்லாவற்றுக்கும் பதிலும் தெரியாது. மனைவி எந்தெந்தக் காரியங்களில் தெளிவான அறிவுடையவளாயிருக்கிறாளோ அந்தக் காரியங்களைக் கலந்து பேசவும், கணவன் மற்றும் மனைவியின் ஞானத்தோடு காரியங்களை சிந்திக்கவும்,

**விவாதக் கருத்து**

*கணவனும், மனைவியும் பிரச்சினைகளை குறித்தும், முடிவெடுப்பதைக் குறித்தும் கலந்தாலோசிக்கையில், மனைவி சரியான காரண காரியங்களையும், ஆலோசனைகளையும் தந்தால், அவள் கணவனுடைய அதிகாரத்தை தன் கையில் எடுத்துக் கொள்கிறாளா? மனைவியின் ஆலோசனையின் அடிப்படையில் தன் முடிவை ஒரு கணவன் எடுத்தால், அவன் தன் தலைமைப் பொறுப்பிலிருந்து தவறுகிறவனாக இருப்பானா?*



*தன் ஆலோசனைப்படிதான், முடிவுகளிருக்க வேண்டுமென்று வலியுறுத்துவது ஒரு மனைவிக்கு சரியாக இருக்குமா? ஒரு முடிவை எடுத்துவிட்டு, பின்பாக, வேறு பாதையில் போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லி குற்றத்தைத் தன் மனைவியின் பேரில் சுமத்துவது ஒரு கணவனுக்கு சரியாக இருக்குமா? கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் ஒருவர் பேரில் ஒருவர், மாற்றி மாற்றி குற்றத்தை சுமத்தினால், அது ஒரு திருமணத்தின் மேல் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?*

யோசித்து முடிவெடுக்கும்படி தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபிப்பது அதிக பிரயோஜன மாயிருக்கும். இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது, முடிவெடுக்கும்

பொறுப்பு கணவனைச் சார்ந்தது என்று தெளிவாய்த் தெரிகிறது. கணவனின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு, பிறகு அவனோடு கூடச்சேர்ந்து, அந்தக் காரியங்களைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மனைவியைச் சார்ந்தது. ஏனென்றால், இந்த வகையான அதிகாரங்கள் தேவனுடைய சட்டமாகக் கொடுக்கப்பட்டபடியால், வேதத்தின்படி நாம் முடிவுகளை எடுக்கும்போது அவர் நம்முடைய தீர்மானங்களை ஆசீர்வதிக்கிறார்.

சில நேரங்களில், வேறுபட்ட பின்னணி காரணமாக அல்லது வித்தியாசமான அளவிலான திறமையின் காரணமாக, கணவன் ஒருவேளை உடை உடுத்துவது பற்றி அதிக அனுபவமில்லாமல் இருக்கலாம் அல்லது பேச்சு, பழக்கவழக்கங்கள் , நாகரீகம், வேதஅறிவு, அல்லது எந்த ஒரு காரியத்திலும் மனைவியை விட சற்றுக் குறைந்த அறிவுள்ளவனா யிருக்கலாம். அல்லது மனைவி இப்படி குறைகளோடு இருக்கலாம். இருவரிலொருவர், எதில் பெலவீனமாய் இருக்கிறார்களோ அதில் ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்கும்போது, இருவரும் நல்ல பொருத்தமுள்ளவர்களாய் இருக்க முடியும். ஒரு கல்வியறிவு பெற்ற மனிதன் கல்லாத பெண்ணை விவாகம் செய்யும்போது, அவளைத் தன்னுடைய கல்வித்தரத்திற்கு முடிந்தளவு முயற்சித்துக் கொண்டுவராதவரை, நிஜமாகவே தன்னையும், தன் முழு குடும்பத்தின் வளர்ச்சியையும் ஒர் எல்லைக்குள்தான் வைத்துக் கொள்ளமுடியும்.

**❀ மனைவியானவள் தன் கணவன் ஏதாவதொரு வகையில் குறைவுள்ளவானயிருப்பதைக் கண்டால், அவன் அதில் வளர்ந்தேறுவதற்கு உதவி செய்ய வேண்டும், அவனைக் கட்டளையிடுவதாலேயோ அல்லது சிறுமைப்படுத்தவதாலேயோ, வெளிப்படையாக சரிசெய்வதாலேயோ அதை செய்யவும் முடியாது, செய்யவும் கூடாது. மாறாக பொறுமையாய் உதவி செய்ய வேண்டும். சாந்தத்தோடும், உதவி செய்யும் மனதோடும்,**

அமைதலோடும் அவனைத் தைரியப்படுத்தி, மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்.

## குடும்பத்தில் பெண்களின் பங்கு

குடும்பத்தில் பெண்ணின் பொறுப்புகள் என்ன?

❀ தன் குடும்பப் பராமரிப்புக்குத் தேவையான பொருளை ஈட்டுவதும், மனைவி பிள்ளைகளைப் பாதுகாப்பதும், குடும்பத்திற்குத் தலைவனாய் இருப்பதும் கணவனுடைய வேலையாகும். அத்தோடு தன் குடும்பத்தாருக்கும், உலகத்திற்கும் இடையில் நிற்பவனாகவும், அவர்களுடைய எல்லாத் தேவைகளுக்கும் பதிலளிக்கிறவனாகவும் இருக்க வேண்டும். ஓர் ஆண், வெளியில் சென்று வேலை செய்கிறவனாகவும், உலகத்தில் அநீதிகளையும் பலவிதப் பிரச்சினைகளையும் சந்தித்து மேற்கொள்ள வேண்டியவனாகவும் இருக்கிறபடியால், மனைவியைக் காட்டிலும், சரீர பெலத்தோடும், மன பெலத்தோடும் அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். தேவன் அவனுடைய வேலைக்குத் தேவையானபடி, எல்லாவற்றையும் தந்திருக்கிறார். அவன், தன்னுடைய பங்கை மேலும் திறம்பட செய்வதற்கு, எல்லா வகையிலும் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

❀ இதற்கு மாறாக, மனைவி குடும்பத்தையும், பிற தேவைகளையும் கவனிக்க வேண்டுமென்பது தேவத் திட்டம். இதற்குத் தேவையான வேறு வகையான பெலன், அதாவது மென்மைத் தன்மை, இரக்கம், புரிந்து கொள்ளுதல் மற்றும் கீழ்ப்படிதல், மரியாதையுள்ள பிள்ளைகளை வளர்க்கக் கூடிய அதிகாரம் இவையாவும் தேவைப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் எபே. 6:4ல் “பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக” என்கிறார். இது, இரண்டுவிதமான காரியங்களை நமக்குப்

போதிக்கிறது. முதலாவது, பெற்றோர்கள் ஞானத்தையும், பகுத்தறிதலையும் உபயோகப்படுத்தி தங்கள் பிள்ளைகளை எப்படிக் கையாள வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போது, பிள்ளைகள் எதிர்த்துப் பேசுகிறவர்களாக இல்லாமல் கீழ்ப்படிதலைக் கற்று கொள்வார்கள். இரண்டாவதாக, பெற்றோர்கள் பிள்ளைகளை பயிற்றுவிக்கிற காரியத்தில் தேவனுக்கு முன்பாக பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். (இதன் பொருள் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கான செயல்பாடுகள், வேலைகள் இவற்றில் அவர்களை வழிநடத்துதல்) பிறகு, போதனை செய்வது (பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறதென்று தெளிவாக போதிப்பது) பிறகு, இப்படி செய்வதன் மூலம், நல்ல விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக வளருவார்கள்.

## சபையில் பெண்களின் பங்கு

சபையில் பெண்களுக்கு இருக்கும் பொறுப்புகள் என்ன? மீண்டுமாக, ஒரு முழுப் பகுதியின் இரண்டு பாதிகள் இங்கே சொல்லப்படுகிறது.

❀ ஆண்கள், பொதுவான கூடுகையில் தலைமைப் பொறுப்பேற்று போதித்து, வசனங்களைப் படித்து, அதற்குத் தங்களை ஒப்புக் கொடுப்பது, சபையானது தேவச் சட்டத்திலிருந்து வழிவிலகிச் சென்று விடாமலிருப்பதற்கு அவர்கள் செய்யும் வேலையாயிருக்கிறது. ஒட்டு மொத்த சபையின் ஆவிக்குரிய காரியங்கள் சந்திக்கப்படும்படியாக, சபையில் உள்ள ஆண்களில் சிலர் சுவிஷேகர்களாகவும், போதகர்களாகவும், மூப்பர்களாகவும், உதவிக் காரர்களாகவும் எழும்ப வேண்டும். எபிரெயர் 13:17-ல் "உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்

செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" என்று நாம் வாசிக்கிறோம்.

❀ சபையின் முன்னணி சகோதரர்கள், சமுதாயத்தில் இறங்கி வேலை செய்து, யாரெல்லாம் வசனத்தைப் படிக்க வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறார்களோ அவர்களைத் தேடிப்பார்த்து அவர்களுக்குப் போதிக்க வேண்டும். அவர்கள் சுவிஷேத்தை அறிவிக்கிற விஷயத்திலும், தர்ம காரியத்திலும் சபையை வழிநடத்திச் செல்பவர்களாக இருக்க வேண்டும். சபையானது, தன்னுடைய அங்கத்தினர்களின் குடும்பங்களில் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதாகவும், அத்தோடு சுவிசேஷப்பணியை உலகத்தின் பல பாகங்களிலும் பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதால், அவர்கள் சபைக்கடுத்த எல்லாக் காரியங்களிலும் வழி நடத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் ஆண்கள் ஆராதனை நேரங்களில் தலைமை ஏற்று நடத்தவும், போதிக்கவும், ஜெபிக்கவும், பாடல்களை பொறுப்பேற்று நடத்தவும் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும்.

❀ சபையில், பெண்கள் என்ன செய்ய முடியும்? முதலாவதும், மிகவும் முக்கியமானதுமான வேலை என்னவென்றால், கர்த்தருடைய நாளாகிய ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், சபையின் மற்ற அங்கத்தினரோடு சேர்ந்து ஆராதனை செய்யும்படி கூடி வர வேண்டிய பொறுப்பை உணர வேண்டும். சில நேரங்களில் கணவன், மனைவி ஆகிய இருவரும் பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதனைக்கு போவதென்பது மிகவும் கடினமான காரியம். எனவே கணவன் மாத்திரம் ஆராதனையில் கலந்து கொண்டால் போதும் என தீர்மானிப்பார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு பரலோகத்திலிருந்து, பூமிக்கு வந்த தூரம் மிகவும் பெரிதாக இல்லையா? அல்லது சிலுவை மரணம் அவருக்கு மிகவும் கஷ்டமாக இல்லையா?

## விவாதக் கருத்து



உங்களை வளர்ப்பதிலே உங்கள் பெற்றோரின் கொள்கை என்னவென்று நினைக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளை நீங்கள் வளர்ப்பதற்குரிய கொள்கை என்ன? தங்கள் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதில் எந்தக் கொள்கை பெரிதும் உதவுமென்று நம்புகிறீர்கள்? பெரியவர்களாக வளர்ந்திருக்கும் நீங்கள், எப்பொழுதாவது உங்கள் வாழ்க்கையை திரும்பிப் பார்த்து, "இதை நான் கற்றிருந்தால் அல்லது இது எனக்கு சொல்லப்பட்டிருக்குமானால் நான் இப்பொழுது நன்றாக இருந்திருப்பேனே என்று எண்ணியதுண்டா? பெரியவர்களுக்கான பொறுப்புகளுக்குள் நீங்கள் மாற்றப்பட்ட காலகட்டம் உங்களுக்கு எளிதான ஒன்றாக இருந்ததா அல்லது கஷ்டமாக இருந்ததா?

நமக்காக அவர் இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கும்போது, நம்மிடத்தில் அவர் கேட்பது எப்படி அதிகமான காரியமாய் இருக்கமுடியும்? யாராவது அப்படி ஆராதனையில் கலந்து கொள்ளாமல், அதை அற்பமாய் நினைத்து, தேவ பக்தியற்றவர்களாய் நடந்து, நொண்டிச் சாக்கு சொல்வதென்பது அவர்களுக்கு வெட்கமான காரியமாகும். நம்மால் செய்ய முடியாத ஒன்றை தேவன் நம்மை செய்யச் சொல்லிக் கேட்பதில்லை. ஆகையால், கிறிஸ்தவ பெண்கள் ஒவ்வொரு வாரமும் சபை கூடிவருதலின்போதும், கட்டாயம் தங்கள் கணவனுடனும், பிள்ளைகளோடும் கலந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், அப்போதுதான் அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும், சோதனையான நேரத்திலும் தேவனை, முதலாவதாக வைப்பார்கள். அப்படிச் செய்யும்போது மட்டும்தான், அவர் நம்மை முழுமையாக ஆசீர்வதிப்பார்.

**❀ நல்ல ஆவிக்குரிய சிந்தையுள்ள பெண்கள் இல்லையென்றால், எந்தவொரு சபையும், பலம் வாய்ந்த சபையாக இருக்க முடியாது. எனவே, பெண்கள் வேத வசனங்களைப் படித்து, தியானிக்கத் தங்களையே ஒப்புக் கொடுப்பது அவசியமாயிருக்கிறது. இப்படிச் செய்வது, அவர்கள் மற்றவர்களுக்கு, தேவனுடைய வார்த்தைகளின் சத்தியத்தை எடுத்துச் சொல்லும் தகுதி வாய்ந்த மனைவிகளகவும், தாய்களாகவும் மாற்றும். ஆண்களுக்குரிய வகுப்புகள் தவிர, பெண்களுக்கென்றும் பிள்ளைகளுக்கென்றும் தனித்தனி வேத வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். நன்கு, தேர்ந்த, போதிக்கும் திறமையும் ஆற்றலும் கொண்ட பெண்கள் இக்காரியங்களை முன்னின்று நடத்தலாம்.**

ஒரு பெண்ணுக்கு, குழந்தைகளுக்குப் போதிக்கப்படும்படியான பொறுப்பு கொடுக்கப்படும்போது அவள் தன்னுடைய வகுப்புகளுக்குச் செல்லுமுன் பாடக்குறிப்புகளைப் படித்து, ஏதாவது கண்களினால் பார்க்கக்கூடிய உபகரணங்களைத் தயாரித்து, மேலும் அவள் பயன்படுத்த திட்டமிட்டுள்ள மற்ற உபகரணங்களையும் தயாரித்து கவனமாக ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். நேரத்தைக் கடத்துகின்றவளாகவோ அல்லது பிள்ளைகளை அமைதலாக இருக்கப் பண்ணினால்தான் பெற்றோர்கள் தொந்தரவு இல்லாமல் பாடத்தை கற்றுக் கொள்ள முடியுமென்றோ இல்லாமல் தான் செய்கிற காரியம் மிக முக்கியமானது என்ற விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். நமது பிள்ளைகளின் இரட்சிப்பிற்கென்று அவர்களை சத்தியத்தில் நடத்த நாம் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே பெற்றுள்ளோம், எனவே அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பமும் மிக முக்கியமானதாகும்.

**❀ பெண்களும், ஆராதனையின் ஐந்து பங்குகளாகிய பாடுதல், வேதத்தை கற்றுக் கொள்ளுதல், ஜெபித்தல் மற்றும்**

அந்த வாரத்தில் சம்பாதித்த தனது சொந்த வருமானத்திலிருந்தோ, குடும்ப வருமானத்திலிருந்தோ கொடுத்தல், கர்த்தருடைய மரணத்தை நினைவு கூரும்படியான பந்தியில் கலந்து கொள்ளுதல் ஆகியவைகளில், சபையிலுள்ள ஆண் அங்கத்தினர்களின் தலைமையின் கீழ் பங்கு பெற வேண்டும். பெண்கள் ஆராதனைக் கூடத்தை பெருக்குதல், சுத்தம் செய்தல், தூசிகளை அகற்றுதல், சபைக் கட்டிட பகுதியில் தோட்டம் இருந்தால் அதில் உள்ள களைகளை நீக்குதல், இன்னும் ஆராதனைக்கூடத்தில் என்னென்ன வேலைகள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் செய்வதன் மூலம், ஆராதனை சிறப்புடன் துவங்குவதற்கு உதவி செய்யலாம். சபைக் கட்டிடம் அழுக்காகவும், முறையாகப் பராமரிக்கப்படாமலும் காணப்பட்டால் அங்கு கூடிவருகிற சபையார், தேவனுக்கு மரியாதை கொடுக்கிற விஷயத்தில் சிறிதும் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை உலகிற்கு எடுத்துச் சொல்லும். ஆராதனை செய்யும் இடமானது, தேவன்மேல் நாம் வைத்திருக்கும் அன்பையும், மரியாதையையும் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். சொல்லப் போனால், நம்முடைய வீடுகளை, எப்படி சுத்தமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுகிறோமோ அதை விட சிறப்பான முக்கியத்துவம் சபை கூடி வரும் இடத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும்.

❀ அநேக சமயங்களில், புறஜாதி மக்கள் தங்களுடைய விக்கிரக கோயில் கட்டுமானப் பணிக்காகவும், அவைகளை அழகுப்படுத்தவும் வாரி வழங்குவது கிறிஸ்தவர்களை வெட்கப்பட வைக்கும் ஒன்றாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள், ஆராதனைக் கூடம் கட்டும் போதும் சபைக் கட்டிடத்திற்கு வர்ணம் பூசும்போதும் அல்லது வேறு மராமத்து வேலைகள் செய்யும் போதும், விசேஷமாக கொடுப்பதற்கென்று சேமித்து வைக்கிறவர்களாய் இருக்க வேண்டும். ஒருவேளை பெண்கள் புதிய பாடல் புத்தகம் அல்லது வேதாகமம் அல்லது கர்த்தருடைய

**பந்தியை மூடி வைக்கும் துணி ஆகியவற்றிற்கான செலவை ஏற்றுக் கொள்ள முன்வரலாம். சபை கூடுமிடத்தை ஒழுங்காக பராமரிப்பதற்கு பல செலவினங்கள் செய்ய வேண்டியுள்ளது. தேவன் மீது வைராக்கியம் காட்டி, அன்பு செலுத்தி, தங்களால் செய்ய முடிந்ததை, அவருக்குச் செய்யும்படியான தருணங்களை தேவனை நேசிக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் எதிர்பாராமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.**

**❀ பெண்கள், கர்த்தருடைய பந்திக்கான அப்பம், திராட்சை ரசம் போன்றவைகளை ஆயத்தப்படுத்தி உதவ முடியும். நினைவு கூரும்படியான இந்தப் பந்தியில்லாமல் ஆராதனை முழுமையான ஒன்றாக இருக்க முடியாது. ஆண்கள் இப்பந்தியை முன்நின்று வழிநடத்திக் கொடுப்பதால், பெண்கள் அந்தப் பந்திக்கான மற்ற வேலைகளில் உதவலாம். பெண்கள் கர்த்தரின் பந்தி பாத்திரங்களைச் சுத்தம் செய்து கொடுக்கலாம். இன்னும் கர்த்தருடைய பந்திக்கான அப்பமானது வெளியில் இருந்து வாங்கப்படாமல், கிறிஸ்தவர்களின் அன்பின் கரங்களால் மிகுந்த கவனத்தோடு பிசைந்து செய்யப்பட்டு, அது ஒவ்வொரு வாரமும் புதியதாக இருப்பதற்கும் பெண்கள் உதவி செய்யலாம்.**

அப்பம் செய்வதற்கு, கோதுமை மாவு, எண்ணெய், தண்ணீர் ஆகியவைகள் தேவைப்படும். ஒரு அப்பம் செய்வதற்கு 1/2 கப் மெல்லிய கோதுமை மாவும், கொஞ்சம் எண்ணெயும் அவசியப்படும். இதைக் காய்ச்சாமல், மாவை உருட்டும் அளவிற்கு மட்டும் தண்ணீர் ஊற்றப்பட வேண்டும். அதற்குப் பின் அதைப் பந்தைப் போலாக்கி மெல்லிய தட்டை போல உருட்ட வேண்டும். பின்பு தோசைக் கல்லில் கருகாமல் வேக வைக்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்யும் பொழுது நம்மால் நன்றாக செய்ய முடியும்.

# சமுதாயத்தில் பெண்களின் பங்கு

முதல் நூற்றாண்டுக் காலத்தில் பெண்கள் சபைக்கு அவமானத்தைக் கொண்டு வரக் கூடிய அளவில் வாழக்கூடாதென எச்சரிக்கப்பட்டனர். (I.தீமோ. 5:13, 14:தீத்து 2:5) நம்மை சுற்றியுள்ள சமுதாயத்தை விட்டு நாம் பிரிந்து வாழ முடியாது. சுவிசேஷத்தின் ஒளியாக இருக்க வேண்டியது தான் இந்த உலகத்தில் நம்முடைய வேலை. ஆண்களும், பெண்களும் உலகத்திற்கு ஒளியாயிருக்க வேண்டும் (மத்.5:14). நாம் அவ்வாறு இருக்கும்போது இயேசுகிறிஸ்து நம்மோடு இருக்கிறார் (II.கொரி.5:19.20) பெண்கள் எப்போதும் நிதானமாய் இருந்து, தேவனுடைய வழியிலே நடந்து நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம் பழகும்போது ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இப்படியாக நாட்கள் செல்லச் செல்ல கிறிஸ்தவத்தின் மகிமையை, அதின் உண்மையை அவிசுவாசிகளுக்குக் கற்றுக் கொடுக்க முடியும்.

பெண்கள் தங்களுடைய வாயின் வார்த்தைகளால் மற்றவர்களுக்கு போதிக்க முடியும். அயலகத்தாருடைய வீட்டிற்குச் சென்று வேத வசனத்தை கற்றுக் கொடுக்க வேத வகுப்புகள் ஏற்பாடு செய்யவேண்டும். சில வேளைகளில் தங்களுடைய அயலகத்தாரை ஒரு காலை வேளையிலோ அல்லது மாலையிலோ வீட்டிற்கு வரும்படி அழைத்து அவர்களுக்கு ஒரு டீ, காபி அல்லது சிற்றுண்டி கொடுத்து சத்தியத்தை அவர்களோடு படிக்க வேண்டும்.

பெண்கள், மற்றவர்களை ஆராதனைக்கு வரும்படி அழைக்க முடியும். சில பெண்கள், அக்கம் பக்கத்திலுள்ள குழந்தைகளை வேத வகுப்பில் கலந்து கொள்ளவும், தேவனைப் பற்றிக் கேட்கவும் தங்களுடன் அழைத்து சென்றதினால், தேவனுக்கென்று அநேகர் ஆதாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

**முடிவுரை :**

பெண்கள், தங்கள் கணவன்மார்களோடு, எவ்வகையிலும் போட்டியிடாமலே காரியம் ஆற்றுவதற்கு வாழ்நாள் முழுவதும், அவர்களுக்கு நிறைய வேலைகள் உண்டு. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய குடும்பத்திலும், சபையிலும் நன்றாக இருக்கும்படியாகவும் நம்முடைய ஆத்துமாவை வாழ வைக்கும்படியாகவும், நம்முடைய பங்கை சிறப்பாகச் செய்வதற்கு தேவன் உதவி செய்கிறார். நாம் அவருடைய வார்த்தைகளின்படி செய்து, அவருக்குப் பிரியமாய் வாழ்வோமாக!.

**வகுப்புச் சூழலுக்கான வினாக்கள்**

1. பொறுப்புகளின் நான்கு பகுதிகளை கூறு?
2. திருமணத்தில் கணவனுக்கிருக்கும் பொறுப்புகள் என்ன?
3. திருமணத்தில் மனைவிக்கிருக்கும் பொறுப்புகள் என்ன?
4. கிறிஸ்தவக் கணவன், மனைவிகள் .................................................. தவிர்க்கும்படியாக தங்கள் தாம்பத்திய தேவைகளை சந்திக்கும்படி கட்டளை இடபட்டிருக்கிறார்கள். ............................ ........................................... தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் .................................. ஒருவரைவிட்டு ஒருவர் பிரியக்கூடாது.
5. ஒரு ஆண் சிறந்த தலைவனாக இல்லை என்றால் அவனுடைய மனைவி எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
6. கணவனும் மனைவியும், குடும்ப மற்றும் வீட்டு விசயங்களை ஒருவரோடொருவர் கலந்துரையாடுவது அவசியமா? கருத்து வேறுபாடு எழும்பினால், முடிவுகளை எடுக்கும்படி தேவன், வீட்டிற்கான தலைமைப் பொறுப்பை யாரிடம் கொடுத்திருக்கிறார்?

7. கணவனும் மனைவியும் ........................., ........................... ...........................
............................. ............................ ............................. ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும்.

8. வீட்டிலே கணவனுடைய பணிகள் என்ன?

9. தங்கள் பணிகளை செய்யும்படி தேவன் ஆண்களை எப்படி ஆயத்தப்படுத்துகிறார்?

10. வீட்டிலே மனைவியினுடைய பொறுப்புகள் என்ன?

11. மனைவிகளும் தங்கள் பணிகளை ஆற்றும்படி தேவன் அவர்களை எப்படி ஆயத்தப்படுத்துகிறார்?

12. பிள்ளை வளர்ப்பிலே பெற்றோருக்கு இருக்கும் இரண்டு கடமைகள் யாது?

13. சபையிலே கணவனின் பொறுப்புகள் என்ன?

14. சபையிலே ஆண்கள் என்ன பணிகளைச் செய்யும்படி ஆயத்தமாக வேண்டும்?

15. சபையிலே பெண்கள் என்ன பணிகளைச் செய்யவேண்டும்?

16. ஆராதனைக் கூடத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளும் “தாழ்மையான பணி” முக்கியமானதாக இருப்பதால், ஆணும், பெண்ணும் செய்யும் வேலையாக அது அமையுமா?

17. பெண்கள் ........................... கென்று புளிப்பில்லாத புதிய ........................... உண்டாக்கலாம்.

18. சமுதாயத்தில் ஆண்களுக்கு இருக்கும் கடமைகள் யாது?

19. சமுதாயத்தில் பெண்களின் கடமைகள் யாது?

20. இந்த படிப்பிலிருந்து நாம் பார்ப்பது என்னவென்றால், தங்கள் கணவரோடு ..........................., ஸ்திரீகளுக்கு ........................... ...........................
........................... உண்டு.



# கேள்விக்கான பதில்கள்

## பாடம் - 1

1. பெண்கள், ஆண்களுக்கு வேலைக்காரிகளே தவிர அதைவிட மேலானவர்களல்ல, பிள்ளைகளைப் பெறவும் வீட்டை நடத்தவும் தான் அவர்கள் லாயக்கு, பெண் என்ற நிலையில் அவள் இரட்சிப்படைய முடியாது என்பதே சில ஆண்களின் எண்ணமாக இருக்கிறது.

2. ஆணின் மீது பெண் அதிகாரம் பெறும்படியாக.

3. விரோதத்தையும், உடைந்து போன குடும்பங்களை உருவாக்கும் போட்டி மனப்பான்மை.

4. பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கினார்.

5. ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினார்.

6. துணையாயிருக்க, அதிகாரம் செய்யக், மிதிக்கப்படவும்.

7. புதிய குடும்பத்தை உருவாக்க வேண்டும்.

8. ஆதாம், ஆம்

9. இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கவும்; இருவரும் சமமானவர்களாயிருக்கவும்

10. ஆம்

11. இருவரும் இணைந்து ஒன்றாக குடும்ப பொறுப்பை கவனித்துக் கொள்ளும்படி வளரவும்; தங்கள் பெற்றோரின் மேற்பார்வை இல்லாமல் இருவரும் இணைந்து வெகு விரைவிலே அனுபவ அறிவும், காரியங்களை அணுகுவதில் பக்குவமடைய உதவியாயிருக்கும்.

## பாடம் - 2

1. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவின் பிரமாண

2. முதல் வரலாற்று நிகழ்வு; முதலாவது, ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்.

   இரண்டாம் வரலாற்று நிகழ்வு : ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

3. இல்லை, ஆம், இல்லை.

4. "தலைமைத்துவமென்றால்" ஒரு ஆண், பெண்ணை விட ஒருபடிமேலே இருந்து, தன் குடும்பத்திற்கு முன் மாதிரியாக, வழி காட்டியாக இருக்க வேண்டுமென்பது.

   "பொறுப்புகள்" என்றால் தன் தலைமைத்துவத்தைக் குறித்து, நன்மையானாலும், தீமையானாலும் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டுமென்பதாகும்.

5. இல்லை; இன உற்பத்தி முறையிலே பெண்ணும் சரிபாதி பங்குடையவளாக இருப்பதாலும், அவள் ஆணை முழுமைபடுத்தும் படி வடிவமைக்கப்பட்டிருப்பதாலும், ஒருவர் தேவையை ஒருவர் சந்திக்கும்படியாக அமைக்கப்பட்டிருப்பதாலும் அப்படியில்லை.

6. ஏனெனில் தன் மீது அன்பு கூற வேண்டுமென்றளவில், அவரால், சிருஷ்டிக்கப்பட்டதாலல்ல, மாறாக, தானாக முன் வந்து பரஸ்பர உணர்வோடு அன்பு கூறுவதையே விரும்பினார்.

7. மரணத்தைப் பற்றி எச்சரித்தார்.

8. அவர்கள் கண்கள் திறக்கப்படுமென்றும், நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் ஆவார்கள் என்பதுமே, சாத்தான் தந்த உறுதிமொழி.

9. புசிப்புக்கு, பார்வைக்கு, புத்தியை

10. நம்பத்தகுந்தவள், இளகும் இருதயம் உடையவள், தன் குடும்ப நலனில் அக்கறை காட்டக் கூடியவள்

11. தன் கணவனிடமிருந்து தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொண்டது; கணவனும் அப்படி செய்யும்படி அனுமதித்தது.

12. மிகப்பெரிய மீறுதலையும், மனிதக் குலத்தின் வீழ்ச்சியையும் விளைவித்தது.

## பாடம் - 3

1. ஆணே, குடும்பத்திற்கு தலையாக இருக்கவேண்டுமென்று எண்ணினார்.

2. புதிய கட்டுப்பாடுகளும், சட்டங்களும் உருவாக்கப்பட்டது.

3. முதலாவது, ஆதாமிடமிருந்து விளக்கத்தைக் கேட்டார்; ஏனென்றால் அவனுக்கே அவர் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை கொடுத்திருந்தார்.

4. மனிதன் என்ன செய்தாலும் சரி, தேவன் தன் முறையை தானே மாற்றமாட்டார் என்பது.

5. ஆனால், ஆதாமாள் ஏனெனில் அவன் தலைமைப் பொறுப்பை நிறைவேற்றத் தவறினான்.

6. பிள்ளை பெறும்போது, வேதனையைப் பெருகப் பண்ணுவேன். வேதனையோடு பிள்ளை பெறுவாய் என்றார்.

7. உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்; அவன் உன்னை ஆண்டு கொள்வான் என்று ஏவளின் நிலையை சொல்லி சிருஷ்டிப்பின் போதிருந்ததை விட கீழ்மைபடுத்தினார்.

8. வேதனையோடே

9. ஆம்

10. 1 பேதுரு 3 : 1-7 வசனங்களை வாசியுங்கள்.

11. அன்போடும், புரிந்து கொள்ளும் மனப்பான்மையோடும்.

12. இல்லை, தேவன் தன்னுடைய முறையை மாற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை, மாறாக, ஏற்ற துணையாக இருக்குமவள், தன் புருஷனுக்கு தேவன் தந்த கடமையை சரியாக நிறைவேற்ற உதவி செய்ய வேண்டும்.

13. புருஷனுக்கு தலை கிறிஸ்து, ஸ்திரீக்குத் தலை புருஷன், கிறிஸ்துவுக்கு தலை தேவன் என்று அதிகாரத்தை வரிசைப்படுத்துகிறார்.

## பாடம் - 4

1. ஏதேன் தோட்டத்திற்கும், ஆதாம், ஏவாளின் மீறுதலுக்கும் அழைத்துச் செல்கிறது.

2. ஸ்திரீயின் வித்து, சர்ப்பத்தின் (சாத்தானின்) தலையை நசுக்கும் என்ற வாக்குத்தத்தத்தை அவர் செய்தார்.

3. ஸ்திரீயினிடத்தில் பிறப்பார், கன்னிமரியாளிடம் பிறப்பார்.

4. மனிதகுலத்தில் கீழ்ப்படிகிற ஸ்திரீகள் இரட்சிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக இருக்கும்.

5. திருமணம் செய்யவும், பிள்ளை பெறவும், வீட்டை நடத்துகிறவர்களுமாய் சொல்கிறது.

6. "பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி", 5.

அவர்களுக்கு போதிக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

7. ஸ்திரீகளுக்கான இரட்சிப்பின் திட்ட

8. தடைகளிலும், கவனச் சிதறல்களிலும் அவள் பொறுமையாயிருப்பதால், தன்னை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பதில் இன்னும் பெலப்படுகிறாள்.

9. நல்ல தாய்க்கு இருக்கவேண்டிய குணங்கள்; சாந்தம்; பொறுமை, இளகிய இருதயம், புரிந்து கொள்ளும் மனது, உறுதியான அன்பு.

10. தனக்கு வரும் சவால்களை சந்திப்பது, அவளை பெலப்படுத்தி, தாயின் குணங்களை வளரச் செய்யும், இத்தோடு அன்பும் சேர்ந்து கொண்டால் வளர்வது உறுதி.

11. உண்மைத் தன்மை.

12. அனுதினமும், ஜீவனுள்ள விசுவாசத்தில் அவள் நடந்தாலொழிய, தன் பிள்ளைகளுக்கு அப்படிப்பட்ட விசுவாசத்தை அவளால் கொடுக்க முடியாது.

## பாடம் - 5

1. தேவன் அவனுக்கு, புத்தியையும், உணர்வுகளையும், அழியாமையுள்ள ஆவியையும் கொடுத்தார்.

2. இதன் மூலம், தேவனுக்கும் அவருடைய சிருஷ்டிப்புக்கும் மத்தியில் அன்பும், ஐக்கியமும் இருக்கும்படியாக.

3. ஆதாமுக்கு, பாலியல் ரீதியாக, சரீரத்தில், மனதில், உணர்வுகளில், சமுதாயத்தில் ஆவிக்குரிய காரியங்களில் ஏற்ற துணையாக இருந்திடல் வேண்டும்.

4. ஆதாமுடையது, ஏன் என்றால், அவள் அவனிடத்திலிருந்து உருவாக்கப்பட்டாள், பூமியின் மண்ணிலிருந்தல்ல.

‘அவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தின் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எண்ணப்படுவாள் என்றான்”

6. ஆம்

7. வாழ்நாள் முழுவதும், ஒருவனுக்கு ஒருத்தி என்றிருக்க வேண்டுமென்பதே அவர் எண்ணம்.

8. மத்தேயு 19 : 4 – 6 வசனங்களை பாருங்கள்.

9. ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்துகொள்வதிலும், புரிந்து கொள்வதிலும், ஒருவரையொருவர் பெலப்படுத்தி, தாங்கி, துணையாகயிருப்பதிலும், சுகவீனத்தில் கவனிப்பதிலும், இன்னும் அநேக காரியத்திலும் உதவியாக இருக்கும்.

10. நீங்களே விவாதியுங்கள்.

11. இவ்வுலகத்திற்குள்ளாக குழந்தைகளை கொண்டுவருவது, கணவனையும், குழந்தைகளையும் கரிசனையாக கவனிப்பது, வீட்டை நன்றாக நடத்துவதுமேயாகும்.

12. ஆம்.

13. அடுத்த சந்ததியின் வாழ்க்கையையும், ஆத்துமாவையும் நித்தியத்திற்கு ஆயத்தம் செய்யும் சிலகியத்தை.

14. ஒழுக்கத்திலும், உண்மையிலும் குறைவு, உடைந்த குடும்பங்கள், குற்ற சதவீதம் கூடுதல் ஆகிய இவைகள் சில விளைவுகளாகும்.

15. 1) பிள்ளைகளை பெற்று, வளர்ப்பது, வீட்டை கவனிப்பது.

2) எந்தெந்த வழிகளில், தன் கணவனுக்கு சொத்தாக இருக்கமுடியுமோ,

அதில் அப்படியிருக்க ஆயத்தமாவது.

3) கணவனின் குடும்பத்தாரோடு நல்ல உறவை வளர்ப்பது.

4) ஆவிக்குரிய ரீதியில் ஏற்ற துணையாக இருப்பது.

16. ஆம். குணசாலியான ஸ்திரீக்கு, அவளின் கணவன் கொடுத்த பொறுப்புகளையும், அதிகாரத்தையும் நீங்கள் அறிய நீதிமொழிகள் 31ம் அதிகாரத்தை வாசிக்கவும்.

17. ஆம். "எஜமான்" என்ற ரீதியிலிராமல், அல்லது சிறுமைப்படுத்தும் நோக்கத்தோடல்லாமல், சாந்தத்தோடும், அன்போடும், தன் எண்ணத்தை உதவி செய்யும் மனப்பான்மையோடு அன்பான வழியில் தெரிவிக்க வேண்டும்.

## பாடம் - 6

1. இல்லை, அவர் எழுதியது பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின் படியாகத் தான்.
2. ஒருவருமில்லை.
3. ஒருவருமில்லை.
4. இல்லை.
5. விவாதியுங்கள்.
6. வழிநடத்தும்படி ஆயத்தமாவது மாத்திரமல்ல, தன்னால் முடிந்தவரை சிறப்பாக வழிநடத்த ஆயத்தமாக வேண்டும்.
7. மூப்பர்கள், உதவிக்காரர்கள், பன்மையில்
8. விவாதியுங்கள்.
9. விவாதியுங்கள்.
10. ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த

அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" என்கிறது.

11. a. அவன் ஒரு மனைவிக்கு புருஷனாயிருக்க முடியாது.

b. தன் கணவன் மீது அதிகாரம் செலுத்த தடை செய்யப்பட்டிருக்கும் போது அவள் சபையின் மீது அதிகாரம் செலுத்த முடியாது.

12. ஆம், இல்லை.

13. சில சபைகள், உதவிக்காரர்களை கொண்டதாக இருக்கிறது (மூப்பர்களில்லை) இவர்களே மூப்பர்களுடைய பணியை செய்கிறார்கள்; சில சபைகள் "போதகர்கள்" என்று அழைக்கப்படும் பிரசங்கிமார்களை கொண்டதாக இருக்கிறது, அவர்களுக்கு மூப்பர்களுக்கான தகுதியுமில்லை, அவர்களுடைய பணிகளை ("மூப்பர்கள்", "போதகர்கள்" ஆகியவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கும் பணிகளை) செய்வதுமில்லை.

14. ஏனெனில், தேவன் எழுதியதை மனிதன் மாற்ற அவனுக்கு அதிகாரமில்லை.

## பாடம் - 7

1. இப்பொழுது ஆண்கள் செய்யும் எதையும்

2. பிரசங்கிகள், பிஷப்புகள், ஆசாரியர்கள் இல்லை, இன்றைக்கு பயன்படுத்தும் அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவதில்லை.

3. வேதாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்டதாக இருக்கிறது, அது மனித அதிகாரங்களினால் கொடுக்கப்படவில்லை.

4. "...... என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதென்றிருக்கிறது நான் சொன்ன, வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்றார்"

5. இல்லை, மத்தேயு 4 : விழுந்து போன தூதனாக இருக்கிற சாத்தான், இயேசுவிடம் சில காரியங்களை செய்யும்படி சொல்கிறான். அவன் சொல்வதற்கு வேதத்தையும் ஆதாரமாக வைப்பதுபோல காண்பிக்கிறான். உண்மையில் அவன் அந்த வேத பகுதியை தவறாகவே பயன்படுத்துகிறான்.

6. சரி

7. சமுதாயம், இல்லம், கர்த்தருடைய சபை.

8. விலையேறப்பெற்ற வஸ்திரத்தினால் தங்களை அலங்கரியாமல், ஸ்திரீகள் தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், ....... ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்.

9. "ஆண்கள்" என்று பொருள்படும்.

10. 1. ஆதாமே முதலில் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்

2. ஸ்திரீயே வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்கு உட்பட்டாள்.

## பாடம் - 8

1. இல்லை.

2. நடத்தையினாலும், மற்றவர்களோடு பழகுகிறவிதத்தினாலும்

3. தன் கணவருக்கு உண்மையாக இருப்பதினாலும், தேவ பயத்தோடு கூடிய தன் கற்புள்ள நடத்தையினாலும் தன் கணவருக்கு போதிக்கலாம்.

4. ஆம், கிறிஸ்துவுக்கு மிக மோசமான எதிரிகளாக, அவருடைய நாமத்தை அரை-குறை இருதயத்தோடு தரித்திருக்கிறவர்களே ஆவர்.

5. அவர்களுடைய பிள்ளைகளுக்கு.

6. ஆம், ஆக்கில்லாவுடன் சேர்ந்து, பிரிஸ்கில்லாளும், அப்பொல்லோவுக்கு போதித்திருக்கிறார்கள்.

7. பிள்ளைகளுக்கும், மற்ற ஸ்திரீகளுக்கும்.

8. தலைமைத்துவப் பணிகள்

9. ஆண் கிறிஸ்தவர்கள்; ஆண்களே; ஆராதனையை வழிநடத்துவதும், போதிப்பதும்.

10. இல்லை. ஏனெனில் தேவன் கொடுத்திருக்கும் அதிகாரத்தை, முறைமையை மாற்றுவதற்கு எந்த ஒரு மனிதனுக்கும் அதிகாரமில்லை.

11. ஆம், பெண்கள் செய்யக் கூடாததைப் பற்றி முணுமுணுப்பதும், விவாதிப்பதையும் விட்டுவிட்டு, அவர்கள் என்ன செய்ய தேவனால் அனுமதித்திருக்கிறார்களோ அதை செய்ய முயற்சிக்க வேண்டும்.

## பாடம் - 9

1. நாம் வேதாகமத்தை மீறாதவரைக்கும், மறுபரிசீலனை செய்வதில் தவறேதுமில்லை.

2. புருஷன்; கிறிஸ்து

3. ஏன் என்றால், விவாதம் உண்மையில், தலைமைத்துவம், அதிகாரம், தேவனுடைய ஒழுங்குமுறைகள் இவைகளைப் பற்றியதாக இருக்கிறது, பெண்களின் பங்கு பற்றியது மாத்திரமல்ல.

4. பரிசுத்த ஆவியானவரின்; அதிகாரத்தின்; மனித எழுத்தாளர்களின் கருத்துக்களல்ல.

5. உண்மையில் அவள், வேதாகமத்தின் தெளிவான 8.

போதனையை மீறும்படி சொல்கிறாள்.

6. ஆண்டவருக்கும் அதிகாரத்தை மட்டும்.

7. துணிகரமான பாவம்; வேதாகமம் இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

8. இல்லை. வேதத்தில் இதற்கான அதிகாரம் இல்லை.

9. இப்படிப்பட்டவளை பின்பற்றுவதை தேவன் தடை செய்திருக்கிறார்.

10. தேவனாகிய கர்த்தரைப், பயந்து, கற்பனைகளைக் கைக்கொண்டு, சத்தத்தைக் கேட்டு, சேவித்து, பற்றிக் கொள்வீர்களாக

11. அவளை மரணத்திற்குள்ளாக்க வேண்டும் என்கிறார்.

12. திருத்தி எழுத முற்படுவது, மாற்றுவது; இவைகள் கடுமையான குற்றங்களாகும்.

## பாடம் - 10

1. ஸ்திரீக்குத் தலை புருஷன்; புருஷனுக்குத் தலை கிறிஸ்து; கிறிஸ்துவுக்குத் தலை தேவன்.

2. தேவன் ஏற்படுத்திய அதிகார வரிசை முறையை பற்றிய; ஒரு போதும்

3. விவாதியுங்கள்.

4. விவாதியுங்கள்.

5. தலையை முக்காடிடாமலிருப்பது; அவலட்சணமாக.

6. ஸ்திரீயானவள் தேவனை, ஜெபம் பண்ணுகையில், மூடிக் கொள்ளாமலிருக்கிறது, இலட்சணமாயிருக்குமோ

7. முடியையோ அல்லது முக்காடையோ

ஆண்கள்; முடியை குறைந்த நீளமுடையதாக வைத்துக் கொள்வார்கள் எந்தவித செயற்கை முக்காடில்லை; பெண்கள் முடியை நீளமாகவும், செயற்கையாக ஏதோ ஒரு முக்காடிட்டிருப்பார்கள்.

9. விவாதியுங்கள்.

10. ஆண்கள் நீளமாக முடிவளர்ப்பது அவலட்சணமாக இருக்கிறதென்றும், பெண்களுக்கு அது முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்கிறார்.

11. அது மகிமையாகவும், முக்காடாகவும், கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள்.

12. முக்காடிருந்தாலும், இல்லாமலிருந்தாலும் இயற்கையாக கொடுக்கப்பட்டிருக்கும் நமது சரீர உறுப்புகளை வைத்தே தேவனுக்கு ஏற்புடைய ஆராதனையை செய்யலாம் என்பது.

13. ஒன்றுமில்லை.

14. ஆம்

15. ஆம்

16. ஆம்

17. இல்லை, இல்லை

18. ஆம்

19. எதிராளியானவன்; துஷிப்பதற்கு; இடங்கொடாமல்.

20. விவாதியுங்கள்.

## பாடம் - 11

1. பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் இன்றும் ஜனங்களுக்கு இருக்கிறதாகவும், அற்புத அடையாளங்கள் இருப்பதாகவும்; அந்நிய பாஷை பேசுதல், மற்ற அற்புதங்கள் செய்யும் வரமிருப்பதாக இவர்கள் நினைக்கிறார்கள்.

2. கிறிஸ்துவின் மரணத்திற்கு பின் வந்த பெந்தெகொஸ்தே நாளில் ; 1914; 1902; 1898.

3. கிறிஸ்துவின் பெயரில் அழைக்கப்படவேண்டும்; யூத பண்டிகையின் பெயரில் அல்ல.

4. இல்லை. கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய ராஜ்யத்தை பற்றியுமே வலியுறுத்திப் பிரசங்கிப்பட்டது.

5. அற்புத அடையாளங்கள் கொடுக்கப்பட்டதன் நோக்கம், வேத வசனத்தை உறுதிபடுத்தும் படியாகத்தான்; பரிசுத்த ஆவியானவரால் வேத வசனம் வெளிப்படுத்தப்பட்டு உறுதியாக்கப்பட்டவுடன்; அற்புத அடையாளத்திற்கான தேவனுடைய நோக்கம் நிறைவேறியது.

6. சகலமும், நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்; இல்லை.

7. சபைகளிலே, ஸ்தீரியானவள் அமைதலாயிருக்க வேண்டும், பேசும்படி அவளுக்கு உத்திரவில்லை.

8. பரிசுத்த ஆவியானவர் தான் எழுதிக் கொடுத்த மாதிரியை விடுத்து வேறுவிதமாக ஒருவரை வழிநடத்த மாட்டார்.

9. கேட்கிறவர் புரிந்து கொள்ளாத மொழியில் பேசுவதால் என்ன பயன்? அது ஆகாயத்தில் பேசுவது போலாகும்.

10. உலகத்திலுள்ள மொழிகள்.

11. கேட்கிறவர்கள் புரியாத 1000 வார்த்தைகள் பேசுவதை விட,

புரியும்படி 5 வார்த்தைகள் பேசுவதையே தெரிந்து கொள்வேன் என்கிறார்.

12. ஆம், இல்லை.

13. தெரிந்தெடுக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் மீது கைகளை வைப்பதின் மூலமாக.

14. இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வரம் கொடுக்கப்பட்டது.

15. ஒரு மொழியைப் பற்றி அறிவு அற்புதவிதமாக கொடுக்கப்பட்டது.

16. இல்லை; அப்படியிருந்தால், மொழிபெயர்ப்பாளனுக்கு அவசியமில்லா மலிருந்திருக்கும்.

17. ஆம், ஆம்.

18. இல்லை; இல்லை.

## பாடம் - 12

1. பாடத்தின் முதல் 4 பக்கங்களை பார்க்கவும்.

2. ஒரு தாயாக இருக்கப் போவதில் வரும் அன்பும், பொறுப்புணர்வும்

3. ஆம், அநேக நேரங்களில் இப்படித்தானிருக்கிறது.

4. தன் குடும்பத்தை ஆதியிலிருந்தே பயிற்சியளிப்பதன் மூலம்.

5. விவாதியுங்கள்.

6. I கொரிந்தியர் 16 : 2ல் போதிக்கப்பட்டுள்ளது போல, தங்கள் வருமானத்திற்குத்தக்கதாக தேவனுக்கு கொடுக்கும்படி போதிக்க வேண்டும்.

7. ஆண் பிள்ளைகளுக்கு, தாழ்மையுள்ள, அன்பாக தன் அதிகாரத்தை செலுத்தும்படியாகவும், பெண் பிள்ளைகளுக்கு, தன் கணவனுக்கு கீழ்ப்படிதலுள்ள ஏற்ற துணையாயிருக்கும்படியாகவும், போதிக்க வேண்டும்.

8. அது ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை என்றும், சோர்வூட்டக் கூடியதாகவும் இருப்பதாக சொல்கிறார்கள்.

9. தங்கள் பெற்றோர்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ள முடியும்.

10. தேவன்.

11. சிறுபிள்ளையாக இருக்கும் போதிலிருந்தே, தேவனே எல்லாருக்கும் தலைவராயிருக்கார் என்றும், பிள்ளைகளை கவனமாக வளர்ப்பதில் பெற்றோர் அவருக்கு கீழ்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

12. அவர்களின் பெற்றோர் தேவன் கொடுத்த சட்டத்திற்குட்பட்டிருப்பதை கற்றுக் கொள்ள வேண்டும்.

## பாடம் - 13

1. 1. திருமணத்தில் 2. வீட்டில் 3. சபையில் 4. சமுதாயத்திலும்.

2. மனைவிக்கு தலையாக இருக்கிறான், குடும்பத்தை கவனிப்பவனும், பாதுகாவலனும்

3. தன் கணவனுக்கு மரியாதை செலுத்தி, அவனுடைய தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு, அவனுடைய சரீர, உணர்வுப் பூர்வமான பாலியல் தேவைகளை சந்திப்பது.

4. சோதனையை, உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு சம்மதித்தாலன்றி.

5. அவனுக்கு உதவியாக இருந்து, ஊக்கப்படுத்தி, அவனை பெலன் அடைய செய்யவேண்டும்.

இவளுடைய ஆளும் தன்மையில் அவன் சோர்ந்துபோகும்படி செய்யக் கூடாது.

6. ஆம். குடும்பத் தலைவன்.

7. பொருந்தி வருகிற எல்லா விஷயங்களிலும், வளரவும் விருத்தியாகவும்,

8. தன் குடும்பத்திற்கான வருமானத்தை ஈட்டவும், குழந்தைகளையும், மனைவியையும் காப்பாற்றவும், வீட்டிலே தலைவனாக இருக்கவும், உலகத்திற்கும், குடும்பத்திற்கும், மத்தியிலிருக்கவும், குடும்பத்தாரின் தேவைகளை சந்திக்கிறவனாயிருக்கவும் வேண்டும்.

9. உலகத்திலுள்ள அநியாயத்தையும், கடுமையான காரியங்களையும் அவன் கையாளும்படி சரீர மற்றும் உணர்வுப் பூர்வமான பெலனை கொடுத்திருக்கிறார்.

10. வீட்டைக் கவனிக்கவும், குடும்பத்தின் தேவைகளை சந்திக்கவும்.

11. வேறுவகையான பெலனை தந்திருக்கிறார். இளகிய நெஞ்சம், இரக்கம், புரிந்து கொள்ளுதல் இவைகளையும் கொடுத்திருக்கிறார்.

12. a) குழந்தைகளை நடத்துவதிலே ஞானத்தையும், பகுத்தறிவையும் பயன்படுத்தி, அவர்கள் எதிர்த்து நிற்காமல், கீழ்ப்படியும்படி கையாள வேண்டும்.

b) தேவனுக்கு முன்பாக பொறுப்புமிருக்கிறது (அது என்னவென்றால்,கிறிஸ்தவர்களாக இருக்கும் நடவடிக்கையிலும் கிரியைகளிலும் அவர்களை வழிநடத்துவதாகும்). அப்படிச் செய்தால் அவர்கள் தாமே விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக வளருபவர்கள்.

13. தலைமைத்துவம், போதனை, வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால், இவைகளை செய்தால், சபையை

அவர்கள் தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல மாட்டார்கள்.

14. சுவிசேஷகர்கள், போதகர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள்.

15. சிறந்த கிறிஸ்தவப் பெண்ணை உருவாக்குவது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு போதிக்குமளவுக்கு அவர்களை வளர்ச்சியடைய செய்தல், சபையின் அனுதின காரியங்களிலும், ஆராதனையிலும் பங்கு பெறுதல்.

16. ஆம், சரியாக பராமரிக்கப்படாத சபை கூடுமிடங்கள், ஆராதிக்கிறவர்கள் தேவனுக்கு மரியாதை செலுத்துவதில் அக்கறையில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று காட்டுகிறது.

17. கர்த்தரை நினைவு கூரும் பந்திக், அப்பம்.

18. தேவையிலிருப்போருக்கு உதவவும், சுவிசேஷத்தை எடுத்துக் கூறவும் வழி நடத்துவது.

19. தெய்வ பக்தியான வாழ்க்கை வாழ்வதினால் மற்றவர்கள் கிறிஸ்துவை அவமானப்படுத்தாமலிருக்கவும், கிறிஸ்தவக் குணங்களையும், ஒழுக்கங்களையும் நடத்தைகளையும் தங்கள் வாழ்க்கை முறையிலும், வாயின் வார்த்தையிலும் போதிக்க வேண்டும்.

20. போட்டியிடாமலே, பணிகள் நிறைந்த வாழ்க்கை உண்டு.

